பொழிவு - 17
குவிப்பு - 06
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
யூன் 2014
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா


THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 161/ News / 2014"

## புனித பூமிக்கான திருயாத்திரையில் மன்னார் மக்கள்



இலங்கை குர்சிலோ இயக்கத்தினது 50 ஆண்டு நிறைவையொட்டி தேசிய குர்சிலோ சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இயேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றோடு தொடர்புடைய புனித பூமியைத் தரிசிக்கும் யாத்திரைப் பயணத்தில் 96 பேர் இலங்கையிலிருந்து பங்குபற்றி பயனடைந்தனர். இவர்களில் 9 பேர் மன்னாரைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் யார் என்ற விபரத்தை அறிய 13ஆம் பக்கத்தைப் பாருங்கள்.

## முதல் தமிழ் கர்தினால் லூர்துசாமி ஆண்டகை இறையடி



உலகின் முதல் தமிழ் கர்தினாலாகவும், இந்தியாவின் நான்காவது கர்தினாலாகவும், உரோமன் திருஅவையில் (Roman Curia) அங்கம்வகித்த முதல் ஆசிய கர்தினாலுமாக விளங்கிய கர்தினால் துரைசாமி சைமன் லூர்துசாமி ஆண்டகை தனது 90வது வயதில் கடந்த யூன் 2ஆம் திகதி உரோமில் இறையடி சேர்ந்தார். இவர் 1985ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் கர்தினாலாக உயர்த்தப்பட்டார்.

இந்தியாவின் புதுச்சேரி மறைமாவட்டத்தின் கல்லேரி என்ற கிராமத்தில் 1924ஆம் ஆண்டு பிறந்த இவர் கிழக்கத்திய திருச்சபைகளின் தலைவராகவும் (Prefect for the Congregation for Oriental Churches), மக்கள் மறைபரப்புச் சபைப் பேராயத்திலும் (Congregation for the Evangelization of Peoples) பணியாற்றியுள்ளார்.


(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# திருத்தந்தையின் இலங்கைப் பயணம் உறுதி!

## கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அறிவித்தார்!

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் இலங்கைக்கு மூன்று நாள் பயணம் மேற்கொள்ளவுள்ளதை கொழும்புப் பேராயரும் கர்தினாலுமாகிய மேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகை உறுதிப்படுத்தியுள்ளார். கடந்த யூன் மாதம் 10 ஆம் திகதி இது தொடர்பாக கர்தினால் அவர்கள் ஊடகங்களுக்கு செய்தி வெளியிட்டிருந்தார்.

ஜனவரி 13 - 15ஆம் திகதி வரையன காலப்பகுதியில் இலங்கைக்கான திருத்தந்தையின் விஜயம் அமைந்திருக்கும். கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் தனது பாரியார் சகிதம் திருத்தந்தையைச் சந்தித்தபோது இலங்கைக்கு விஜயம் செய்யும்படியான இலங்கை ஜனாதிபதியின் அதிகாரபூர்வ அழைப்பு நேரடியாக திருத்தந்தைக்கு விடுக்கப்பட்டது. இவ்வாண்டு பெப்ரவரி மாதம் இத்தாலியில் உள்ள இலங்கை மக்கள் கர்தினால் சகிதம் வத்திக்கானில் திருத்தந்தையைச் சந்தித்தபோது, "இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான அருளை கடவுள் எனக்குத் தருவார் என நினைக்கிறேன்" என திருத்தந்தை கூறியிருந்தார்.



## உலகப் பாடகர் இறுதிப் போட்டியில் அருட்சகோதரி வெற்றி



உலகத் தொலைக்காட்சிப் போட்டி நிகழ்ச்சியான 'த வொய்ஸ்' (The Voice) பாடகர் போட்டியின் இத்தாலிய வடிவ நிகழ்ச்சியின் இறுதிப் போட்டியில் கத்தோலிக்க அருட்சகோதரி ஒருவர் வெற்றி பெற்றுள்ளார். இந்தப் போட்டியில் பங்குகொண்டது முதல் அருட்சகோதரி ஸோர் கிறிஸ்தீனா இணையத்தளம் மூலம் புகழின் உச்சத்துக்குச் சென்றிருந்தார்.

கன்னியாஸ்திரி உடையுடன் கழுத்தில் சிலுவையுடன் ஸோர் கிறிஸ்தீனா தனது வெற்றிக்காகக் கடவுளுக்கு நன்றி கூறினார். இவர் முதன்முதலாக இந்தப் போட்டிக்குத் தெரிவாவதற்காகப் பாடிய பாடல் யூ டியூப் இணையத்தளத்தில் ஏற்கனவே 50 மில்லியன் தடவைகளுக்கு மேல் பார்க்கப்பட்டுள்ளது.

உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சாதாரண மக்களிடம் மேலும் நெருக்கமாகக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற பாப்பரசர் பிரான்சிஸின் வேண்டுகோளைப் பின்பற்றியே தான் இந்தப் போட்டியில் பங்குபற்றியதாக 25 வயதான அருட்சகோதரி கிறிஸ்தீனா கூறினார்.

## யூன் 22 பாப்பரசர் தினம்

### "திருத்தந்தையே, உங்கள் எளிமையான வாழ்க்கை முறையினால் எம்மை விழித்தெழச்செய்யுங்கள்"



இவ்வாண்டு பாப்பரசர் தினம் யூன் மாதம் 22ஆம் திகதி இலங்கையில் உள்ள அனைத்து மறைமாவட்டங்களிலும் கொண்டாடப்படுகின்றது. தனது மந்தைகளை மேய்க்கும் பணியில் அவர் அர்ப்பணிப்போடு செயலாற்ற அருள்வேண்டி அன்றைய தினம் பாப்பரசருக்காக சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றது.

பாப்பரசர் தினத்திற்கான இவ்வாண்டுக் கருப்பொருள்: "திருத்தந்தையே, உங்கள் எளிமையான வாழ்க்கை முறையினால் எம்மை விழித்தெழச்செய்யுங்கள்" (Holy Father, awaken us by your simple way of life") என்பதாகும். மன்னார் மறைமாவட்டத் திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்பணி. ஏ. யூட் குரூஸ் அடிகளார் திருப்பாலத்துவ சபை பிள்ளைகளுக்கும் ஊக்குவிப்பாளர்களுக்கும் பாப்பரசர் தின வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றார்.

## மன்னார் சிறிய குருமடத்தின் வெள்ளி விழா

மன்னார் மறைமாவட்டத்தின் மடுமாதா சிறிய குருமடத்தின் 25 வருட (07.01.1989 – 07.01.2014) நிறைவையொட்டி சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றன.

25 வருட நிறைவு இவ்வாண்டு ஜனவரி 7ஆம் திகதி கடந்துவிட்ட நிலையில் இந்த யூபிலி விழாவை இவ்வாண்டு செப்ரம்பர் மாதம் 25ஆம் திகதி கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. யூபிலி விழா அன்று மாலையில் நன்றித் திருப்பலியும், கலைநிகழ்வுகளும், இரவுவிருந்தும் சிறிய குருமடத்தில் இடம்பெறும். இது தொடர்பாக குருமட அதிபர் சேவியர் குரூஸ் அடிகளார் தலைமையில் பலவித ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## அமதிகளின் யாழ் மாகாணத்திற்கு புதிய முதல்வர்



அமலமரித்தியாகிகள் சபையின் யாழ் மாகாணத்தின் புதிய முதல்வராக (Provincial) அருட்பணியாளர் எஸ். எட்வின் வசந்தராஜா (அமதி) அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

அருட்பணியாளர்கள் எஸ். டேமியன் (அமதி), எஸ். அந்தோனிமுத்து குரூஸ் (அமதி), எஸ். அன்புராசா (அமதி), பெனடிக்ற் யூஜின் (அமதி), எஸ். ஸ்ரனிஸ்லோஸ் (அமதி) ஆகியோர் புதிய முதல்வரின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய முதல்வரும் ஆலோசகர்களும் கடந்த யூன் 1ஆம் திகதி தமது பணிப்பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டனர். இவர்களுடைய பணிக்காலம் மூன்று வருடங்களாகும்.

அருட்பணி. எட்வின் அவர்கள் 1965 மே 3ஆம் திகதி பிறந்தார். 1992ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் திருச்சபைச் சட்டத்தில் முதுமாணிப் பட்டத்தையும், மெய்யியலில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆறு வருடங்களாக (இரண்டு பணிக்காலங்கள்) முதல்வராகப் பணியாற்றிய அருட்பணி. போல் நட்சத்திரம் அடிகளாரின் பணிக்காலம் நிறைவுக்கு வந்ததால் புதிய முதல்வரும் ஆலோசர்களும் அமதிகளின் மேனிலை முதல்வரினால் (Superior General) நியமிக்கப்பட்டுள்ளனர்.

முதல்வர் பணியிலிருந்து ஓய்வுபெறும் போல் நட்சத்திரம் அடிகளாருக்குப் பாராட்டுக்களையும் நன்றிகளையும், புதிய பணிப்பொறுப்பை ஏற்றிருக்கும் எட்வின் வசந்தராஜா மற்றும் அவருடைய ஆலோசகர்களுக்கு வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னார் ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்கள் சார்பாக மன்னா தெரிவித்து மகிழ்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## ஆலயப் பாடல்கள்

### இசையில் அசையும் உலகம்

"இசையின் வடிவில் இயேசுவைப் பாடிட எழுந்திடாய் மானிலமே" என்று இசையால் இறைவனைப் புகழ அழைக்கப்படுகின்றோம். ஆம், இசை சிற்பங்களின் மூச்சு, ஓவியங்களின் பேச்சு, இதயத்தின் வெளி வளர்ச்சி. "பேச்சு மௌனித்து அவலப் பாதையில் செல்லும்போது இடையில் எழும் செங்குத்துச் சுவர் இசை. உணர்வுகளை ஓசை நிலமாக ஆக்குவது இசை" என்கிறான் ஒரு ஜெர்மனியக் கவிஞன். இசை மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தது. மனிதனுடைய உள்ளுணர்வுகளைத் தட்டி எழுப்ப வல்லது. பிறப்பு முதல் இறப்பு வரை (நாட்டார்) இசைப்பாடல்கள் மனித வாழ்க்கையில் இடம்பிடித்துள்ளன.

### திருவழிபாட்டில் திருஇசை

இசையினூடாக மனிதன் இறைவனைப் பாடிப் புகழ்கின்றான்; பரவசப்படுகின்றான்; மனம் உருகித் தன்னை மறக்கின்றான். வேதாகமம் இவ்வுண்மைக்கு வெளிச்சம் தருகிறது. தாவீதின் திருப்பாடல்கள் வேதாகம இசை மரபுக்கு சிறந்த உதாரணம். தூய பவுலடியார் இசையால் இறைவனைப் புகழும்படி பரிந்துரைக்கின்றார். "உங்கள் உரையாடல்களில் திருப்பாடல்கள் புகழ்பாக்கள் ஆவிக்குரிய பாடல்கள் இடம்பெறட்டும். உளமாற இசைபாடி ஆண்டவரைப் புகழுங்கள்"(எபே. 5:19). "திருப்பாடல்களையும் புகழ்பாக்களையும் ஆவிக்குரிய பாடல்களையும் நன்றியோடு உளமாறவேண்டி கடவுளைப் போற்றுங்கள்" (கொலோ 3:16).

திருஇசையின் மாண்பு பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு இவ்வாறு கூறுகின்றது. "அனைத்துலகத் திருச்சபையின் இசைமரபு மதிப்புமிக்க ஒரு கருவூலம். இது பிற கலை வகைகளைவிடச் சிறந்தது. காரணம், சொல்லோடு இயைந்த இசை ஆடம்பர திருவழிபாட்டிற்குத் தேவையான மற்றும் அத்திருவழிபாட்டின் முழுமைக்கு உரிய பகுதியாக விளங்குகின்றது" (திருவழிபாடு, எண். 112).

### பாடகர் குழாம்களின் பரிதாபநிலை

இன்றைய நமது பங்குச் சூழமைவில் வழிபாடுகளில் இசையும் பாடல்களும் எப்படி உள்ளன என்று நாம் சிந்திக்க வேண்டும். வழிபாடுகளில் பாடல்களையும் இசையையும் வழிநடத்திச் செல்லும் பாடகர் குழாமினரின் நோக்கும் போக்கும் பல இடங்களில் வழிபாட்டின் மனநிலைக்கு முரணாக உள்ளமை வெள்ளிடை மலை. சில இடங்களில் பாடகர் குழாமினர் இசையையும் பாடல்களையும் தமது தனிக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்புகின்றனர். பாடகர் குழாமிற்கு உள்ளேயே நானா? நீயா? என்ற போட்டி. யார் ஒலிவாங்கிக்கு (மைக்கிற்கு) முன்னால் நின்று பாடுவது என்பதில் சண்டை. என்னுடைய குரல்தான் ஒலிவாங்கி மூலமாக எல்லோருக்கும் கேட்க வேண்டும் என்ற ஆசை. பாடகர் குழாமில் உள்ள சிலர் பாடல் பயிற்சிக்கே வரமாட்டார்கள். ஆனால் பெருநாள் திருநாட்களில் மட்டும் வந்து திருப்பலி வழிபாடுகளில் தங்களைக் காட்டிக்கொள்வதற்காக முண்டியடித்துக்கொண்டு முன்னுக்கு நிற்பார்கள்.

### பங்கேற்பு இல்லாத பாடல்கள்

மக்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பாடும்போதுதான் வழிபாட்டில் முழுமையைக் காணமுடியும். ஆனால் சில இடங்களில் பாடகர் குழாமினர் மட்டுமே பாடல்களைப் பாடுகின்றவர்களாக இருக்கின்றனர். பொதுவழிபாட்டில் மக்களின் பங்களிப்பு இல்லாமல் பாடகர் குழாமினரின் 'இசைக்கச்சேரியை' மக்கள் வெறுமனே கேட்டு (பார்த்து) இரசித்துவிட்டுப் போகின்ற நிலை உள்ளது.

### பாடல் தெரிவில் பக்குவம்

திருப்பலிப் பாடல்களைத்தெரிவுசெய்யும்போது பல இடங்களில் வழிபாட்டின் தன்மைக்கும், அன்றைய நாளின் கருத்திற்கும், மனநிலைக்கும் ஏற்ப தெரிவுசெய்யாமல் தமது சுய விருப்பத்தை மட்டும் அடிப்படையாகக்கொண்டு தெரிவுசெய்கின்றார்கள். புதிய பாடல்களைப் பாடவேண்டும் என்ற ஆர்வத்தினால் நல்ல கருத்தும் இசையுமுள்ள பல பழைய பாடல்கள் புறக்கணிக்கப்படுகின்றன. பாடல்கள் வழிபாட்டின் மையக்கருத்திற்கு ஏற்ப அமைதல் வேண்டும். சிலர் ஒருசில பாடல்களை எல்லா வேளையிலும் பாடுகின்றனர். திருவழிபாட்டு ஆண்டுக் காலத்தையோ அல்லது இறைவார்த்தையையோ கருத்தில் கொள்ளாது தமக்கு இலகுவான, விருப்பமான பாடல்களைப் பாடுகின்றனர். இந்நிலை மாறவேண்டும். திருப்பலியில் வாசகங்கள் முடிந்தவுடன் பதிலுரைப் பாடல் சங்கீதங்களைத் தியானித்து செபிக்காது பொருத்தமற்ற பாடல்களைப் பாடுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.

### திருச்சபை விரித்துரைக்கும் போதனை

திருச்சபையின் போதனை இதுபற்றிய தெளிவான வரையறையை நமக்கு தருகிறது. "... பாடகர் குழாமைச் சேர்ந்தோர் உண்மையிலேயே வழிபாட்டுப்பணி புரிகின்றனர். ஆகவே இவர்கள் இம்மாபெரும் பணிக்குத் தகுந்ததும் இவர்களிடமிருந்து கடவுளின் மக்கள் உரிமையுடன் எதிர்பார்ப்பதுமான நேரிய பக்தியுடனும் ஒழுங்குடனும் தம் பணிகளை ஆற்ற வேண்டும்." (திருவழிபாடு எண். 29) எனவே நமது பங்குகளில் இசை – பாடல்கள் மட்டில் நம் அனைவருக்குமான பங்களிப்பை உணருவோம்; உணர்த்துவோம்.

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை*
*அன்புடன் அருட்பணி. தமிழ் நேசன்,*
*மன்னர் பதிப்பாசிரியர்*

## இறையடி சேர்ந்த குருக்களை நினைவுகூர்ந்து செபிப்போம்



நோபேட் அடிகளாரின்
5ஆம் ஆண்டு நினைவு
**யூன் 20**



விக்ரர் அடிகளாரின்
1ஆம் ஆண்டு நினைவு
**யூலை 04**

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அமரர் அருட்தந்தை நோபேட் அடிகளார் இறைபதமெய்திய ஐந்தாம் ஆண்டு நிறைவு எதிர்வரும் யூன் மாதம் 20 ஆம் திகதி ஆகும்.

அமதிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி. விக்ரர் குரூஸ் (அ.ம.தி) அடிகளார் இறைபதம் அடைந்த முதலாம் ஆண்டு நிறைவு எதிர்வரும் யூலை மாதம் 04ஆம் திகதி ஆகும். இறையடி சேர்ந்த இக்குருக்களுக்காக இத்தினங்களில் சிறப்பாக வேண்டிக்கொள்வோம்.

## மன்னார் மறைமாவட்டம்
### திருவழிபாட்டு நாட்காட்டி - 2014

### ஆடி

02 - மடுமாதா திருவிழா
03 - ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொண்ட தினம்.
06 - தூய செபமாலை அன்னை திருவிழா - பாலையடிப்புதுக்குளம்
மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை மன்னார் ஆயராக நியமனம் பெற்ற தினம் (1992)
07 - திருஇருதய ஆண்டவர் விழா - சிதம்பரபுரம்.
10 - தூய ஆரோக்கிய அன்னை திருவிழா - (நானாட்டான் பங்குத் திருவிழா)
13 - புனித செபஸ்தியார் திருவிழா - மருதமடு
- தூய வேளாங்கண்ணி சிற்றாலயம் - ஆதார வைத்தியசாலை (மன்னார்)
- புனித தோமையார் திருவிழா - கல்நாட்டி,
- நல்லாயன் திருவிழா - பீடியா பாம்
- மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி தினம்
15 - புனித மரியகொறற்றி திருவிழா - பணிடிவிரிச்சான்
16 - தூய கார்மேல் அன்னை திருவிழா - ஆவணம், அளவக்கை, இளமருதங்குளம், பொற்கேணி, பறப்பாங்கண்டல், பம்மைமடு.
- தூய கப்பலேந்தி மாதா திருவிழா - பெரிய நொச்சிக்குளம்.
19 - குழந்தை இயேசு திருவிழா - குழந்தை இயேசு புரம்
- கார்மேல் மாதா - நாகர் இலுப்பைகுளம்.
25 - புனித இயாகப்பர் திருவிழா - பறப்பாங்கண்டல், விடத்தல்தீவு, கொக்குப்படையான், கட்டுக்காரன் குடியிருப்பு, முருங்கன் கமம், நறுவிலிக்குளம்.
26 - புனித அன்னமாள் திருவிழா - வங்காலை, பூவரசன் குளம்.
27 - புனித இயாகப்பர் திருவிழா - சிவபுரம் - சுதேச குருக்கள் துறவியர் தினம் (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.)
28 - புனித இயாகப்பர் விழா - சிறுநீலாசேனை

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## மாவட்ட மட்ட பொது அறிவு வினாடி வினாப் போட்டி







நானாட்டான் பிரதேச செயலகம் 2014ம் ஆண்டுக்கான மாவட்டமட்ட உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பொது அறிவு வினாடி வினாப் போட்டியைக் கடந்த 03.06.2014 செவ்வாய்க்கிழமை செயலகத்தில் நடாத்தியது.

மன்னார் மாவட்டக் கல்வித்துறையில் தங்களை அர்ப்பணித்து சேவைபுரிந்த டி லாசால் அருட்சகோதரர்களான ஹில்லறி ஜோசப், ஜோண் பப்ரிஸ்ற் குரூஸ், வித்துவான் அப்துல் றஹ்மான் ஆகிய கல்விமான்களின் பெயரில் மூன்று அரங்குகளில் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஐந்து சுற்றுக்களாக இப்போட்டி இடம்பெற்றது. மன்னார் மாவட்டத்தின் அனைத்து முன்னணிப் பாடசாலைகள் உட்பட 21 பாடசாலைகள் இதில் கலந்துகொண்டன. குறிப்பாக பெரியமடு, இலுப்பைக்கடவை, காக்கையன்குளம் ஆகிய தூரப் பாடசாலைகளும் மிகுந்த ஆர்வத்துடன் இதில் கலந்துகொண்டன. இப்போட்டியில் இறுதிச்சுற்றுக்குத் தெரிவாகி 1ம், 2ம், 3ம் இடங்களைக் கீழ்வரும் பாடசாலைகள் பெற்றுக்கொண்டன.

1. மன்/ புனித ஆனாள் ம.ம.வி, வங்காலை.
2. மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை.
3. மன்/ அல்அஸ்ஹர் தேசியப் பாடசாலை.

இப்போட்டி நிகழ்வின் பிரதம மத்தியஸ்தர்களாக மன்னார் கச்சேரி பிரதம கணக்காளர் திரு. K. கமலேஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் திரு. K. ஸ்ரீபாஸ்கரன், உதவிச் சமுர்த்தி ஆணையாளர் திரு. K. சசிரதன் ஆகியோர் கடமைபுரிந்தனர். மாலை நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டிமெல் கலந்து சிறப்பித்ததுடன் தனது உரையில் மிகக்கஷ்டமான இப்பணியை சிறந்த திட்டமிடலுடன் கனகச்சிதமாக நடத்திமுடித்த நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. க. அ. சந்திரஐயாவும் அவரது குழுவினரும் பாராட்டுக்குரியவர்கள் என்று புகழாரம் சூட்டினார்.


(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## வாழ்த்துகிறோம்



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை ஆயராக நியமனம் பெற்ற (1992) தினம் யூலை 6 ஆகும். ஆயர் அவர்களுக்கு மன்னார் இறைமக்களின் வாழ்த்துக்களையும் செபங்களையும் *மன்னா* தெரிவித்து மகிழ்கின்றது.

## யாழ் ஆயரை வாழ்த்துகிறோம்



யூலை 3ஆம் திகதி புனித தோமையாரின் திருவிழா ஆகும். இத்தினத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தனது பெயர்கொண்ட புனிதரின் திருவிழாவைக் கொண்டாடுகின்றார். அவருக்கு *மன்னா* சார்பாக எமது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

## உண்மை உறைக்கும் — கமிலஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்குப் பதிலாக நாய், பூனைகளை வளர்ப்பவர்கள் தனிமையில் வாழ நேரிடும்!

## பாப்பரசர் எச்சரிக்கை

பிள்ளைகளுக்குப் பதிலாக நாய்களையும், பூனைகளையும் வளர்க்கும் தம்பதிகள் தமது முதுமை வயதில் கசப்புமிக்க கடும் தனிமையில் வாழ நேரிடும் என பாப்பரசர் பிரான்சிஸ் எச்சரித்துள்ளார். வத்திகானில் இடம்பெற்ற ஆராதனை நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

"பிள்ளைகளை வளர்ப்பதைவிட செல்லப்பிராணிகளை வளர்ப்பது சௌகரியமாக இருக்கலாம். ஆனால் அது அன்பு மற்றும் தெய்வீகம் தொடர்பில் ஒரேமாதிரியான வாய்ப்பை வழங்காது" என பாப்பரர் கூறினார்.

திருமணமாகி 25 முதல் 60 ஆண்டுகள் இணைந்து வாழும் 15 தம்பதிகளுக்காக வழங்கிய விசேட வழிபாட்டின்போதே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது குழந்தையொன்றைப் பெற்றுக்கொள்வதில்லை என்ற தீர்மானத்திலிருந்தும் தம்பதிகளுக்கு எதிராக அவர் கண்டனத்தைத் தெரிவித்தார். ஒரு நாய் மற்றும் இரு பூனைகளுக்கு அன்பு செலுத்தி வாழ்வது மிகவும் சௌகரியமானதாக இருக்கலாம். ஆனால் இறுதியில் வயோதிப காலத்தில் கசப்பான தனிமையை எதிர்கொள்ள நேரிடும் என அவர் கூறினார்.



இத்தாலியின் கடந்த 5 வருட காலத்தில் இல்லாதவாறு கடந்த வருடம் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே பாப்பரசரின் இந்த உரை இடம்பெற்றுள்ளது. கடந்த வருடம் அந்நாட்டில் 515,000 குழந்தைகள் மட்டுமே பிறந்துள்ளன.

# மக்களை விட்டு வெளிறே மறுத்த அருட்தந்தை சுட்டுக்கொலை

சிரியாவில் மோதல்கள் இடம்பெற்றுவரும் ஹொம்ஸ் நகரை விட்டு வெளியேற மறுத்து அங்கு தங்கியிருந்த நெதர்லாந்து அருட்தந்தையொருவர் துப்பாக்கிதாரியொருவரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.


கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள மேற்படி பிரதேசத்தில் இயேசு சபையைச் சேர்ந்த அருட்தந்தையான பிரான்ஸ் வான்டெர் லுக்ட் (சுமார் 70 வயது) பிரபலமான ஒருவராக விளங்கினார்.

ஹொம்ஸ் நகரில் கிறிஸ்தவர்கள் இருக்கும்வரை தான் அந்த நகரைவிட்டு வெளியேறப்போவதில்லை என அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவரது வதிவிடத்திற்கு வந்த நபர் ஒருவர் அவரை வீதிக்கு அழைத்துவந்து அவரது தலைமையில் இரு தடவைகள் துப்பாக்கியால் சுட்டதாகக் கூறப்படுகிறது.

சுமார் 5 தசாப்த காலமாக சிரியாவில் வசித்துவரும் அருட்தந்தை வான்டெர் லுக்ட், அந்நாட்டைத் தனது சொந்த நாடாகக் கருதியிருந்ததாகக் கூறப்படுகிறது.

ஹொம்ஸ் நகரில் இந்த வருட ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் கண்காணிப்பின்கீழ் 1,400 பேர் வெளியேற்றப்பட்டனர். இதன்போது அவர் அந்நகரைவிட்டு வெளியேற மறுத்து அங்கேயே தங்கியிருந்தார்.



"நான் மக்களில் முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் வேறுபடுத்திக் காணவில்லை. நான் அவர்கள் அனைவரையும் மனிதர்களாகவே காண்கின்றேன்" என அவர் ஒருசமயம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்கொலையை யார் செய்தார்கள், எதற்காகச் செய்தார்கள் போன்ற காரணங்கள் கொலையாளிகளால் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

# "கிறிஸ்துவின் திருப்பாடுகள் எனது வாழ்வை மாற்றியது"

## புத்தமத இளைஞர்

இயேசுக் கிறிஸ்துவின் திருப்பாடுகள் குறித்த நிகழ்வு மேடையில் காட்டப்பட்டதைப் பார்த்தபோது தனது வாழ்வு மாறியதாக இலங்கை புத்தமத இளைஞர் ஒருவர் கூறினார்.

சன்ரத்ன என்ற பெயரைக் கொண்ட இவர் வென்னப்புவ என்ற இடத்தில் வசிப்பவர். மது அருந்தி, புகைபிடித்துக்கொண்டு பல பெண் நண்பர்களைக் கொண்டு மோசமான வாழ்க்கை வாழ்ந்ததாகவும் ஆனால் கடந்த மார்ச் மாதத்தில் தனது நண்பர்களுடன் சென்று கிறிஸ்துவின் திருப்பாடுகள் குறித்த நிகழ்வைப் பார்த்த பின்னர் தனது வாழ்வு மாறிவிட்டது எனவும் கூறினார். இவர் உயிர்ப்பு ஞாயிறு திருவிழிப்பில் திருமுழுக்குப் பெற்றார். என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்லாம் மதத்திற்கு மாற மறுத்த கிறிஸ்தவ இளைஞர் சுட்டுக்கொலை

இஸ்லாம் மதத்திற்கு மாற மறுத்ததற்காக 22 வயது பாகிஸ்தான் கிறிஸ்தவ இளைஞர் ஒருவர் அந்நாட்டு இஸ்லாமியத் தீரவாதி ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

லாகூரில் உள்ள இஸ்லாமிய மையம் ஒன்றில் துப்புரவுப் பணியாளராக வேலை செய்வதற்கு ஹரூன் (Haroon) என்ற கிறிஸ்தவ இளைஞர், அம்மையத்தின் உமர் பாரூக் (Umer Farooq) என்ற பாதுகாப்புப் பணியாளரால் மதம் மாறக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்.

அதிகப் பணம் தருவதாக ஆசை காட்டியும் இந்தக் கிறிஸ்தவ இளைஞர் இஸ்லாமிற்கு மாற மறுத்ததால், அந்தப் பாதுகாப்புப் பணியாளரால் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இத்தகைய செயற்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்க பாகிஸ்தான் அரசு தவறிவருவதாலும், இஸ்லாமியத் தலைவர்களின் ஆதரவு குற்றவாளிகளுக்கு இருப்பதாலும் இத்தகைய தாக்குதல்கள் தொடர்வதாக இங்கிலாந்தைச் சேர்ந்த சட்ட உதவி மையம் கவலை தெரிவிக்கின்றது.

# இயேசுக் கிறிஸ்துவின் ஆரம்பகால உருவ ஓவியம் எகிப்தில் கண்டுபிடிப்பு

இயேசுக் கிறிஸ்துவின் ஆரம்பகால உருவ ஓவியமொன்றை பண்டைய எகிப்திய நகரான ஒக்ஸிரைன்சஸிலுள்ள மர்மமான கல்லறையொன்றில் கண்டுபிடித்துள்ளதாக ஸ்பெயின் அகழ்வாராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

கிறிஸ்துவுக்குப்பின் ஆறாம் அல்லது ஏழாம் நூற்றாண்டிடைச் சேர்ந்த கல்லறையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஓவியத்தில் இயேசுக் கிறிஸ்து சுருண்ட கேசமுள்ள இளைஞராக ஆசிவழங்கிய வண்ணம் காணப்படுகின்றார்.

மேற்படி ஆய்வானது பார்சிலோனா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜோசப் பட்ரோ தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் மேற்படி உருவ ஓவியத்தில் காணப்படும் குறிப்புகளை மொழிபெயர்த்து அந்த ஓவியத்தில் காட்சியளிப்பவர் யார் என்பதை உறுப்படுத்தும் நடவடிக்கையில் ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# மன்னார் மறைமாவட்டத்தில் தமிழக இறைபணியாளர்கள்

கற்கடந்தகுளம் பங்குத்தந்தை அருட்பணியாளர் எஸ். மாக்கஸ் அடிகளாரின் அழைப்பின்பேரில் தமிழகத்திலிருந்து மூன்று இறைபணியாளர்கள் மன்னார் மறைமாவட்டத்திற்கு வருகை தந்து பல்வேறு இடங்களில் பல்வேறு தரப்பினருக்கு தியானங்களை, வழிபாடுகளை நடாத்தி வருகின்றனர்.

வேலூர் மறைமாவட்ட சலேசிய தியான இல்லத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் பீற்றர் பிரான்சிஸ், விழுப்புரம் எம்மாவுஸ் தியான இல்லத்தைச் சேர்ந்தவரும் 'இயேசுவின் இன்ப கீதங்கள்' என்ற ஒலிப்பேழையின் படைப்பாளருமான சகோதரர் இளங்கோ, திருச்சி அருங்கொடை தியான இல்லத்தைச் சேர்ந்த சகோதரர் மைக்கல் ஆகியோரே இந்த இறைபணியாளர்களாவர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)


# அழைத்தலின் அறுவடைகள்!

யாழ் மறைமாவட்டத்திற்கு ஒரு புதிய குரு

அமதிகளின் யாழ் மாகாணத்திற்கு இரண்டு புதிய குருக்கள்



அ. மைக்டொனால்ட், குருநகர்



தே. யேசுபாலன், இரணைமடு



ம. டிலோசன் றஜீவ், சுண்டுக்குளி

யாழ் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த மூன்று அருட்சகோதரர்கள் யூன் மாதம் 26ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப் - படவுள்ளனர்.

யாழ். குருநகர் புனித இயாகப்பர் ஆலயத்தைச் சார்ந்த அருட்சகோதரர் அன்ரனி மைக் டொனால்ட் அவர்கள் யாழ் மறைமாவட்டக் குருவாகவும், முழங்காவில் பங்கு, இரணைமாதா நகர் செபமாலை மாதா ஆலயத்தைச் சார்ந்த அருட்சகோதரர் தேவசகாயம் யேசுபாலன் மற்றும் யாழ் சுண்டிக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தைச் சார்ந்த அருட்சகோதரர் மரியதாஸ் டிலோசன் றஜீவ் யாழ் மாகாண அமலமரித்தியாகிகள் சபைக் குருக்களாகவும் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

பணிக்களத்தில் காலடி பதிக்கும் இப்புதிய குருக்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

புதிய குருக்கள் பற்றிய விரிவான தகவல்களை 15ஆம் பக்கத்தில் காணலாம்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள்.

# குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் யாழ் மறைமாவட்டக் குருக்கள் அறுவர்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஆறு அருட்பணியாளர்கள் இவ்வாண்டு யூன் மாதம் 19ஆம் திகதி தமது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளி விழாக் காண்கிறார்கள். அருட்பணியாளர்கள் ஜே. பி. அந்தோனிதாஸ், ஏ. எவ். பெனற், எஸ். யூஜின் பிரான்சிஸ், சி. ஏ. அந்தனிபாலா, ரி. ஏ. தவராஜசிங்கம், எம். டேவிட் ஆகியோரே வெள்ளி விழாக்காணும் அருட்தந்தையர்கள் ஆவர்.

மண்டைதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட அருட்பணியாளர் ஜே. பி. அந்தோனிதாஸ் அடிகளார் தற்போது யாழ் மறைமாவட்ட நிதியாளராகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். மண்டைதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட அருட்பணியாளர் ஏ. எவ். பெனற் அடிகளார் தற்போது ஜேர்மன் நாட்டின் தமிழ்ப் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் பொறுப்பாளராகப் பணியாற்றுகின்றார். அருட்பணியாளர் எஸ். யூஜின் அடிகளார் தற்போது பண்டத்தரிப்பு பங்குத்தந்தையாகப் பணியாற்றுகின்றார். அருட்பணியாளர் சி. ஏ. அந்தனிபாலா அடிகளார் தற்போது அச்சுவேலி பங்குத்தந்தையாகப் பணியாற்றுகின்றார். அருட்பணியாளர் ரி. ஏ. தவராஜசிங்கம் தற்போது கனடா நாட்டில் உள்ளார். அருட்பணியாளர் எம். டேவிட் அடிகளார் அமெரிக்காவில் தனது உயர் கல்வியை மேற்கொண்டுவருகின்றார். குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக்காணும் அருட்தந்தையர்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினரின் யூபிலி நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்வடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சியம் இல்லாத அவலச்சாவின் ஐந்தாம் ஆண்டு நினைவின் நிறைவு

அருட்பணி. அ. சகாயநாதன் (தி.ச.)



கிழக்கின் மாவிலாற்றில் தொடங்கி இறுதியில் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கும் வரையிலும் வஞ்சகம் எங்கள் வரலாற்றையும் வீரத்தையும் கொன்று முடித்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டது. புதைகுழிக்குள் புதைந்து கிடக்கும் உண்மைகள் வெளிவராமல் ஐந்து ஆண்டுகள் நிறைவுபெற்றுவிட்டது. தனியரசு அமைத்துத் தலைநிமிர்ந்து நின்ற தமிழர்கள் அழிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள்!

தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் அரசின் போக்கும் ஒரே கோட்டில் பயணிக்கவில்லை; பயணிக்கவும் மாட்டாது என்பது சர்வதேச சமூகத்திற்கு வெளிச்சமாகி ஐந்து ஆண்டுகள்! எமது போராட்டத்தையும், பூர்வீக நிலத்தையும் கொள்ளையிடும் வஞ்சகத்தோடு எம்மண்ணின்மீது அனைத்துலகும் ஒன்றிணைந்து அழித்து ஐந்து ஆண்டுகள்!

எமது தமிழ் மண்ணில் (வன்னியில்) நிகழ்த்தப்பட்ட மனிதப் படுகொலையில் மணமும், அவலக்குரல்களும் எம்மனங்களை விட்டு இன்னும் அகலாத நிலையில், எமது அரசியல், வாழ்வுரிமை, கலை, பண்பாட்டுக் கூறுகளைச் சிதைக்கும் நடவடிக்கைகளில் அரசு இறங்கியுள்ளது. இன்னும் தமிழ்த் துரோக, தமிழ் அரசியல்வாதிகளை வைத்துத் தமிழர்களுக்கு பிரச்சினை இல்லை என்ற அபிப்பிராயத்தை உருவாக்கி, குடிசனப் பரம்பலைச் சிதைக்கும் வகையிலான சிங்களக் குடியேற்றங்கள், மத ஸ்தலங்களை அழித்தல் என எல்லா அடையாளங்களையும் அழிக்கும் நடவடிக்கையிலும் அரசு இறங்கியுள்ளது. நமது வரலாற்றுத் துயரம் என்னவெனில் இந்த நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள - அரசியலுக்குப் பலியான பிசாசுகளை வைத்து அரசு நடத்துகிறது.

இப்படியான சூழலில் பாதைகளும் பாலங்களும் நிர்மாணம் செய்வது எமக்குத் தீர்வாகாது. நாம் பெருந்தெருக்களின் அபிவிருத்தியையும், ஹொட்டல்களின் வருகையையும் எதிர்பார்க்கவில்லை. எமக்குப் பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் கேட்கின்றோம். அற்ப சொற்ப சலுகைக்காக கண்ணை விற்று சித்திரம் வாங்கும் கொடுமை இன்னும் எத்தனை நாளுக்குத் தொடரப்போகிறது? "சண்டை என்றால் சட்டை கிழியத்தான் செய்யும்" என்று கூறும் நடிகர் வடிவேலுவின் பாணியில் போர் என்றால் பொதுமக்கள் உயிர் இழக்கத்தான் செய்வர் என்று கூறுகின்ற கொடூரத்தனங்கள் இருக்கும் வரைக்கும் எம் மண்ணில் சமாதானம் ஏற்படவே மாட்டாது. நடந்தது மனிதாபிமான யுத்தம் என்றும், ஒரு பொது மகனோ பொது மகளோ கொல்லப்படவில்லை என்றும் இந்த அரசு "முயலுக்கு மூன்று கால்" என்று கதைவிடும்போது நல்லிணக்கத்தை எங்கே தேடமுடியும்?

போரிற்குப் பின்னான ஐந்து ஆண்டுகள் முடிந்தும் தற்போதைய நிலையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதை விடுத்து தற்போதும் போர் வெற்றியைப்பற்றி அரசு தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறது. இதனால் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஒருபோதும் ஏற்படுத்த முடியாது.

இத்தருணத்தில் யுத்த காலத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் பற்றியும் அதன் அவலங்களில் இருந்து மீள்வது பற்றியும் உள்நாட்டில் ஒரு காத்திரமான கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது இன்னும் நடைபெறவில்லை. எம்மீது கொடூரமான இனப்படுகொலை நடந்தேறியது. இதற்குப் பின்னால் நல்லிணக்கம் அது, இது என்று பேசுவது எந்தளவுக்கு வெற்றி தருமென்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இராணுவத்தாலும், அடக்குமுறைகளாலும் நிரந்தரத் தீர்வு ஏற்படுமென்று நினைத்தால் அது வெறும் பகல் கனவாகத்தான் இருக்கப்போகிறது.

வடமாகாண வெற்றி பலருடைய மனங்களை மாற்ற வேண்டும். காட்டிக் கொடுத்தவர்களும், கூட்டிக்கொடுத்தவர்களும், மாற்றுக்கட்சிக்கு ஓட்டுப்போட்டவர்களும் அற்ப சொற்ப சலுகைகளுக்கு விலைபோனவர்களும் இனியாவது மனம் வருந்தி, திருந்தி மீண்டும் தமிழ்த் தேசியத்தை நேசிக்க வேண்டும். தமிழ் மக்கள் ஒன்றுபட்ட நேரம் இனியும் ஒதுங்கக்கூடாது. அதை வரலாறும் இனி மன்னிக்காது.

இலங்கையில் அமைதி திரும்பவேண்டுமென்றால் வடக்கு மாகாண அரசு முழு அதிகாரத்துடன் செயல்பட வேண்டும். இதன் பின்னராவது பிளவுகளையும் காழ்ப்புணர்வுகளையும் விட்டு, ஒரே தளத்தில் நின்று ஜனநாயக ரீதியில் போராடுவோம். கண்கெட்ட பின் சூரிய வணக்கத்தினால் பயனில்லை. இப்பொழுதும் காலம் பிந்திவிடவில்லை. கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளையும், உரிமைகளையும், அபிலாசைகளையும் புரிந்துகொண்டு அரசு செயல்பட்டாலே போதும். தமிழ் மக்களாகிய நாம் நியாயபூர்வமாக நடந்துகொள்வோம் என்பதில் சந்தேகமே இல்லை.

விழுவது மட்டுமே அலையின் தொழிலன்று, மீண்டும் எழுவதும்தான். நேற்று வீழ்ந்தோம்; மீண்டும் நாளை எழுவோம் என்பதை உலகிற்கு எடுத்துரைப்போம். எமது கண்ணீர் கடவுள்முன் பெறுமதிமிக்கது. காலம் பிந்தினாலும் கடவுள் நீதியான தீர்வையே தருவார். பொறுமையோடு காத்திருப்பது பலவீனமல்ல - அதுவே நமது பலம். தொடர்ந்து நம்பிக்கையோடு போராடுவோம். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

---

# நடந்த நடப்புக்கள்

## தருவது நாங்கள் ....... தீர்மானிப்பது நீங்கள்.......

### இராணுவத்திலிருந்து தப்பியோடியோரில் 20.000 பேர் கைதுசெய்யப்படுவர்

இலங்கை இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற 20 ஆயிரம் பேர் கைதுசெய்யப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார். 1972 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற முதல் வீரர் தொடக்கம் இதுவரை 50 ஆயிரம் பேர் வரையில் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளனர். இவர்களில் 30 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

### உலகில் ஒவ்வொரு 14 செக்கனுக்கும் ஒரு பெண் பாலியல் ரீதியாக துன்புறுத்தல்

ஒவ்வொரு 14 செக்கன்களுக்கும் ஒரு பெண் உலகில் யாதாயினுமொரு இடத்தில் குடும்பத்தவர்கள் அல்லது வேறு ஆட்களினால் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர். உலகில் வசிக்கின்ற 15 வயதுக்குட்பட்ட பெண்களில் 7.2 சதவீதமானவர்கள் இவ்வாறு துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர். இது பெண்களின் சுகாதாரத்துக்கும் மனித உரிமைகளுக்கும் எதிரான அச்சுறுத்தலாகுமென இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

### உலகின் 9 ஆவது பணக்காரர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உலகில் உள்ள செல்வந்தர்களில் 9ஆவது இடத்தை வகிக்கிறார் என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

### ஊடகவியலாளர்களுக்குப் பாதுகாப்பற்ற நாடுகளில் இலங்கைக்கு நான்காவது இடம்

ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்களுக்குத் தண்டனை விதிக்கப்படாத நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காவது இடத்தை வகிப்பதாக நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்தப் பட்டியல் கடந்த 16.4.2014 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி கடந்த பத்தாண்டுகளில் 100 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டபோதும், அத்தகைய கொலைகளுக்குக் காரணமானவர்கள் எவரையும் தண்டிக்க நடவடிக்கை எடுக்காத ஈராக் இந்தப் பட்டியலில் முதலிடத்தை வகிக்கிறது. இரண்டாவது இடத்தை சோமாலியாவும், மூன்றாவது இடத்தை பிலிப்பைன்சும் வகிக்கின்றன. கடந்த பத்தாண்டுகளில் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ள போதிலும் அவர்களில் ஒருவருடைய மரணத்துக்கும் காரணமானவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்காத இலங்கை இந்தப் பட்டியலில் நான்காவது இடத்தை பிடித்துள்ளது.

### மகளை தோளில் சுமந்து பாடசாலைக்கு அழைத்துச் சென்ற பிரித்தானியப் பிரதமர்



கடும் வேலையைக் காரணம் காட்டி தமது பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிட மறுக்கும் ஆண்கள் மத்தியில் வித்தியாசமான ஒரவராக பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமெரோன் விளங்குகின்றார்.

அவர் தனது 3 வயது மகள் புளோரன்ஸை தோளில் சுமந்தவாறு 11.03.2014 அன்று பாலர் பாடசாலைக்கு அழைத்துச் சென்ற காட்சி பலரது கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது.

ஒரு கையில் தனது மகளின் மிதிவண்டியை ஏந்தியவாறு, தனது மகளைத் தோளில் சுமந்து சாதாரண பொதுமக்களில் ஒருவராக டேவிட் கமெரோன் வீதியில் நடந்துசென்றுள்ளார்.

இதன்போது தோளில் அமர்ந்திருந்த அவரது மகள் அவரது கன்னத்தை இழுத்து குறும்பு செய்ய அதனைப் புன்னகையுடன் டேவிட் கமெரோன் ஏற்றுக்கொண்டார்.

டேவிட் கமரோன் இது தொடர்பில் விபரிக்கையில், தான் நேரம் கிடைக்கும்போதெல்லாம் தனது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்வதாகவும், தான் சிறந்த பிரதமராக விளங்குவது மட்டுமல்லாது சிறந்த கணவராகவும் தந்தையாகவும் திகழ விரும்புவதாகவும் கூறினார்.

### நாள்தோறும் பத்துப் பெண்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல்

இலங்கையில் நாள்தோறும் பத்துப் பெண்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுவதாக மனித உரிமைகளுக்கான மகளிர் அமைப்பு தெரிவித்துள்ளது. உலக மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்தும்போது அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பங்களில் 91 வீதமான பெண்கள் ஏதோவொரு வகையில் துன்புறுத்தப்படுகின்றனர். வருடமொன்றில் [illegible]

### மது அருந்துவதில் இலங்கை நான்காவது இடம்

உலகில் அதிகளவில் மதுபானம் அருந்தும் நபர்கள் இருக்கும் நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காம் இடத்தை வகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உலகில் அதிகளவில் மதுபானம் அருந்தும் பிரஜைகளைக்கொண்ட நாடுகளின் வரிசையில் செக் குடியரசு முதலாம் இடத்தை வகிக்கின்றது.

### 3ஆவது பாலினமாக இனி திருநங்கைகள் இந்திய உயர்நீதிமன்றம் உத்தரவு

ஆண் பெண் எனக் குறிப்பிடப்படும் பாலினங்களைப்போல, திருநங்கைகள் நாட்டின் மூன்றாவது பாலினமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் எனக் கூறி இந்திய உயர் நீதிமன்றம் கடந்த 15.04.2014 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

திருநங்கைகளுக்கும் சமத்துவம் அளிக்கும் வகையில் வழிவகை செய்யக்கோரி இந்திய உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மனுமீதான விசாரணையில் நீதிபதி ராதாகிருஷ்ணன் தலைமையிலான அமர்வு இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளது.

### கைகளைப் பயன்படுத்த முடியாத நபர் கால்களால் ஊசியில் நூல் கோர்த்து சாதனை

பிறப்பில் எலும்பு சம்பந்தமான பாதிப்புக்குள்ளாகி, கைகளைப் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள சீனாவைச் சேர்ந்த நபரொருவர் கால்களால் ஊசியில் நூலைக் கோர்த்து அனைவரையும் வியப்பில் விழி உயர்த்த வைத்துள்ளார்.

### 2012இல் மட்டும் நாட்டில் 2.150 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள்

2012ஆம் ஆண்டில் மட்டும் 2,150 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ள அதேவேளை 2008ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் 18 வயதுக்குக் குறைந்த 6,195 பேர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக சிறுவர், மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸகரலியத்த தெரிவித்தார்.

### பேஸ்புக் பயன்படுத்துவோர் இந்தியாவில் 10 கோடி பேர்

இந்தியாவில் பேஸ்புக் (Face book) பயன்பாட்டாளர்கள் எண்ணிக்கை 10 கோடியைத் தாண்டியது. சமூக இணையத்தளமான பேஸ்புக்கை பயன்படுத்துவோர் எண்ணிக்கை இந்தியாவில் 100 மில்லியனைத் தாண்டியிருக்கிறது என்று பேஸ்புக் நிறுவனம் கூறுகிறது.

பேஸ்புக் பயன்பாட்டாளர்கள் எண்ணிக்கையில், அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை இந்தியா பெறுகிறது. இந்தியாவில் கையடக்கத் தொலைபேசி எண்ணிக்கை பெருகுவதே இந்த வளர்ச்சிக்குக் காரணம் என்று கூறும் இந்த நிறுவனம் இந்தியாவில் இணைய சேவை நாடு முழுவதும் ஓரளவு நல்ல முறையில் இருப்பது மற்றொரு காரணம் என்கிறது.

பேஸ்புக் நிறுவனம் எதிர்கொள்ளும் அடுத்த சவால் என்பது இந்தியாவில் பயன்பாட்டாளர்கள் எண்ணிக்கையை எப்படி 100 கோடி என்ற எண்ணிக்கையை எட்டுவது என்பதுதான் என்று அது கூறுகிறது.

உலகெங்கும் 123 கோடி பயன்பாட்டாளர்களைக் கொண்ட பேஸ்புக் நிறுவனம் ஆசியா உட்பட வளர்ந்து வரும் சந்தைகளில் தனது வளர்ச்சிக்கு புதிய இடங்களைத் தேடிக்கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# அன்பியமாய் ஆவோமென

## அர்ப்பணிப்போம் எம்மை என்றும் !

### அன்பிய வாரத்தை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட அன்பிய இயக்குனர் செய்தி

இரண்டாம் வத்திக்கான் சங்கம் பங்குத்திருச்சபையை ஓர் 'உயிரணு' என்கிறது. அவ்வுயிரணுவின் உட்கருவாய் இருப்பது அன்பியம். திருமுழுக்குப்பெற்ற கத்தோலிக்கக் கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் ஒரு பங்குத்திருச்சபையில் உறுப்பினராக இருப்பதுபோல அக்கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் தாம் வசிக்கும் சூழமைவில், அருகில் வாழும் கிறிஸ்தவக் குடும்பங்களோடு இணைந்து தம் பகுதிக்குட்பட்ட அன்பியத்தில் உறுப்பினராக இருக்கின்றனர் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

இன்றைய திருச்சபையின் அடித்தள அமைப்பாக அன்பியம் விளங்குகிறது என்பதால், அன்பியத்தின் வளர்ச்சியே, அன்பியத்தின் எழுச்சியே அன்னையாம் திருச்சபையின் வளர்ச்சியாகவும் எழுச்சியாகவும் துலங்குகிறது என்பதை ஒவ்வொரு கத்தோலிக்க விசுவாசியும் அறிந்து உணர்ந்து அன்பியத்தில் தம் பங்களிப்பை வழங்க வேண்டும்.

இறையாட்சிக் கனவு நனவாகி அன்பு, நீதி, பகிர்தல் போன்ற மதிப்பீடுகள் வாழப்பட வேண்டுமெனில் அன்பியத்தைவிடச் சிறந்த கருவி இல்லை எனலாம். எனவேதான் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த ஆசிய ஆயர்கள் பேரவையும் நமது இலங்கை ஆயர்கள் மன்றமும் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பங்கேற்புத் திருச்சபையாகச் செயற்படத் தூண்டும் அன்பிய வாழ்வை ஊக்குவித்து வருகின்றன.

நமது மன்னார் மறைமாவட்டத் தலத்திருச்சபையும் "அன்பிய வாழ்வினூடாகக் கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி" எனும் பணி இலக்கை நோக்கி பல ஆண்டுகளாக பயணித்துக்கொண்டிருக்கிறது. அந்தவகையில் தூய ஆவியின் வருகையோடு தோற்றம்பெற்ற திருச்சபை மூவொரு இறைவனின் அன்புறவில், ஒன்றிப்பில் மகிழ்ந்திருக்க அழைக்கப்பட்டுள்ளதை செயற்பாட்டு ரீதியாக அடையாளப்படுத்தி, எண்பித்து வாழ நமது மறைமாவட்டம் ஆண்டுதோறும் தூய



ஆவியாரின் பெருவிழாவோடு அன்பிய எழுச்சி வாரத்தை ஆரம்பித்து மூவொரு இறைவன் பெருவிழாவை அன்பிய தினமாகக் கொண்டாடி மகிழ்கிறது.

இதோ! மீண்டுமொரு அன்பிய வாரத்தை ஆரம்பித்துவிட்டோம். "மனித மாண்பைக் குடும்பங்களில் பேணுவோம்" எனும் நடப்பாண்டிற்கான கருப்பொருளை உள்ளம் தாங்கி அருகில் வாழும் குடும்பங்கள் இணைந்த மனித மாண்புமிகு அன்பியமாய் வாழ்வதற்கான உள்ளுணர்வை வளப்படுத்திக்கொள்வோம். பயந்து, நடுங்கி, ஒடுங்கி, அடங்கி இருந்த திருத்தூதர்கள் தூய ஆவியின் வருகையோடு பேரெழுச்சிகொண்டு இயேசுவுக்கும் அவர் அன்பிற்கும் சான்று பகர்ந்ததுபோல நம்மத்தியில் சோர்வுற்று, தளர்வுற்று, தூங்கிக்கொண்டிருக்கும் அன்பிய செயல்முறைகள் தூய ஆவியின் ஆளுகையால், வழிநடத்துதலால் விழித்தெழுந்து புத்தூக்கத்துடன், புதுத்தெம்புடன் செயலாற்றுவதாக!

இயேசுவின் ஆவியால் இயக்கப்படும் ஓர் இறை சமூகமாகிடுவோமாக! அன்பு, சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த நீதியின் சமூகத்தை நாம் வாழுமிடத்தில் நிலைப்படுத்த முன்வருவோமாக! இறையாட்சி விடியலுக்கு உரம்சேர்க்கும் அன்பியமாய் ஆவோமென நம்மை அர்ப்பணிப்போமாக!

உங்கள் அனைவருக்கும் அன்பிய எழுச்சி வார, அன்பிய தின நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

*- அன்பியப் பணியில்,*
*அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு,*
*இயக்குனர்,*
*அன்பிய ஆணைக்குழு*
*மன்னார் மறைமாவட்டம்.*

## முத்தரிப்புத்துறையில்

# நூல் வெளியீட்டு விழா




பங்குத்தந்தை அருட்பணி. டெனி கலிஸ்ரஸ் அவர்கள் நூலாசிரியரிடமிருந்து நூலைப் பெற்றுக்கொள்கிறார்.



முத்தரிப்புத்துறை மண்ணின் மைந்தன் அருட்பணி. அன்ரன் லியோன் அவர்கள் மங்கள விளக்கேற்றுகின்றார்

முத்தரிப்புத்துறையைப் பிறப்பிடமாகக்கொண்ட திருவாளர் லூயிஸ் அலோசியஸ் அவர்களினால் *'முத்தூர் சிப்பியனின் சிப்பிக்குள் முத்து'* என்னும் வரலாற்று நூல் வெளியீட்டு விழா கடந்த மே மாதம் 11ஆம் திகதி முத்தரிப்புத்துறைப் பங்குத்தந்தை அருட்பணி. டெனி கலிஸ்ரஸ் தலைமையில் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

முத்தரிப்புத்துறையின் வரலாற்றினையும், தலைமுறையினையும் எடுத்துக்கூறும் இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்டச் சமூகத்தொடர்பு அருட்பணி மையம் 'கலையருவி'யின் இயக்குனரும், 'மன்னா' பத்திரிக்கை ஆசிரியருமான அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாகக் கீளியன்குடியிருப்புப் பங்குத்தந்தையும் முத்தரிப்புத்துறை மண்ணின் மைந்தனுமாகிய அருட்பணி. அன்ரன் மரியதாஸ் லியோன், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செல்வம் அடைக்கலநாதன், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எம். சியான், அவருடைய பாரியார், திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தைச் சேர்ந்த அருட்சகோதரி ஜசிந்தா புஸ்பராணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமாகியது. தொடர்ந்து முத்துச்சிற்பி அவர்களால் இயற்றப்பட்ட முத்தரிப்புக் கீதம் இசைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பங்குத்தந்தை அவர்களின் தலைமை உரையும் ஆசி உரையும் இடம்பெற்றது. பின்பு நூல் வெளியீடு செய்யப்பட்டது. முதல் பிரதியை நூல் ஆசிரியர் பிரதமவிருந்தினருக்கு வழங்கினார். தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள், வருகை தந்த பிரமுகர்கள், மக்கள் ஆகியோர் நூலாசிரியரிடமிருந்து நூற்பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

அடுத்து நூல் நயப்புரையை திருமதி. எம்.எம். சியான் அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புரை வழங்கிய அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் தனது உரையிலே, முத்தரிப்புத்துறையின் வரலாறுகளை நுணுக்கமாக, ஆழமாக அறிய வத்திக்கானில் உள்ள சுவடிகள் திணைக்களத்திற்கு செல்ல வேண்டும் எனக் குறிப்பிட்டார். போர்த்துக்கேயர் காலத்திலும், ஒல்லாந்தர் காலத்திலும் இப்பிரதேசங்களில் பணியாற்றிய மிசனரிமார் எழுதிய கடிதங்களில் முத்துக்குளித்தல், யானை பிடித்தல் போன்ற விடயங்கள் குறித்து தெளிவாக எழுதி உரோமையில் இருந்த தமது மேலதிகாரிகளுக்கு அனுப்பிவைத்திருந்தனர். அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தினால் முசலிப் பிரதேசம் தொடர்பான பல அரிய தகவல்களைப் பெறமுடியும் எனக் குறிப்பிட்டார். இறுதியாக சிறு கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. மரியாள் ஆலய அருட்பணிச்சபைச் செயலாளரின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுபெற்றது. - தகவல் - அ. சாள்ஸ் மொறாய்ஸ்

## முத்தரிப்புத்துறையில்

# வருடாந்த மேதின விழா



முத்தரிப்புத்துறைப் பங்கில் 60வது மேதின வருடாந்த திருவிழாத் திருப்பலி கடந்த 01.05.2014 அன்று அலைகடல் அருகில் அமைக்கப்பட்டிருந்த அழகுறு பலிப்பீடத்தில் முத்தரிப்புத்துறைப் பங்குத்தந்தை அருட்பணி. டெனி கலிஸ்ரஸ் தலைமையில் இடம்பெற்றது. பண்டிவிரிச்சான் பங்குத்தந்தை அருட்பணி. ஆரோக்கியம் அடிகளாரும் திருப்பலியில் இணைந்துகொண்டார்.

பின்பு புனித சூசையப்பருடைய திருச்சுருபம் கடலுக்குள் கொண்டுசெல்லப்பட்டு பங்குத்தந்தையினால் கடல் ஆசீர்வதிக்கப்பட்டது. கடற்கரையில் புனித சூசையப்பர் திருச்சுருபத்தினால் ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. மேதினத்தைச் சிறப்பிக்கும்முகமாக விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன.

- தகவல் : எ. சாள்ஸ் மொறாய்ஸ்.

## வங்காலையில்

# கிறிஸ்தவ பாடத்தில் 100% A தர சித்தி

2013ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா.தர) பரீட்சையில் மன்/ புனித ஆனாள் ம.ம வித்தியாலய மாணவர்கள் 46 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். இதில் 46 மாணவர்களும் கிறிஸ்தவம் (றோ.க) பாடத்தில் A-தர சித்தி பெற்றுள்ளனர். வங்காலையினுடைய கத்தோலிக்க விசுவாசத்தின் ஆழமான பெருமையை இம்மாணவர்கள் இப்பரீட்சையில் வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களும், அதிபர்களும் பாராட்டுக்குரியவர்களாவர்.

- தகவல் : தமிழன்பன், வங்காலை

## அன்பின் சகோதரிகள் சபையினரின்

# துறவற வாக்குத்தத்தம்

*நானாட்டான் பங்கு கிறின்சி பாவிலுப்பிள்ளை*
*நித்திய வாக்குத்தத்தம்*
*அளவக்கைப் பங்கு ஜெயாலினி பிலிப்நேரிஸ்*
*முதல் வாக்குத்தத்தம்*



கடந்த மே மாதம் 03ஆம் திகதி காலை 10.30 மணியளவில் கேகாலை புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற திருப்பலியின்போது யேசு மரியின் அன்பின் சகோதரிகள் சபை அருட்சகோதரிகள் பாவிலுப்பிள்ளை கிறின்சி (நானாட்டான் பங்கு), பிறசங்கிக்கா டில்றுக்ஷி கொஸ்ரா (வனத்துவில்லு பங்கு), பிறியங்கா குணவர்த்தன (பத்தேகம பங்கு) ஆகியோர் தங்கள் நித்திய வாக்குத்தத்தத்தையும், நவசன்னியாச சகோதரிகள் நிலுக்ஷி கிரோசிமா விஜயசிங்க (மாத்தறை பங்கு) பிலிப்பு நேரிஸ் ஜெயாலினி (அளவக்கை பங்கு), மரியதாசன் றொசாந்தினி (மாதகல் பங்கு) ஆகியோர் தங்கள் முதல் வாக்குத்தத்தத்தையும் சபையின் இலங்கை மகாணத்தலைவி அருட்சகோதரி தீப்திக்கா சில்வா முன்னிலையில் அறிக்கையிட்டு வெளிப்படுத்தினர்.

கிறிஸ்துவின் தியாகப் பாதையில் பயணிப்பதற்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்திருக்கும் இவ்வருட்சகோதரிகளுக்காக வேண்டுவோம். அறுவடையின் ஆண்டவர் இவ்வுலகின்மீது இரக்கம்கொண்டு மேலும் அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்புவாராக! குடும்பத்திற்கென அர்ப்பணிக்கப்பட்ட இவ்வாண்டில் நமது குடும்பங்களில் இருந்து அழைத்தல்கள் பெருகவேண்டுமென்று செபிப்போம்.

- தகவல் : நிவேதனம், படித்தோட்டம், மன்னார்.

## எழுத்தூர் பங்கில் தவக்கால நிகழ்வுகள்

கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு மன்னார் மறைக்கோட்டத் தவக்காலத் தியானக் குழுவினர் அருட்பணி. யூட் குருஸ், அருட்பணி. நெவின்ஸ் அருட்பணி. டக்ளஸ், அருட்பணி. ஜெயசீலன் ஆகியோர் இணைந்து எழுத்தூர் அடைக்கல அன்னை ஆலயத்தில் தவக்கால தியானத்தை நடத்தினர்.

கடந்த மார்ச் மாதம் 27ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. றெஜினோட் அவர்களால் பெற்றோர் பிள்ளைகளுக்கான தவக்காலத் தியானம் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வு மாலை 6.00 மணிக்குத் திருப்பலியுடன் நிறைவுற்றது. மார்ச் மாதம் 29ஆம் திகதி கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலத்திற்கு எழுத்தூர் பங்கு மக்கள் தவக்கால யாத்திரை சென்று திருச்சிலுவைப் பாதை மற்றும் திருப்பலி ஆகியவற்றில் பங்கெடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அந்தோனியாரின் அற்புதங்கள்

அருட்சகோதரி லூட்ஸ் F.M.M, புனித திரேசா கன்னியர் இல்லம், மட்டக்களப்பு



புனித அந்தோனியார் இறைவன்மேல் கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையால் அளவிடற்கரிய அற்புதங்களைப் புரிந்தார். அவர் இம்மண்ணில் வாழ்ந்தபோதும் எண்ணற்கரிய அற்புதங்களைப் புரிந்தார், இந்த மண்ணிலிருந்து மறைந்தபின்பும் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு பலகோடி அற்புதங்களைப் புரிந்துவருகிறார். இதற்கு அடிப்படைக் காரணம் அவர் இறைவன்மேல் கொண்டிருந்த நம்பிக்கையாகும்.

மக்களின் அன்றாட வாழ்விலே தாங்கமுடியாத நோய், நொடிகள், சோதனைகள், அவலங்கள், விபத்துக்கள் இவற்றிலிருந்து விடுதலைபெற அவசியமானது ஆழ்ந்த இறை நம்பிக்கையாகும். புனித அந்தோனியார், "எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும்செய்ய எனக்கு ஆற்றல் உண்டு" (பிலிப்பு 4:13) என்ற நம்பிக்கையால் தன்னைத் தயவுடன் நாடிவரும் பக்தர்களுக்கு பரிவுடன் அற்புதங்கள் புரிவதில் ஆனந்தம்கொண்டார்.

புனிதரின் வாழ்வு செபத்தின் மூலமும் கடுந்தவத்தின் மூலமும் இறைவனோடு இறுகப்பிணைந்திருந்தது. இவர் பெரும் செல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தனக்குக் கிடைத்த தனவந்தர் வாழ்வை விட்டு விலகி, புனித பிரான்சிஸ் அசிசியாரைப் பின்பற்றி கிறிஸ்துவைப்போல் ஏழ்மையில் விருப்பம் கொண்டார். கல்லைத் தலையணையாகவும் தரையைத் தன் படுக்கையாகவும் பயன்படுத்தித் தவம்புரிந்தார். ஓய்வின்றி சேவையும் செய்தார். அவரது செப, தப, வாழ்வுதான் அவரை ஆண்டவன்மேல் அசைக்கமுடியாத நம்பிக்கையில் வேரூன்ற வைத்தது. அந்தச் சக்தியால்தான் பல கோடி அற்புதங்களைப் புரிந்தார்; இன்னும் புரிந்துகொண்டே இருக்கிறார். அவர் புரிந்த அற்புதங்களிலே அதிகம் பிரசித்திபெற்றது, இறந்தோரை மீண்டும் உயிர்பெறச் செய்ததாகும்.

அந்தோனியார் பாரில் பரிசுத்தராய் வாழ்ந்தபோது அவரது கருத்தாழமிக்க மறையுரையைக் கேட்பதற்கு பக்தர்கள் தம் பணிகளை மறந்து பெருந்திரளாக திரண்டுவருவது வழக்கமாய் இருந்தது. ஒருநாள் பெண்ணொருத்தி தன் குழந்தையைத் தொட்டிலில் படுக்கவிட்டு புனிதரின் மறையுரையைக் கேட்க விரைந்தோடிச் சென்றாள். அவரது சிறந்த கவர்ச்சியான மறையுரையில் மனதைப் பறிகொடுத்தவள் பலமணி நேரத்தின் பின்னர் மறையுரை முடிந்ததும் தன் இல்லத்திற்கு ஓடோடிச் சென்றாள். தன் குழந்தையைப் பார்க்கத் தொட்டிலை அணுகினாள். அந்தோ பரிதாபம்! குழந்தை இறந்துவிட்டது! அழுதுபுரண்டாள்; புனிதரைக்காண கணப்பொழுதில் சென்றாள். அவர் அப்பெண்ணின் கண்ணீரைக் கண்டு கண்கலங்கினார். பரிவுடன் அவளிடம் அனைத்தையும் கேட்டறிந்தார். கண்களைமூடிக் கடவுளுடன் கணப்பொழுதில் ஒன்றித்தார். இறைவன்மேல் நம்பிக்கைகொண்டு உருக்கமாகச் செபித்தார். என்னே அதிசயம் .....! இறந்திருந்த குழந்தை உயிர்பெற்றெழுந்தது. அந்த மாது அந்தோனியாருக்கு நன்றிகூறி இல்லமேகினாள்.

புனித அந்தோனியார் விசித்திரமான விந்தைமிகு அற்புதச் செயல்களை செய்தார். இவைகள் இதுவரை எந்தப் புனிதராலும் செய்யப்பட்டதாக நாம் அறியவில்லை. அவர் இறைவன்மேல் கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையால் இந்த அற்புதங்களைப் புரிந்தார். யெமோனே என்ற இடத்தில் சிறிய துறவற மடம் ஒன்று புனிதரின் மேற்பார்வையில் கட்டப்பட்டு வந்தது. அக்கட்டிடத்தைக் கடந்து சென்றவர்கள் கட்டடப்பணியில் சிறிது உதவி செய்துவிட்டுப் போவது வழக்கமாய் இருந்தது. ஒருநாள் ஒரு வாகனத்தில் பிரயாணிகள் பயணம் செய்துகொண்டிருந்தனர். புனிதர் அவர்களை அன்புடன் அணுகி கட்டட வேலையில் கரம்நீட்டி உதவுமாறு கேட்டார். உடனே அங்கிருந்த ஒருவர், "என் மகன் இறந்துவிட்டான். மரித்தவனின் உடலைக் கொண்டுசெல்கின்றோம்" எனப் பொய் கூறினான். தான் புனிதரை ஏமாற்றிவிட்டதாகப் பெருமிதம் கொண்டு வாகனத்தில் ஏறினான். தன் மகனைத் தலைவன் தட்டி எழுப்பினான் எழவில்லை, எட்டிப்பார்த்தான் தன் மகன் உண்மையாகவே இறந்துகிடந்தான். தந்தை செய்வதறியாது திகைத்தான். வாகனத்தைத் திருப்பிப் புனிதரைத் தேடிச்சென்றான். தனக்கு நிகழ்ந்தவற்றை விளக்கி புனிதர்முன் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டான். தான் செய்த தவறை எண்ணி வருந்தினான். அவனின் பரிதாப நிலையைப் பார்த்து உள்ளம் உருகி உருக்கமாக இறைவன்மேல் நம்பிக்கைகொண்டு செபித்தார். இறந்த இளைஞன் உயிர்பெற்றெழுந்தான். தந்தை மனம் மாறினான்.

புனித அந்தோனியார் பாரில் பரிசுத்தராய் வாழ்ந்தபோது பரமன்மேல் கொண்டிருந்த நம்பிக்கையால் பல கோடிப் புதுமைகள் புரிந்தார். அதனால் அவரைக் கோடி அற்புதர் என அன்புடன் அழைக்கின்றோம்.

அற்புதங்களைப் பெற்றுக்கொண்டோர் தன்பக்கம் சாரவேண்டும் என புனிதர் ஒருபொழுதும் விரும்பவில்லை. தான் புரியும் அற்புதங்களின் மூலம் தன் பக்தர்கள் இறைவன் பக்கம் செல்ல வழிகாட்டினார். பலர் மனம்மாறி இறைவனை அறிந்து உண்மைக் கத்தோலிக்கராயினர். இன்றும் அதையே நம் அற்புதர் எதிர்பார்க்கின்றார்.

ஒருநாள் புனித அந்தோனியார் தன் கரங்களால் கஷ்டப்பட்டு எழுதிய புத்தகத்தை அவருடன் வாழ்ந்த சகோதரர் ஒருவர் திருடிச் சென்றுவிட்டார். புனிதர் இறைவனிடம் நம்பிக்கையுடன் வேண்டினார். புனிதரின் நூலைத் திருடிச்சென்றுகொண்டிருந்த அருட்சகோதரரை மிக்கேல் தூதன் இடைமறித்து வாளுடன் தோன்றிப் புனிதரின் நூலைத் திருப்பிக்கொடுக்கும்படி வற்புறுத்தினார். உடனே அருட்சகோதரர் புனிதரிடம் நடந்ததை விபரித்து அந்நூலைப் புனிதரிடம் கொடுத்துவிட்டு மன்னிப்புக் கேட்டார்; மனம் மாறினார்.

புனித அந்தோனியார் உண்மை, நீதி, நேர்மையை நிலைநாட்ட அரும்பாடுபட்டார். ஒருதடவை புனிதரின் தந்தைமேல் அவர் புரியாத ஒரு கொலைக்குற்றத்தைச் சுமத்தி சிறைச்சாலையில் பூட்டிவைத்தனர். இந்த அநீதச் செயலைச் செவிமடுத்த புனிதர், சிறைச்சாலையை நோக்கி விரைந்துசென்றார். கொலை செய்யப்பட்டவனின் உடலை வெளியே எடுத்து இறந்தவனை உயிருடன் எழுப்பி அவனைக் கொன்றது யார் என வினவினார். அவன் அங்கிருந்த வேறு ஒருவன்தான் கொலையாளி எனக் காட்டிவிட்டு மீண்டும் இறந்துவிட்டான். புனிதரின் தந்தை நிரபராதி எனக்கூறி அதிகாரிகள் அவரை விடுதலை செய்தனர். அவர் மகிழ்வுடன் இல்லமேகினார்.


புனித அந்தோனியார் இறைவன்மேல் கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையால் அவர் உயிர்நீத்தும் இன்னும் எண்ணிலடங்கா புதுமைகள் செய்துவருகிறார். குழந்தைகள் இல்லாதோருக்கு குழந்தைச் செல்வத்தைக் கொடுக்கின்றார்.

இது எங்கள் குடும்பத்தில் நிகழ்ந்த உண்மையான அற்புதம். என் பெற்றோர் திருமணமாகி பல வருடங்கள் குழந்தைச் செல்வமின்றிப் புனித அந்தோனியாரை அண்டினர். எனது தாய் புனிதரின் கரங்களிலுள்ள குழந்தை இயேசுபோல் ஒரு குழந்தையைத் தரும்படி கண்ணீரோடு வேண்டினார்கள். ஓர் ஆண் குழந்தை கிடைத்தது. அவரைத் தொடர்ந்து என் தாய் ஐந்து குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். எமது குடும்பம் புனித அந்தோனியார் மூலம் இறைவனில் தளரா நம்பிக்கைகொண்டு வாழ்ந்துவருகிறது.

புனிதர் இறைநம்பிக்கையால் அற்புதங்கள் செய்து அதன்மூலம் பல பிறமதத்தினர் மனம்மாறி கத்தோலிக்கராகி இறையேசுவில் தளராத நம்பிக்கைகொள்ள வைக்கிறார். எமது மாமனார் ஒருவர் இந்து சமயத்தைச் சேர்ந்தவர். ஆனால் எனது தாயார் மூலம் புனித அந்தோனியாரில் பற்றுதல்கொண்டார். தமது கிராமத்து வீட்டுமுன்றலில் புனித அந்தோனியார் சுருபம் ஒன்றை வைத்து செபித்து வந்தார். அக்கிராமத்தில் பலர் இந்து மதத்தினர். ஆனால் அந்தோனியார்மேல் பக்திகொண்ட எம் மாமனார் வீட்டுமுன்றலில் இருந்த அந்தோனியாருக்கு மெழுகுவர்த்தி கொழுத்துதல், மாலை போடுதல் உணவுப்பண்டங்கள் பரிமாறுதல் போன்றவற்றைச் செய்துவந்தார். இப்படியாக புனிதரின் பக்தி நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி இன்று புனிதரின் பெயரால் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. எனது மாமனார் கத்தோலிக்கராக மதம்மாறி நல்ல மரணமடைந்தார். புனித அந்தோனியாரின் புதுமைகள் மூலம் இறைவன்மேல் அசைக்கமுடியாத நம்பிக்கைகொண்டு வாழ்வோம்.

# தமிழ் மக்களின் லூர்து திருத்தல யாத்திரை 25வது வருட நிறைவு

எம். எம். ஜெயரெட்னம். பிரான்ஸ்



பிரான்ஸ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் இவ்வருடம் தனது லூர்து யாத்திரையின் 25 வருட நிறைவைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துவருகின்றது. இவ்வாண்டு யூன் மாதம் 7ம், 8ம், 9ம்,10ம் தேதிகளில் லூர்து திருத்தலத்தில் நடைபெறவிருக்கும் யாத்திரையில் வழமைபோல் ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ்மக்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இம்முறையும் டென்மார்க், இங்கிலாந்து, கனடா, இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்து அதிகளவு மக்கள் வருகைதந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆரம்பத்தில் இந்த யாத்திரை தமிழ் மக்களின் தேசிய யாத்திரையாகவும், 2005இல் இருந்து இது தமிழ் மக்களில் சர்வதேச யாத்திரையாகவும் லூர்து பேராலய நிர்வாகத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து தமிழ்மொழியில் லூர்து கெபியில் திருப்பலி நிறைவேற்றுகின்றனர். திருச்சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை திருச்செபமாலைப் பவனி போன்றவையும் நடைபெற்று வருகின்றன. இத்தினங்களில் வரும் ஞாயிறு தினத்தில் பண்பாட்டுத் திருப்பலிவேளையில் தமிழ்க் கலாசாரப்படி ஆராத்தியும் நடைபெறுவது வழக்கம். இப்பண்பாட்டுத் திருப்பலியில் 12 அல்லது 15 ஆயர்கள் 100க்கும் மேற்பட்ட அருட்பணியாளர்கள் கலந்துகொள்கின்றனர். பற்பல நாடுகளில் இருந்து மரியன்னையைச் சித்தரிக்கும் கொடிகள், தமிழ்மொழியில் எமது பணியகக் கொடிகள், இங்கிலாந்து பணியகக் கொடிகள் போன்றவற்றைத் தாங்கிச்செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும். இது அகில உலகில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்ளும் சிறப்பு நிகழ்வாகும். 2008ஆம் ஆண்டு இதேதினத்தில் நடைபெற்ற லூர்து திருத்தலத்தின் 150ஆவது ஆண்டு விழாவை இந்திய, இலங்கை ஆன்மீகப் பணியகங்கள் இணைந்து சிறப்பாகக் கொண்டாடின. அன்றைய தினம் திருப்பலி நிறைவேற்றிய 15க்கும் மேற்பட்ட ஆயர்கள் 200க்கும் மேற்பட்ட அருட்பணியாளர்கள், துறவிகள், தமிழ் மக்கள் யாவரையும் நாதஸ்வர மேள தாளத்துடன் ஊர்வலமாக லூர்து கெபிக்கு அழைத்துச்சென்று மரியாதை செலுத்தியது அனைத்து மக்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டதாகும்.

..............................

லூர்து திருத்தலம் உலகப் பிரசித்தி பெற்றதற்கும், சர்வதேச யாத்திரைத்தலமாக விளங்குவதற்கும் அடிப்படையான காரணிகள் பல இருந்தாலும் விசேடமாக முதல் 7 காரணிகள் லூர்து பேராலய நிர்வாகத்தினால் முன்வைக்கப்பட்டுள்ளன:

1. புனித பெனடெற்றின் வாழ்க்கை முறையும் மரியன்னையின் காட்சிகளும்.
2. பேராலயங்களிலும், மற்றச் சிற்றாலயங்களிலும் காணப்படும் கலை வண்ணம், ஓவியங்கள் நிறைந்த கண்ணாடி யன்னல்கள்.
3. புனித நீருற்றும் நோயாளர் தரிசனமும்.
4. திருச்சிலுவை பாதை
5. லூர்து கெபி
6. அகில உலகில் மரியன்னையின் காட்சிகளில் விசேடமானது.
7. நிலத்தின்கீழ் பேராலயம்

இவை லூர்து பேராலய நிர்வாகத்தில் அங்கீகரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டவை. இவற்றைவிட லூர்து திருத்தலத்திற்கென்று விசேட அம்சங்களும் இருக்கின்றன.

- நோயாளர்கள் பவனி
- மரியன்னையின் மெழுகுவர்த்திப் பவனி
- புனித நீருற்றில் குளிக்கும் காட்சி
- யேசுவே எங்கள் நம்பிக்கையின் அடித்தளம் என்று மரியன்னை காட்சி கொடுத்த இடத்தை கன்மலையை முத்தமிடும் காட்சி.
- நோய்வாய்ப்பட்டிருக்கும் சகோதர சகோதரிகளை ஆன்மீக வாஞ்சையுடன் பராமரிக்கும் துறவிகள், இளைஞர், யுவதிகள் சமூக ஆர்வலர்கள்... இதுபோன்ற பல விடயங்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

### மே 11 உலக தேவ அழைத்தல் தினம்

# 'இதோ நான் இருக்கிறேன் என்னை அனுப்பும்' (எசா 6:8)

### கொழும்பு உயர் மறைமாவட்ட இயக்குன் அருட்பணி. ஜே. டி. அந்தனி அவர்களின் செய்தி

தேவ அழைத்தல்களுக்காகச் செபிக்கும் சர்வதேச தினமாக மே 11ஆம் திகதி திருச்சபையால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இத்தினத்தை முன்னிட்டு தேவ அழைத்தல்களுக்கான கொழும்பு மறைமாவட்ட இயக்குனர் அருட்பணி. ஜே. டி. அந்தனி அடிகளாரின் செய்தி கீழே தரப்படுகின்றது:




இவ்வருடம் இதன் 51வது தினத்தை திருத்தந்தை "உண்மைக்குச் சாட்சியாக தேவ அழைத்தல்கள்" எனும் தொனிப்பொருளில் சிறப்பிக்க அழைத்திருந்தார். திருத்தந்தை 6ஆம் பவுல் அவர்களே நல்லாயன் இயேசுவின் அழைப்பிற்கு இணங்க இத்தினத்தை ஆரம்பித்தார்.

திருச்சபையை நேசிக்கும் எவரும், நல்ல தாராள மனமுள்ள பெண்களும், ஆண்களும் குருக்களாக, துறவிகளாக திருச்சபைக்குள் வரவேண்டும் என எதிர்பார்க்கின்றனர். கிறிஸ்துவைப் பின்பற்றி கடவுளை மாத்திரமே அன்புசெய்யும், உலகின் வெறுமைகள், அதிகாரம், செல்வங்கள் போன்றவற்றை வழிபடாதவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தேவ அழைத்தலானது கடவுளின் உன்னதமான இலவச கொடையாகும். "நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்" என்கிறார் ஆண்டவர். இதன்படி சிலர் அனைத்தையும் துறந்து அவரைப் பின்செல்பவர்களாகவும். மேலும் சிலர் அவரை முழுமையாகப் பின்பற்ற மனமில்லாதவர்களாகவும் உள்ளனர். நற்செய்தியில் வரும் பணக்கார இளைஞனைப்போல் இவர்கள் இருக்கிறார்கள். திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதற்கிணங்க, பல இளம் பிள்ளைகளுக்கு தேவ அழைத்தல் இருந்தாலும், ஏதோ ஒரு விடயம் அவர்களைத் தடுக்கிறது. ஆகவே எமது செபம் அத்தடைகளை அறுத்தெறிந்து சுதந்திர மனிதர்களாக அவர்கள் ஆண்டவரைப்பின்பற்ற அவர்களுக்கு உதவி செய்யும். "அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை நோக்கி மன்றாடுங்கள்" (மத் 9:38) என்கிறார் இயேசு. எல்லோருடைய அழைப்பிற்குப் பின்னும் ஏதோ ஒருவரின் ஆழமான செபம் இருப்பதை நாம் காண்கின்றோம். ஆகவே உங்களது செபம் பலனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

தேவ அழைத்தலைப் பேணி வளர்ப்பது கிறிஸ்தவக் குடும்பங்களின் தலையாய கடமையும் உரிமையுமாகும். குடும்பங்களே அப்பிள்ளையின் முதல் குருமடமாக, கன்னியர் மடமாக மாறவேண்டும். இவ்வாறாக, பிள்ளைகளின் இதயத்தில் செபவாழ்வுக்கான வாஞ்சையையும், அமைதியில் ஆண்டவரின் குரலைக் கேட்கும் தனிமையையும் வளர்த்தெடுக்க வேண்டும்.

என் அருமையான பிள்ளைகளே, உங்களது கண்களை ஏறெடுத்துப் பார்த்து உங்கள்முன் இருக்கும் அறுவடையைக் காணுங்கள். கிறிஸ்துவைப் பிரமாணிக்கமான முறையில் பின்பற்றுவதே அதி உன்னதமான அழைப்பாகும் என்பதை மறந்துவிடாதீர்கள். ஆண்டவரிடம் கேளுங்கள். அவரைப் பின்பற்ற அவர் உங்களுக்கு உதவிடுவார். துணிவுடனும், நம்பிக்கையுடனும் அவரைப் பின்பற்றுங்கள்.

தேவ அழைத்தல்களின் அன்னையாம் மரியாள் எமக்காகப் பரிந்துபேசி எம்மைப் பேணி வளர்ப்பாராக.

### தேசிய பொதுநிலையினர் ஞாயிறு தினம் 18.05.2014

## தேசிய இயக்குனர் அருட்தந்தை லியோ பெரேரா அடிகளாரின் செய்தி

பாஸ்கா காலத்தில் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பிலும் அதனால் அவர் மனுக்குலத்திற்கு தந்த நம்பிக்கையிலும் மகிழ்ந்திருக்கும் கத்தோலிக்கராகிய எமக்கு, அதே காலத்திலேயே இத்தேசிய பொதுநிலையினர் ஞாயிறு தினத்தையும் நினைவுகூருவது மிகவும் மகிழ்ச்சிக்கும் பெருமைக்குமுரிய விடயமாகும்.

திருமுழுக்கினால் இறைவனின் பிள்ளைகளாக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும், இயேசுவின் உயிர்ப்பையும் அதன் மூலம் பாவத்திலிருந்து அவர் எமக்குப் பெற்றுத்தந்த விடுதலைச் செய்தியையும் மற்றவர்களுக்குப் பறைசாற்றும் பொறுப்பை எமக்கு நினைவுபடுத்துவதாக இந்தப் பொதுநிலையினர் ஞாயிறு தினம் அமைகிறது.

இந்த நாளுக்குரிய வாசகங்களானது வளங்களின் சமபகிர்வின் மட்டில் எமக்குரிய பொறுப்பையும் (திப 6: 1-7), ஆண்டவரின் பிரசன்னத்திலிருந்து அவரது இறை அரசைக் கட்டியெழுப்பவும் (1பேது 2:4-9), இயேசுவே இறைவனை எமக்குக் காட்டும் வழி என அவரில் முழுமையான விசுவாசம் கொண்டு (யோவா 14:1-12) நாம் வாழும் சமுதாயத்தில் எழும் சவால்களை இறைவனின் துணைகொண்டு முகம்கொடுக்கவும் எம்மை அழைத்து நிற்கின்றது.

இன்று நாம் வாழும் சமுதாயத்தில் பொதுநிலையினர் எதிர்கொள்ளும் சவால்கள் எவை? எங்கு பார்த்தாலும் இலஞ்ச ஊழல், நலிந்தவர் மற்றும் இயற்கையின் மட்டில் அநீதி, சுயநல மனப்பான்மை, பாரபட்சம், வாழ்க்கைச் சுமை, வறுமை, சுரண்டல் என்பன பெருகிவருவது கண்கூடு.

அதிகாரத்தில் உள்ளவர்களின் பொறுப்பற்ற தன்மையாலும் அவர்களின் அதிகாரத் துஸ்பிரயோகங்களாலும் உண்மைக்காகவும் நீதிக்காகவும் உழைப்போரது குரல்கள் மழுங்கடிக்கப்படுவதோடு அவர்கள் பயமுறுத்தல்கள் மத்தியில் வாழும் நிலையும் உருவாகியுள்ளது. இவ்வாறு எமது தேசம் பாவத்தில் மூழ்கி வெறுப்பையும் பொறாமையையும் சந்தேகங்களையும் கருத்தரித்துள்ளதுடன், பட்டம், பதவி, பணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## அருட்பணி. ஜெறாட் டி றொசாய்றோ அடிகளாரின் "ஆசியத் திருச்சபையில் நற்செய்தி அறிவிப்புப்பணி"

# கலாநிதிப்பட்ட ஆய்வேடு நூலாக வெளியீடு

அமலமரித் தியாகிகள் சபையின் கொழும்பு மாகாணத்தைச் சேர்ந்த அருட்பணி. ஜெறாட் டி றொசாய்றோ அடிகளாரின் : "ஆசியச் திருச்சபையில் நற்செய்தி அறிவிப்புப்பணி" என்ற நூல் அண்மையில் யாழ்ப்பாணம் மறைக்கல்வி நிலையத்தில் வெளியிடப்பட்டது. யாழ் பல்கலைக் கழகத்தில் இவர் சமர்ப்பித்திருந்த கலாநிதிப் பட்ட ஆய்வேட்டையே இவர் நூலுருவில் கொண்டுவந்துள்ளார். இந்தியாவின் 'நம் வாழ்வு' என்ற சஞ்சிகையின் வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

இளைப்பாறிய தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் எஸ். ஜெபநேசன் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்ற மேற்படி நூல் வெளியீட்டு நிகழ்வில் அமல மரித்தியாகிகளின் சபையின் வடமாகாண முதல்வர் அருட்பணி. போல் நட்சத்திரம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.


இந்நூலின் முதற்பிரதியை நீண்ட காலம் கிறிஸ்தவ பாட ஆசிரியராக இருந்து அரும்பணி ஆற்றிய ஆசிரியை மல்லிகா அவர்கள் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. நூலுக்கான ஆய்வுரைகளை அருட்பணி. ம. வி. இ. இரவிச்சந்திரனும், பொதுநிலையினர் நோக்கிலிருந்து கவித்தென்றல் S.A. அழகுராஜா அவர்களும் வழங்கியிருந்தனர்.

ஆசிய ஆயர் பேரவையின் கூட்டமைப்பு (FABC) உருவாக்கப்பட்டு நாற்பது ஆண்டுகள் கழிந்துவிட்டநிலையில் அவர்களது போதனைகள் பல வெளிவந்தும் அவை தமிழ் வாசகர்களுக்கு எட்டாக் கனியாகவே அமைந்திருந்தன. அப்போதனைகளில் நற்செய்தி அறிவிப்புப்பற்றிய போதனைகளைத் தமிழில் தொகுத்துத் தந்ததன் மூலம் இந்நூலானது சீரிய தமிழில் இறையியலை அறிய முயல்வோர்க்கு பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது என்று ஆய்வுரை நிகழ்த்திய இரவிச்சந்திரன் அடிகளார் குறிப்பிட்டார்.

இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் ஜெராட் டி ரொசாய்றோ அவர்கள் நிகழ்த்தினார். தமிழில் இறையியலாக்கம் செய்யப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி நின்றார்.

### 'அன்பின் உள்ளார்ந்த குரல்'

## ஸ்ரலின் அடிகளாரின் மொழிபெயர்ப்பு நூல்



யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. இராசேந்திரம் ஸ்ரலின் அடிகளார், ஹென்றி யே. எம். நௌவின் எனும் புகழ்பெற்ற கத்தோலிக்க குரு எழுதிய மிகப்பிரபல்யமான *The Inner Voice of Love* எனும் நூலை ***'அன்பின் உள்ளார்ந்த குரல்'*** என்ற பெயரில் சிறப்பாக மொழிபெயர்த்து அழகுற வெளியிட்டுள்ளார்.

இந்நூலானது ஆன்மீகம், இறை அழைத்தல், குழும வாழ்வு, ஆளுமை வளர்ச்சி, உறவு மேம்படுத்தல், நட்பு போன்ற முக்கிய அம்சங்கள் பற்றியதாக அமைந்துள்ளது. இந்நூலானது எவருடனும் எக்காலமும் பேசி வாழ்வை மேம்படுத்தக்கூடியது. ஒவ்வொருவரும் நிச்சயம் வாசிக்கவேண்டிய நூல். இது அன்பளிப்புச் செய்வதற்குரிய சிறந்த நூல்.

நூலின் விலை 180/= மட்டுமே.

**கிடைக்குமிடங்கள்.**

1. புனித வளனார் அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
2. செபமாலைக் கடை ஆச்சிரமம், கோயில்வீதி, யாழ்ப்பாணம்.
3. கிளரீசியன் புத்தகக்கடை, சின்னக்கடை வீதி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
4. றோசா மிஸ்ரிக்கா கடை, சின்னக்கடை வீதி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
5. செபமாலைக்கடை, புனித அந்தோனியார் ஆலயம், மானிப்பாய்.
6. செபமாலைக் கடை, புனித அந்தோனியார் ஆலயம், சுண்ணாகம்.
7. கலையருவி, சமூகத்தொடர்பு அருட்பணி மையம், பெற்றா, மன்னார்.

### குருநகர் வின்சன் டி போல் சபையினரின்

## 25வது ஆண்டு நிறைவு



யாழ் குருநகர் புனித இயாகப்பர் ஆலய புனித வின்சென் டி போல் சபையின் பெண்கள் பந்தியினர் கடந்த 11.05.2014 அன்று தமது 25வது ஆண்டு நிறைவைச் சிறப்பாகக் கொண்டாடினர். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

### குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும்

## மட்டக்களப்பு குருமுதல்வர்

மட்டக்களப்பு மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை பிரான்சிஸ் சேவியர் டயஸ் அவர்கள் கடந்த மார்ச் திங்கள் 14ஆம் நாள் குருத்துவ வாழ்வில் இருபத்து ஐந்து ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளி விழாக் கண்டார். இதனை முன்னிட்டு ஏப்ரல் 26ஆம் நாள் தாண்டவன்வெளி முதியோர் இல்லத்தில் நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆயர், குருக்கள் உட்பட பலரும் இத்திருப்பலியில் கலந்துகொண்டனர்.

தமது 25 ஆண்டுகள் குருத்துவப்பணி வாழ்வில் பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளில் டயஸ் அடிகளார் ஈடுபட்டிருந்தார்.

இன்று பங்குகள்தோறும் உற்சாகமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் C.Y.A என்று அழைக்கப்படும் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் அடிகளாருடைய வழிகாட்டலில்தான் புதிதாக உருவாக்கப்பட்டு இயங்கத்தொடங்கியது.

அதுபோல் அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கச் செயற்பாடுகளும் அடிகளாருடைய பொறுப்பில் இருந்த காலத்தில் புதுவடிவமும், உற்சாகமும் பெற்றுச் செயற்படத் தொடங்கியதை மறந்துவிட முடியாது.

தொடர்ந்து மேற்படிப்பிற்குச் சென்று திரும்பியபின் மிகவும் சிக்கலான காலகட்டத்தில் திருகோணமலை மனிதவள மேம்பாட்டு நிலைய (EHED) இயக்குநராக இருந்து அகதிகள் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளில் நீண்டகாலமாக அரும்பணி ஆற்றியவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் கண்ட அடிகளார் இன்று மறைமாவட்டக் குருமுதல்வராக பெரும்பணி ஆற்றிட நல்லருளும் இறை ஆசீரும் நிறைந்திட வேண்டுமென்று மன்னா நெஞ்சார வாழ்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோசப்வாஸ் அடிகளார் வாழ்வில் முக்கிய நிகழ்வுகள்

## அருளாளர் யோசப்வாஸின் சொந்த இடத்திலும் அவர் கால்பதித்த இடங்களிலும் நடந்தேறிய நிகழ்வுகள்

அருட்தந்தை ம. க. அருள்பிரகாசம்,
அருளாளர் யோசப்வாஸ் தேசியமன்ற மன்னார் மறைமாவட்ட இணைப்பாளர்

### சென்ற மாத தொடர்ச்சி........

தியானயோக சம்பிரதாய சபையானது வளர்ச்சியடைந்து வந்தது. 150 வருடங்களுக்கு மேலாக இச்சபை குருக்களை உருவாக்கியது. இக்கட்டிடமானது தியானயோக சம்பிரதாய சபையினரின் தாய்வீடாகும். இங்கிருந்துதான் பல குருக்கள் இலங்கைக்கு வந்து பணியாற்றினர். ஓல்லாந்தர் காலத்திலும் ஐரோப்பியர் காலத்திலும் எமது நாட்டிற்கு வந்து பணியாற்றிய ஒரேற்ரோறியன் சபைக் குருக்கள் இங்கு உருவாக்கப்பட்டு அனுப்பப்பட்டனர் என்பது குறிப்பிடதக்க விடையமாகும்.

### சங்குவாலேயில் அமைந்துள்ள திருத்தலம்

2000ஆம் ஆண்டு தை 16ம் திகதி கோவா டமான் என்னும் உயர் மறைமாவட்டத்தின் பாதுகாவலராக அருளாளர் யோசப்வாஸ் அடிகளார் நியமிக்கப்பட்ட பிற்பாடு பேராயர் ராவுல் கொன்சால்வஸ் என்பவரால் 2003 ஆம் ஆண்டு தை மாதம் 5ஆம் திகதி அருளாளர் யோசப்வாசுக்கென ஒரு திருத்தலம் சங்குவாலேயில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திருத்தலமானது அழகுற மேருகூட்டப்பட்டு பலவர்ண மின்விளக்குகளால் ஒளியேற்றப்பட்டு காட்சி அளிக்கின்றது. திருத்தலத்தின் முன்பகுதியில் அழகான மாடிப்படிகள் கட்டப்பட்டுள்ளன. கீழே சிறிய கண்காட்சி அறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அது அருளாளரின் வாழ்க்கை வரலாற்ரையும் பணியையும் எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றது. இத்திருத்தலத்திற்குமுன் உள்ள புதுமையான நீரூற்று மக்களின் தாகத்தைத் தீர்ப்பதுடன் மக்கள் நோய்கள் நீங்கி ஆறுதலும் பெறுகின்றனர்.

### இலங்கை

இந்துசமுத்திரத்தின் முத்தென அழைக்கப்படும் இலங்கை ஒரு பெரிய தீவாகும். இது பல புராதன நகரங்களையும் காடுகளையும் குளிர்நிறைந்த மலைப்பிரதேசங்களையும் மணல் நிறைந்த கடற்கரைப் பிரதேசங்களையும் கொண்ட ஒரு நாடாகும். உல்லாசப்பயணிகளைக் கவரக்கூடிய வரலாற்றையும் கலை கலாசாரத்தையும் நகர, கிராமிய, வன வாழ்வையும் கொண்ட ஒரு தீவாகும். இது ஒரேற்ரோறியன் குரு அருளாளர் யோசப்வாஸின் வாழ்வை வெளிப்படுத்தும் இடமாக விளங்குகின்றது. இங்கு ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் 30 வருடங்களுக்கு மேலாக கத்தோலிக்க குருக்களின் பிரசன்னம் இல்லாதிருந்தவேளை தனி ஒருவராகக் கத்தோலிக்க விசுவாசத்தை மீண்டும் துளிர்விடச்செய்து வளர்த்தெடுத்தார் நம் திருத்தூதர்.

### மன்னார்

இலங்கைக் கத்தோலிக்க மக்கள் கல்வினிஸ்ட் மதத்தவர்களால் கலாபனைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்ட அருளாளர் அவர்கள் 1687இல் பிச்சைக்காரன்போல வேடம்தரித்து, விசுவாசமுள்ள வேலைகாரன் யோனுடன் இலங்கைக்குவரத் தீர்மானித்தார். இவர் 1687ஆம் ஆண்டு வைகாசி மாதம் மன்னாரிலுள்ள சவுத்பார் என்னும் இடத்தில் முதல்முதல் கால்பதித்தார். ஒரு குருவானவரைக் காட்டிக் கொடுத்தால் பல ரூபா பெறுமதியான சன்மானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட காலப்பகுதியில் அவர் இறை துணையோடும் துணிவோடும் வந்திறங்கினார்.

### மருதமடுமாதா திருத்தலம்

ஓரேற்ரோறியன் குருக்கள் காலத்திலிருந்தே இத் திருத்தலமானது பிரதானமான யாத்திரைத்தலமாக விளங்கியது. வன்னியில் மடுப்பகுதியில் மாந்தை கத்தோலிக்கர்களினால் ஒரு புதுமை நிறைந்த மாதா சுருபம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்பதை அருளாளர் யோசப்வாஸ் அடிகளார் கேள்விப்பட்டார். பல இடர்பாடுகளும் பிரச்சினைகளும் காட்டு விலங்குகள், விஷ யந்துக்களினால் அபாயமும் இருந்தபோதிலும் அருளாளர் அவர்கள் பலமுறை 1690, 1698, 1703, 1705 ஆகிய ஆண்டுகளில் இவ்விடத்துக்குவந்து இறைமக்களைச் சந்தித்து அருட்சாதனங்கள், திருப்பலிகள் நிறைவேற்றிச் சென்றுள்ளார் என்பதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

### செட்டிகுளம்

செட்டிகுளம் A14 மதவாச்சி – மன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ளது. ஓல்லாந்தரின் கலாபனையினால் அங்குமிங்கும் அலைந்துதிரிந்த கத்தோலிக்க மக்கள்மேல் கரிசனையும் அன்பும் கொண்டதோடு அவர்களது பாதுகாப்பில் அதிக அக்கறை கொண்டவராகவும் அடிகளார் விளங்கினார். இங்கு அருளாளர் அவர்கள் ஒரு மரப்பொந்தினுள் சிலுவை ஒன்றை நாட்டி மக்களைக் கொடிய விலங்குகளின் ஆபத்துக்களிலிருந்து காக்க ஆசீர்வதித்துள்ளார். அந்தச் சிலுவையை ஒரு புளியமரப் பொந்தினுள் நாம் இன்றும் காணலாம்.

### வவுனியா

வவுனியாவில் தெற்கு இலுப்பைக்குள எல்லையில் ஒரு புளியமரப் பொந்தில் சிலுவை வைத்து மக்களைப் பல வகையான ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றினார். அவ்விடத்தில் அவருக்கென சிற்றாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இறம்பைக்குளத்தில் தண்ணீர் தாகத்தால் ஓர் கிணற்றில் நீர் அருந்திவிட்டு அந்தக்கிணற்றை ஆசீர்வதித்துச் சென்றுள்ளார். அக்கிணறு இன்னும் வற்றாமல் இருக்கின்றது.

### பறப்பாங்கண்டல் ஆலயம்

இது ஒரேற்ரோறியன் குருக்களின் ஒரு பழைய பணித்தளமாகும். இது மன்னார் வீதியில் இருந்து சில கல் தொலைவில் உயிலங்குளத்திற்கும் உயித்தராசன்குளத்துக்கும் இடையில் வடக்குப் பக்கம் அமைந்துள்ளது. இது போத்துக்கேயர்களால் கட்டப்பட்ட ஒரு பழைய ஆலயமாகும்.



இது ஒரேற்ரோறியன் குருக்கள் வருவதற்குமுன்னரே கட்டப்பட்டதொன்றாகும். அருளாளர் அவர்கள் வடக்குப்பகுதிக்கான மறைப்பணியை இங்கிருந்துதான் ஆரம்பித்தார். பணியை இலகுபடுத்த 1705இல் இவ்விடத்திலிருந்து இலங்கையை எட்டுப் பணித்தளங்களாகப் பிரித்து பணிப்பொறுப்பை ஏனைய குருக்களுக்கும் ஒப்படைத்தார். ஒரேற்ரோறியன் குருக்கள் தமது வருடாந்த ஞானஒடுக்கத்திற்காகவும், ஏனைய ஒன்றுகூடல் கூட்டங்களுக்காகவும் இவ்விடத்தில் அடிக்கடி ஒன்றுகூடுவர். யோசப்வாஸ் அடிகளார் ஏனைய குருக்களுடன் சேர்ந்து அந்தப் பிரதான ஆலயத்தில் தங்கியிருந்து மன்னார் மாதோட்டப் பகுதிகளிலுள்ள எல்லாக் கிராமங்களையும் தரிசித்து அருட்சாதனங்கள், திருப்பலிகள் நிறைவேற்றி கத்தோலிக்க விசுவாசத்தில் இறைமக்களை வளர்த்தெடுத்தார். இது 400 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட ஒரு பெரிய ஆலயமாகும். இங்கே காணப்படும் அறைகள் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரும் ஏனைய ஒரேற்ரோறியன் குருக்களும் வந்து தங்கி, வன்னி, மாதோட்டம், யாழ்ப்பாணம், மன்னார் பகுதியில் பணியாற்றிச் சென்ற அறைகளாகும். இவ்வாலயமானது போர்ப் பிரதேசத்தில் 30 வருடங்களுக்குமேல் இருந்தபோதிலும் முழுமையாகப் பாதிப்படையாது அருளாளரின் பணியின் மகத்துவத்தை இன்றுவரை எடுத்தியம்பிக்கொண்டிருக்கிறது. இவ்வாலயமானது பரலோக மாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயமாகும்.

### கள்ளிகட்டைக்காடு

இவ்வாலயம் குருசுக்கோவிலென அழைக்கப்படுகின்றது. இங்கு வைக்கப்பட்டுள்ள குருசும் சி கதீற்றல் என்னும் இடத்தில் வைக்கப்படிருக்கும் "போஆ வஸ்ரா" மலையில் இருந்த சிலுவையை ஒத்ததாக உள்ளது. ஓல்லாந்தரின் கலாபனைக்காலத்தில் மாந்தையிலிருந்து எடுத்துவரப்பட்ட மடுமாதா சுருபம் சிலகாலம் இங்கு மறைத்து வைக்கப்பட்டு வணங்கப்பட்டு வந்தது.

### யோசப்வாஸ் நகர்

அருளாளர் அவர்கள் நீண்டகாலமாக மன்னார் மாதோட்டப் பகுதிகளில் பணியாற்றினார். அவரது நினைவாக யோசப்வாஸ் நகர் மன்னார்த்தீவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அருளாளர் யோசப்வாஸினுடைய அழகான சுருபம் நற்கருணையாண்டவர் ஆலயத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட 400 கத்தோலிக்க குடும்பங்கள் இவ்விடத்தில் குடியேற்றப்பட்டுள்ளனர்.

### யாழ்ப்பாணம்

### யாழ்ப்பாண நகர்

யாழ்ப்பாணத்தில் பேராலயத்திற்கு அருகாமையில் இரு குடிசையில் அருளாளர் தங்கியிருந்தார். அவ்விடத்தில் குடியிருப்போரின் குடும்பங்களில் இருந்து குருத்துவ துறவற அழைத்தல்கள் தொடர்ச்சியாக வருவதை அவதானிக்கலாம்.

### சில்லாலை ஆலயம்

யாழ்ப்பாணப் பணித்தளத்தில் சில்லாலை ஒரு கத்தோலிக்க கிராமமாகும். யாழ்ப்பாண நகரத்திலிருந்து மறைவான கிராமமாக இருந்தது. இவ்விடம் அன்னை மரியாள் பக்திக்கு பெயர்போன கிராமமாகும். அழைத்தல்கள் பெருகும் இடமாகவும் இது விளங்குகின்றது. மூன்று வருடங்கள் அருளாளர் யோசப்வாஸ் இங்கிருந்து பணியாற்றினார். இருள் சூழ்ந்த சுற்றாடலில் இவர் போதித்துப் பணியாற்றினார். அதிகாரிகளின் கண்களுக்கு மறைந்தவராகவும் கத்தோலிக்கர்களுக்கு ஒரு குருவாகவும் தன்னை வெளிப்படுத்திக்கொண்டார். இங்கு இளங்குருவாக அருளாளரின் சுருபம் காணப்படுகின்றது. அது எவ்வாறு அவர் ஒல்லாந்தரின் கண்களிலிருந்து தப்பித்தார் என்பதைக் காட்டுகின்றது. சில்லாலையை மையமாகக்கொண்டு யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பணியாற்றினார்.

### சில்லாலையில் சிலுவை

சில்லாலை ஆலயத்தின் அண்ணாவி தனது கடமைகளை நிறைவேற்றாது திருப்பலிகளுக்கு ஒழுங்காக செல்லாது இருந்தார். அருளாளர் யோசப்வாஸ் அடிகளார் அவரைச் சந்தித்து கடமைகளைச் செய்யவும், திருப்பலிகளில் பங்குகொள்ளவும் ஊக்கப்படுத்தி வந்தார். ஒருநாள் அந்த அண்ணாவி வழமைபோல திருப்பலிக்கு வரவில்லை. அவ்வேளை அவர் தனது வீடு வேய்ந்துகொண்டிருந்தார். திடீரென வீடு தீப்பற்றி எரிந்தது. இவர் உடனே ஆலயத்திற்கு ஓடிவந்து பாவமன்னிப்புக் கேட்டார். அருளாளர் அவரின் நிலையைக்கண்டு மனம் இரங்கி அவரைத் தேற்றுவதற்காக வெண்கலத்தாலான சிலுவை ஒன்றைக் கொடுத்தார். அச்சிலுவை "போஆ வஸ்ரா" மலையில் இருந்த சிலுவையை ஒத்ததாக உள்ளது. அதன்பின்னர் அந்த அண்ணாவி தனது குடும்பத்தினரை ஆலயத்திற்கும் அருளாளரிடமும் கூட்டிவந்தார். இக்குடும்ப அங்கத்தவர்களால் இச்சிலுவை பயபக்தியாக பேணி பாதுகாக்கப்பட்டு வருவதுடன் தீயசக்திகளிடமிருந்தும் பாதுகாக்கப்படுகின்றனர். இப்போது ஏழாவது பரம்பரையினருடைய பாதுகாப்பில் இச்சிலுவை உள்ளது. இவ்விடத்திலிருக்கும் கல்லாலான சிலுவை அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரால் ஆசீர்வதிக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

### கண்டி

### கல்கமுவ (எபோணி சிலுவை)

இலங்கையின் மேற்குக் கடற்கரையோரமாயிருந்த கத்தோலிக்கர்கள் ஒல்லாந்தரின் கலாபனை காரணமாக மேல் மாகாணத்தில் கல்கமுவ என்னும் இடத்தில் கண்டி அரசனின் அனுமதியுடன் குடியேறி வாழ்ந்தனர். அருளாளர் யோசப்வாஸ் அவர்கள் இவ்விடம் சென்று தமிழ்பேசும் மக்களைக் கண்டுள்ளார். அவர்களை விஷப்பாம்புகளிலிருந்தும் காட்டு விலங்குகளிலிருந்தும் பாதுகாக்கவும் பயிர்களை காட்டு விலங்குகள் அழிக்காமலிருக்கவும் கிராமத்தின் ஆரம்பப்பகுதியில் இந்த எம்போணி சிலுவையை ஆசீர்வதித்து ஸ்தாபித்தார். காடு பரந்ததாக இருந்ததால் மக்கள் பயத்தில் வாழ்ந்தனர். அருளாளரால் குருசு ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு எதுவித பயமுமில்லாமல் பாதுகாப்பை உணர்ந்தனர். அந்தச்சிலுவை இப்போதும் ஒரு புளியமரப் பொந்துக்குள் இருப்பதைக் காணலாம். இந்தச்சிலுவைக்கு இருபக்கத்திலும் அருளாளர் யோசப்வாஸ் மற்றும் தூய பிரான்சிஸ்கு சவேரியாருடைய சுருபங்களும் வைக்கப்படடிருப்பதைக் காணலாம்.

### வாவுட

இந்த வாவுட என்ற இடத்தில்த்தான் அருளாளர் அவர்கள் கண்டி அரசன் விமலதர்மசூரியனுடைய அனுமதிக்காக காத்திருந்தார். கண்டி இராட்சியத்துக்குள் நுழைந்து சில நாட்களுக்குள் பிரஞ்சுக்காரன் ஒருவரால் போத்துக்கேய ஒற்றன் என காட்டிக்கொடுக்கப்பட்டார். அருளாளரை சங்கிலியால் கட்டி சிறைச்சாலைக்கு இழுத்துச்சென்றார்கள். அவ்விடத்தில் ஞாபகமாக ஒரு நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டுள்ளது. அத்துடன் அதன் ஞாபகமாக ஓர் சிற்றாலயமும் கட்டப்பட்டு அவருக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

### கண்டி நகர்

கண்டி அரசு இலங்கைத்தீவில் ஒரு சுதந்திர அரசாக விளங்கியிருந்தது. இது தீவின் கிழக்குப் பகுதியின் மத்தியில் அமைந்துள்ளது. இவ்விராச்சியத்தின் அனேகமான பகுதிகள் மலைகளாலும் காடுகளாலும் நிறைந்து காணப்படுகின்றது. அத்துடன் குளிர்காற்று நிறைந்த பாதைகள், மலைகள், அழகான நீர்வீழ்ச்சிகள் நிறைந்த ஒரு பிரதேசமாகும். சுதந்திர அரசாகிய கண்டியரசின் தலைநகரை 1692ஆம் ஆண்டு நிரந்தர வாழ்விடமாக்கிக்கொண்டார். இது அவரது பிரதானமான பணி மையமாக இருந்தது. 1696ஆம் ஆண்டு இங்கு பெரும் வரட்சி ஏற்ப்பட்டது. அரசனின் வேண்டுகோளிற்கிணங்க அருளாளர் மழைக்காகச் செபித்தார். அவர் ஓர் இடத்தில் சிறிய பீடம் அமைத்து அதில் சிலுவையை வைத்துச் செபித்தார். அவருடைய செபம் கேட்கப்பட்டதற்கு அடையாளமாக அவர் நின்ற இடத்தையும் குருசு வைக்கப்பட்ட இடத்தையும் தவிர்த்து உடனடியாக சோவென மழை பெய்தது. 1697ல் இங்கு ஒரு வைசூரி நோய் ஏற்பட்டது. அது அடுத்த வருடம் பங்குனி மாதம்வரை நீடித்தது. எல்லாக் குடும்பங்களும் நோயாளிகளை அப்படியே விட்டுவிட்டு ஓடிப்போய்விட்டனர். அரசனும் அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டார்.

அருளாளர் அவர்கள் தனது மருமகனான யோசப் கர்வாலோ என்ற குருவுடன் இணைந்து நோயாளிகளைப் பராமரித்து இறந்தவர்களை நல்லடக்கம் செய்துவந்தார். வைசூரி நோயினால் பாதிக்கப்பட தனது மருமகனான யோசப் கர்வாலோவையும் இழந்தார். இந்நோய் நீங்கியதும் எல்லோரும் நகருக்கு வந்தனர். அருளாளர் தனது பணியைத் தொடர்ந்து ஆற்றினார். இவரது இந்த மேலான பணிபற்றிய செய்தி கோவா நகரிலும் ஒலித்தது.

### மகாவலி ஆறு

கண்டி நகரைவிட்டுப் போவதற்கு அனுமதி கிடைக்காதபோதும் கிராமங்களில் வாழ்ந்த கத்தோலிக்கர்களுக்கு உதவும்பொருட்டு சிறைக்காவலர்களின் கண்களுக்கும் வள்ளம் செலுத்துவோரின் கண்களுக்கும் படாமல் எட்டுத்தடவை இம்மகாவலி ஆற்றைக் கடந்துசென்று இறக்கும்தறுவாயில் உள்ளோருக்கும் நோயாளிகளுக்கும் அருட்சாதனங்கள் வழங்கி வந்துள்ளார்.

### வாக்கொட்டை

இலங்கைக் கத்தோலிக்கர்களுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரதான இடமாக வாகோட்டை விளங்குகின்றது. இங்கு போத்துக்கேயர் காலத்திலிருந்து ஒரு கத்தோலிக்க சமுகம் வாழ்ந்து வருகின்றது. அருளாளர் அவர்கள் கண்டியிலிருந்து புத்தளத்திற்கும் கல்கமுவைக்கும் செல்லும் வழியில் பல தடவை அவ்விடத்தில் வாழ்ந்த கத்தோலிக்கர்களை சந்தித்துப் பணியாற்றிச் சென்றுள்ளார். கண்டி அரசனான 2ஆம் விமலதர்மசூரியன் அருளாளர் தனது மக்களுக்காற்றிய அயரா பணியைக் கண்டு மெச்சிப் பாராட்டியுள்ளார். தனது அரசில் ஓர் சிற்றாலயம் அமைக்க அனுமதி வழங்கினார். ஓலைகளினால் வேயப்பட்டு ஒரு சிற்றாலயம் அமைத்து அன்னை மரியாவுக்கு அர்ப்பணித்தார்.

அருளாளர் அவர்கள் தனது குருமுதல்வர் பணியையும் சபைத்தலைவர் பணியையும் அருட்தந்தை யோசப் டி மெனென்ஸ் அடிகளாளிடம் 1711, தை 7ஆம் திகதி ஒப்படைத்தார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உலகத் திருச்சபைச் செய்திகள்

# புனித அருளானந்தர் பற்றிய 'மண் சிவந்தது' திரைப்படம்

புனித அருளானந்தர் வேதசாட்சியாகத் தலை வெட்டப்பட்டு கொலைசெய்யப்பட்டார். இவரது இரத்தம் ஓரியூர் பூமியை செம்மண் பூமியாக்கியது. இப்புனிதரின் பேராலயம் இன்றும் இலட்சக் கணக்கான பக்தர்களை வரவேற்றவண்ணம் உள்ளது. இங்கு மக்கள் சாதி, சமய பேதமின்றி திருப்பயணம் மேற்கொண்டு புனிதரின் பரிந்துரையால் பல புதுமைகளைப் பெற்றுச்செல்கின்றனர்.

கடந்த இருபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக புனித அருளானந்தரின் வாழ்க்கை வரலாற்றை நாடகமாக அரங்கேற்றி வந்த திருவாளர் எம். ஏ. சுந்தரம் இச்செம்மண் வரலாற்றை 'மண் சிவந்தது' என்ற தலைப்பில் திரைப்படமாக எடுக்க பல ஆண்டுகள் பாடுபட்டு நல்ல திரைக்கதையையும் உருவாக்கியுள்ளார். இறைவனின் இணையற்ற அருளால், புனித அருளானந்தரின் பரிந்துரையால் மே மாதம் 7 ஆம் திகதி புனித தோமையார் பேராலய வளாகத்தில் மேதகு ஆயர் ரெமிஜியுஸ் தலைமையில் 'மண் சிவந்தது' புதிய திரைப்படத் துவக்கவிழா நடைபெற்றது.

திரைப்படம் 'மண் சிவந்தது' சிறப்பாக உருவாகி, வெற்றிகரமாக வெளியாகி, அன்னை வேளாங்கண்ணி, புனித அந்தோனியார் போன்ற திரைப்படங்களைப்போல் மக்களின் மனதில் புனித அருளானந்தரின் மகிமையை வெளிப்படவைக்கும் என்பதில் ஐயமில்லை.



## "ஆன்மாவின் மருத்துவத்தைக் கற்கப் போகிறேன்" திருத்தந்தை பிரான்சிஸின் அழைப்பில் வியப்படைந்த தாயார்

திருத்தந்தை பிரான்சிஸ் 19 வயது இளைஞனாக இருந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சி இது.

19 வயதான ஜேன்ஜே பேர்கோக்லியோ மருத்துவம் படிக்க விரும்பினார். ஆகவே அவரது தாயார் அவர் படிப்பதற்காக அமைதியான ஓர் அறையைத் தயார்செய்து கொடுத்தார். ஒருநாள் அவ்வறையைத் துப்புரவுசெய்யச் சென்ற தாயார், இறையியல் சமயம்சார் புத்தகங்களைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தார். அவரை அழைத்து, "இது என்ன, நீ மருத்துவம்தானே படிப்பதாகச் சொன்னாய்", அதற்கு அவரும், "ஆம் அம்மா" என்றதற்கு "ஏன் எனக்குப் பொய் சொன்னாய்" என்றார் அவரது அம்மா. "இல்லை, நான் பொய் சொல்லவில்லை. ஆன்மாவின் மருத்துவத்தை கற்கப்போகின்றேன்" என்றார்.

முதலில் அம்மா அழுதார். ஆனால் அப்பா அதை விரும்பினார். பின்னர் அனைவரும் அத்தேவ அழைத்தலை விரும்பி ஏற்றுக்கொண்டனர். அவர்



1964இல் குருவாகவும், பின்னர் 2013இல் திருத்தந்தையாகவும் உயர்த்தப்பட்டார்.

## கடத்தப்பட்ட 13 அருட்சகோதரிகள் விடுதலை

2013 டிசம்பரில் சிரியாவிலுள்ள கிறிஸ்தவ நகர் மாலெளலாவில் போராளிகளால் கடத்தப்பட்ட கிரேக்க வைதீக அருட்சகோதரிகள் குழுவினர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைதிகள் பரிமாற்றத்தின் ஒரு பகுதியாகவே இந்த 13 அருட்சகோதரிகளும் அவர்களின் 3 உதவியாளர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சிரிய – லெபனான் எல்லையிலுள்ள ஜீடயாட்யாபஸ் நகருக்கு இப்பெண்கள் குழாம் கொண்டுசெல்லப்பட்டதாக லெபனான் அரசு செயலகம் கூறியுள்ளது.

## வாய்விட்டுச் சிரிப்பது புனிதராவதற்கான விரைவு வழி

தென் இத்தாலியைச் சேர்ந்த பிரான்சிஸ் பசானி என்பவர் அடிக்கடி சொல்லும் வார்த்தை வாய்விட்டுச் சிரிப்பது புனிதராவதற்கான விரைவு வழி என்பதாகும். அதையே தன் வாழ்விலும் கடைப்பிடித்த பசானி, எப்போதும் மகிழ்சியுடனே இருந்தார்.

தன் 14ஆம் வயதிலேயே பிரான்சிஸ்கன் துறவு சபையில் இணைந்து 10 ஆண்டு படிப்பிற்குப்பின் குருவானார். குருமாணவர்களுக்கு ஆசிரியர், இல்லத்தலைவர், சபையில் மாநிலத்தலைவர், நவதுறவியர் தலைவர் என பல பதவிகளை வகித்தாலும் ஏழைகளைச் சென்று சந்தித்து அவர்களிற்கு உதவுவதையும் தன் சிறப்புப் பணியாகக் கொண்டிருந்தார். அனைவரையும் அரவணைத்துச் செல்வதில் வல்லவர். நல் ஆலோசனை வழங்குபவராகவும் போதகராகவும் திகழ்ந்தார். இவருடைய போதனைகளுக்கு செவிமடுத்து மனந்திரும்பியோர் எண்ணற்றோர்.

இவர் உயிரிழந்தபோது அந்த ஊரில் இருந்த சிறார்கள் அனைவரும் ஒன்றிணைந்து தெருவில் ஓடி "புனிதர் இறந்துவிட்டார்" எனக் கூக்குரல் இட்டதாக வரலாற்றில் பதிக்கப்பட்டுள்ளது. சிறு குழந்தைகளே இவரை புனிதராக அறிந்திருந்தனர். இன்று திருச்சபையின் அடக்கத்தின் அன்பின் மிகப்பெரும் எடுத்துக்காட்டாக விளங்குகிறார் புனித பிரான்சிஸ் பசானி.

## பல்சமய உரையாடல் அவையின் 'வெசாக்' விழாவிற்கான செய்தி

திருத்தந்தை பிரான்சிஸ் தனது உலக அமைதிச் செய்தியில் உடன் பிறப்புக்கள் என்ற உணர்வின்றி, உலகில் நீதியான அமைதியான சமுதாயத்தை உருவாக்க முடியாது எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதன் அடிப்படையில் பல்சமய உரையாடல் அவையும் தனது வாழ்த்துச் செய்தியை வெளியிட்டது. புத்த மதத்தைச் சார்ந்த எமது சகோதரர்கள் இம்மாதம் 14,15 ஆம் திகதிகளில் "வெசாக்" என்ற விழாவை கொண்டாடுகின்றனர். "உடன் பிறப்பு உணர்வை பேணி வளர்க்க" என்ற தலைப்பின்கீழ் பல்சமய உரையாடல் அவையின் தலைவர் கர்தினால் ஜீன் லூயிஸ் தூரன் ஆண்டகை தனது செய்தியில், ஒருங்கிணைந்த நீதியான சமுதாயத்தை உலகில் உருவாக்கும் ஆவல் வளர்ந்துவரும் இன்றைய சூழலில், சமயங்களுக்கிடையே வளர்க்கப்பட வேண்டிய உரையாடலின் தேவை அதிகமாகின்றது.

"சந்திக்கும் கலாச்சாரம்" இவ்வுலகில் வளர்வதை வலியுறுத்துகிறார் திருத்தந்தை பிரான்சிஸ். அவர்களின் எண்ணங்களை செயலாற்றும் கடமை கிறிஸ்தவர்கள், புத்த மதத்தினர், இன்னும் அனைத்து மதத்தினருக்கும் உள்ளது என்று கூறியதோடு தனது வெசாக் தின வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்டச் செய்தி :

## தமிழக இறைபணியாளர்களின் உதவியோடு இடம்பெற்ற கற்கடந்தகுளம் பங்கின் பல்வேறு திருவிழாக்கள்

கற்கடந்தகுளம் பங்கின் தாய் ஆலயமான கற்கடந்தகுளம் புனித சூசையப்பர் திருவிழா தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி கொண்டாடப்பட்டது. இதைத் தொடர்ந்து கற்கடந்தகுளம் பங்கிற்குட்பட்ட துணைப் பங்கு ஆலயங்களான செட்டியார் மகன் கட்டையடம்பன் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத் திருவிழா கடந்த மே மாதம் 20 ஆம் திகதியும், இசைமாலைத்தாழ்வு புனித பிலிப் நேரியார் ஆலயத் திருவிழா கடந்த மே மாதம் 26ஆம் திகதியும், மழுவராயர் கட்டையடம்பன் புனித செபமாலை மாதா ஆலயத் திருவிழா கடந்த மே மாதம் 30ஆம் திகதியும் இடம்பெற்றன.

இத்திருவிழா நவநாட்களின்போது இந்தியாவிலிருந்து வருகைதந்திருந்த தியான இல்ல இறைபணியாளர்கள் நவநாள் தியான மறையுரைகளை வழங்கினார்கள். ஒவ்வொரு ஆலயத் திருவிழா நவநாட்களின்போதும் அந்த ஆலயப் புனிதரின் வாழ்வோடு இணைந்ததாகவும், இவ்வாண்டுக்கான மறைமாவட்டக் கருப்பொருளைத் தொடர்புபடுத்துவதாகவும் மறையுரைகள் அமைந்திருந்தன. கற்கடந்தகுளம் பங்குத்தந்தை அருட்பணியாளர் எஸ். மாக்கஸ் அவர்கள் இக்குழுவினரை தமிழ் நாட்டிலிருந்து இங்கு அழைத்துவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நகைச்சுவை நாயகர் திருத்தந்தை 23ஆம் அருளப்பர்

திருத்தந்தை 23ஆம் அருளப்பர் திருத்தந்தையாகப் பொறுப்பேற்ற சிலநாட்களில், புருனோ என்ற 12 வயதுச் சிறுவனிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் அவன் "எனது அன்புத் திருத்தந்தையே, நான் ஒரு காவல்துறைப் பணியாளராக (பொலிஸ்காரராக) அல்லது திருத்தந்தையாகப் பணியாற்ற விரும்புகிறேன். நீங்கள் அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டிருந்தான்.





அந்தக் கடிதத்துக்குப் பதில் அனுப்பிய திருத்தந்தை, "எனது சிறிய புருனோ, நீ எனது கருத்து அறிய விரும்பினால், நீ காவல்துறைப் பணிக்குச் செல் என்றுதான் சொல்வேன். ஏனெனில் இப்பணிக்கு நிறையத் தயாரிப்புகள் தேவைப்படும். ஆனால் யாரானாலும் திருத்தந்தையாகலாம். நான் திருத்தந்தையாகியிருப்பதே இதற்குச் சான்று. நீ உரோமைக்கு வந்தால் என்னை வந்து பார். இவை குறித்து உன்னிடம் பேசுவதில் நான் மகிழ்ச்சியடைவேன்" என்று எழுதியிருந்தார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித அலோசியஸ் கொன்சாகா சே.ச.

(துறவி - (1568 - 1591)

திருவிழா – ஜீன் – 21



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

இவர் இத்தாலியில் மான்றுவா நகரில் பெர்டினான்ட் கொன்சாகா என்ற பிரபுவின் முதல் பிள்ளையாகப் பிறந்தார்.

இவரின் தந்தை இவர் பேரும் புகழும் உள்ளவராகப் பிற்காலத்தில் திகழ வேண்டுமென விரும்பி, போர் வீரரின் தலைவராகும் பயிற்சிகூட அளித்தார். ஆனால் இவரின் தாய் ஊட்டிய சத்துள்ள ஞானப்பாலின் விளைவாகப் பிளாரன்ஸ் நகரில் 9 வயதிலேயே மரியன்னையின் பேராலயத்தில் கற்பென்னும் வார்த்தைப்பாட்டை இவர் எடுத்துக்கொண்டார். வாரத்தில் 3 நாட்கள் கடுந்தவம் இருப்பார். இன்னும் பல கடுமையான ஆன்மீக தவ முயற்சிகளையும் செய்து வந்தார்.

13 வயதில் இவர் தம் பெற்றோருடன் ஸ்பெயின் நாட்டிற்குச் சென்றார். அங்கே 2 ஆம் பிலிப்புவின் அரச அவையிலேயே முழு நேரம் தங்கினார். அரசகுல மக்களின் ஒருவராகவே நடத்தப்பட்டார். அங்கே நிலவிய பலதரப்பட்ட சீர்கேடுகளின் நீரோட்டத்தில் சிக்காமல் கடுமையான முயற்சிகளை எடுத்து எதிர்நீச்சல் போட்டார்.

இந்த வேளையில் இந்தியாவிற்கு இயேசு சபையினர் சென்று நற்செய்தி பரப்பும் பணியில் ஈடுபாடு கொண்டுள்ளதைப் பற்றிய நூல் ஒன்று அவருக்குக் கிட்டியது. அத்தகைய இயேசு சபையில் சேரவேண்டும் என்ற முடிவை அரண்மனை வாழ்வின் நடுவே ஸ்பெயினில் எடுத்துக்கொண்டார்.

இதன்பின் தம் தந்தையுடன் 4 ஆண்டு காலம் பனிப்போராட்டம் நடத்தினார். திருச்சபையின் அரியணைகளில் வீற்றிருந்தவர்கள் மூலமாகவும்கூட இவரது முடிவைக் கலைக்க இவர்தம் தந்தை முயன்றார். இறுதிவெற்றி இளைஞர் அலோசியசுக்குக் கிடைத்தது. தமக்கு வரவேண்டிய சொத்தையெல்லாம் தம் தம்பிக்கு எழுதிவைத்தார். கி.பி. 1587இல் இயேசு சபையில் சேர்ந்தார். பின்னர் குரு மாணவராக படிக்கும்போது. உரோமையில் பலர் பிளேக் நோயினால் தாக்கப்பட்டனர். அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது இவர் அவர்களுக்குப் பணிபுரிந்தார். அந்தச் சூழலில் 1591ல் இவரும் கொடிய நச்சுக் காய்ச்சலுக்குப் பலியானார். அப்போது இவருக்கு வயது 23 மட்டுமே. இத்தனை குறைந்த ஆண்டுகளுக்குள் ஏராளமான புண்ணியங்களைச் செய்து வான்வீட்டிற்குத் தயார் நிலையில் தம்மை ஆக்கிக்கொண்டார்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 32.

## ‘உருவாக்குவோம்’ – ‘உருவாகுவோம்’

### ஆசிரியரின் ஆளுமைத்திறன்

ஒரு மாணவர்மீது, ஆசிரியர் கொண்டுள்ள ஆதிக்கத்தை கல்வியியலாளர் வொட்சன் பின்வருமாறு விபரிக்கிறார்: “நன்கு வளர்ச்சியடைந்த ஒரு டசின் சிறார்களை எனக்களித்து நான் கூறும் விதமாக இவர்களை வளர்க்க எனக்கு வாய்ப்பினை வழங்குங்கள். ஒவ்வொரு பிள்ளையையும் ஒவ்வொரு துறையில் ஒரு நிபுணராக உருவாக்குவேன். ஒரு மருத்துவராக, சட்டத்தரணியாக, கலைஞராக, தலைசிறந்த வணிகராக, தேவைப்படின் ஒரு பிச்சைக்காரனாக, திருடனாகக்கூட உருவாக்க என்னால் முடியும்”. வொட்சனின் மேற்சொன்ன ஆழ்ந்த அனுபவம் எந்தளவிற்கு உண்மையானது என்பதனை கல்வியலாளர் கோதாரியின் பின்வரும் கூற்று: “ஒரு நாட்டின் எதிர்காலமே வகுப்பறையில்தான் இருக்கிறது” என்பது உறுதிப்படுத்துகிறது. பாருங்கள், எத்தகைய தாக்கத்தை ஆசிரியர்கள் மாணவர்கள்மீது செலுத்த முடியும்! அத்தகைய அர்ப்பணிப்போடும் தியாக உணர்வோடும் ஆசிரியர்கள் முன்னைய காலங்களில் விளங்கினார்கள். அத்துடன், ஆசிரியர்களின் வழிநடத்துதல்களை அன்றைய மாணவர்களும் கேட்டு நடந்தார்கள்.

ஆனால் இன்று, மாணவர்கள் சொல்ல, ஆசிரியர் கேட்டு நடக்கவேண்டிய சூழ்நிலைகள் உருவாகிவிட்டன என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது. முன்னைய காலங்களில் ஆசிரியர்களைக்கண்டு மாணவர்கள் மரியாதை செலுத்திய - பயந்த காலம் மலையேறிப்போய் இப்போது மாணவர்களைப் பார்த்து ஆசிரியர்கள் மரியாதை செலுத்த - பயப்படவேண்டி இருக்கிறது. மேலும், முன்னைய காலங்களில் ஆசிரியர்கள் சொல்வதை, அவர்களின் ஆலோசனைகளை மாணவர்கள் மட்டுமல்லாது பெற்றோர்களும் கேட்டு நடந்தார்கள். இன்று, பிள்ளைகளை ஆசிரியர் கொஞ்சம் கடிந்துகொண்டாலே ஆசிரியர், மாணவர்களினதும் பெற்றோர்களினதும் கண்டனங்களுக்கு உள்ளாக நேரிடுகிறது. சில இடங்களில் ஆசிரியர்களுக்கு எதிராகக் கடும் தாக்குதல்களும் நடத்தப்பட்டிருக்கின்றன. என்ன செய்வது! ஆசிரியர்களை மதிக்கின்ற ‘நவீன வடிவங்கள்’ இவையென்று எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்!

ஆசிரியர் என்றால், ‘மாதா பிதா குரு தெய்வம்’ (‘குரு’ என்ற சொல் இங்கு ஆசிரியரையும் குறிக்கிறது) என்ற நிலையில் வைத்துப் பார்க்கப்பட்ட நிலை மாறி இன்றைய தலைமுறை எங்கு வந்து நிற்கிறது - எந்தத் திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறது என்பதையாவது கொஞ்சம் புரிந்துகொண்டால் சரி!

### பாடசாலைப் ‘பூசை’ விசேசம் என்றால், வீட்டுப் ‘பூசை’ அதிவிசேசம்!

கொஞ்சக் காலங்களுக்கு முன்னர் இருந்த நிலமைகளே வித்தியாசமானவை. பாடசாலையில் மாணவர்களுக்கு அடி விழுந்துவிட்டது என்றால், மாணவர்கள் அதனை வீட்டில் வந்து பெற்றோருக்குச் சொல்ல மாட்டார்கள். பிள்ளை பிழை செய்யாதிருப்பினும், “நீ ஏதோ பிழை செய்திருக்கிறாய். அதனால்தான் அதிபர் (ஆசிரியர்) அடித்திருக்கிறார்” என எச்சரித்து, வீட்டில் பெற்றோரும் ‘பூசை’ (‘அடி’யினால் நடைபெறும் அபிசேகந்தான் ‘பூசை’ என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது.) கொடுப்பார்கள் என்பது எல்லாக் குடும்பங்களிலும் எழுதப்படாத சட்டமாகவே இருந்து வந்திருக்கிறது.

அதிலும் தந்தை அல்லது தாய் ஆசிரியராக இருந்தால் - அரச ஊழியர்களாக இருந்தால் பாடசாலையில் ‘தனிக் கவனிப்பு’களும், வீட்டில் வழிபாடுகள் இல்லாத ‘விசேச பூசை’களும் மேற்கொள்ளப்படும். அதனால், பாடசாலையில் அடி விழுந்தாலும் அதுபற்றி எவ்வித தகவலும் வீட்டிற்கு வந்துசேராமல் பார்த்துக்கொள்வதில் மாணவர்கள் கவனமாயிருப்பார்கள். ஏனென்றால், ‘அடி விழுந்தது’ என்ற தகவல் வந்து சேர்ந்தாலே ‘பூசை’க்கான ஆயத்த வேலைகள் வீட்டில் ஆரம்பமாகிவிடும் என்பதால்!

இத்தகைய அணுகுமுறை எந்தளவிற்கு ஆரோக்கியமானது அல்லது எந்தளவிற்கு இத்தகைய நடைமுறைகள் நன்மை பயக்கக்கூடியவை என்பவை எல்லாம் இன்று விவாதத்திற்குரியவை. இவ்வாறான ‘பூசை’ முறை வழிநடத்தல்களை இன்றைய உளவியல் ஏற்றுக்கொள்வதுமில்லை. இத்தகைய ‘பூசை’முறை சார்ந்த வழிமுறைகள், சற்று எதிர்மறையாயினும், மாணவர்கள் நன்னெறியில் வளர்வதற்கு, முன்னேறுவதற்கு அனுகூலங்களாக இருந்துள்ளன என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

எனினும் முன்னைய காலங்களில் சில அதிபர்களின், ஆசிரியர்களின் ‘கண்மூடித்தனமான தாக்குதல்’களாக: கையில் அகப்படும் பொருளால் எடுத்து அடித்தல், மேலதிகாரிகளின் அல்லது வீட்டிலுள்ளவர்களின் மேலுள்ள கோபத்தை அகப்பட்ட மாணவனில் வெளிப்படுத்தல், காரணம் இல்லாமல் ‘தொட்டதற்கும் பட்டதற்கும்’ அடித்தல் போன்றவற்றை இங்கு ஆதரிப்பதாக அர்த்தப்படுத்திக்கொள்ளக் கூடாது. இன்றைய காலத்தில் இத்தகைய தாக்குதல்களை இன்று நடத்தினால் ‘கம்பி எண்ணவேண்டிவரும்’ அல்லது கடுமையான பதில் தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும் என்பதால் இத்தகைய வழிநடத்தல் முறைகளுக்கு எந்த ஆசிரியரும் துணிவதில்லை.

### ஆசிரியர், அவர் யார்?

ஆசிரியர் என்ற சொல் ‘ஆசு’, ‘இரியர்’ ஆகிய இரு சொற்களில் இருந்து வருகிறது. ‘ஆசு’ என்றால் குற்றம், ‘இரியர்’ என்றால் நீக்குபவர். ஆகவே, ஆசிரியர் என்றால் ‘குற்றம் நீக்குபவர்’ என்பது பொருளாகிறது. அதாவது அறியாமையை நீக்குபவர், அறிவின்மையைப் போக்குபவர் மட்டுமல்ல அறிவைப் புகட்டி அறிவொளி காட்டுபவர் என்றும் அர்த்தமாகிறது. இக்காரணத்தினால்தான், ‘ஆசிரியர்கள், அறியாமை இருள் அகற்றும் ஞான விளக்குகள்’ என்பார் மெய்யியலாளர் சோக்கிரட்டிஸ். இதனால்தானே, ‘எழுத்தறிவித்தவன் இறைவன்’ என அறிவை ஊட்டுபவர்களை – ஆசான்களை தெய்வ நிலைக்கு உயர்த்தி பெருமைப்படுத்தினார்கள் தமிழ் முன்னோர்கள். பார்த்தீர்களா? ஆசிரியர்கள் என்றால் சும்மாவா? புரிகிறதா ஆசிரியர்களின் மேன்மையும் பெருமையும் அவர்கள் தம் சிறப்பும்!

### ஆசிரியர்கள், துன்பமாகவும் தொந்தரவாகவும் மாறிவிட்டார்களா!

ஆனால், ஆசிரியர்களை இவ்வாறாகவா இன்றைய மாணவ சமூதாயம் நோக்குகிறது? என்றால் அது கேள்விக்குரியது. பாடம் கற்பிப்பதற்காக ஆசிரியர் வகுப்புக்குள் வந்தபோது ஒரு மாணவன் வாய்விட்டுச் சிரித்தான். அப்போது ஆசிரியர், “தம்பி, ஏன் சிரிக்கிறாய்?” எனக் காரணத்தை வினவினார். அவனோ, “பெரிதாகக் காரணம் ஒன்றும் இல்ல சேர்! நீங்கதானே சொன்னீங்க, துன்பம் வரும்பொழுது வாய்விட்டுச் சிரிக்கவேண்டும் என்று. அதனாலதான் நீங்க வரும்போது நான் சிரித்தேன்” என்றான் வலு நிதானமாக! என்னசெய்வது ஆசிரியர்களை துன்பமாகவும் தொந்தரவாகவும் பார்க்கத் தலைப்பட்டிருக்கிறது இன்றைய வளர்ந்துவரும் இளம் தலைமுறை!

### பிரத்தியேகமாக அமைக்கப்படும் ‘தண்ணீர் பந்தி’கள்!

இவ்விடத்தில், நிதானத்திற்கு ஓர் உதாரணம் கட்டாயமாகச் சொல்லியே ஆகவேண்டும். அக்காலத்தில் ஆசிரியர்கள் ‘அரை அடித்தாலோ’ அல்லது ‘பாவித்தாலோ’ மற்றவர்களுக்குத் தெரிந்துவிடும். அதனால், அவர்கள் அப்படி ‘அரை அடிப்பது’ மிகமிகக் குறைவு! எப்போதாவது, இருந்திற்று, அதுவும் யாருக்கும் தெரியாமல் விசேச சந்தர்ப்பங்களில் ‘பாவித்திருப்பார்கள்’! ஆனால், இக்காலத்து இளைய தலைமுறையினர் அதிலும் குறிப்பாக மாணவர்கள் ‘முழுசு’ அடித்துவிட்டு மிக நேர்த்தியாக - நிதானமாகச் செல்கிறார்கள் என்பதை நினைக்கின்றபோது இத்தலைமுறை எவ்வளவு தூரத்திற்கு வளர்ந்திருக்கிறது! என்பது புரியும். தற்போது பரவலாக, கொண்டாட்டங்களில் இவ்விளைய தலைமுறையினருக்கு என்று சொல்லி ‘பிரத்தியேகமான தண்ணீர் பந்தி’ (போத்தல் விவகாரத்தைக் குறிப்பிடுகிறேன்) அமைக்கப்படுவதாக அல்லது ஒதுக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள் ஒருசில பெரியவர்கள். இளையோருக்கான பிரத்தியேகமாக அமைக்கப்படுகின்ற தண்ணீர் பந்தி இல்லாமல் கொண்டாட்டங்கள் இப்போது இளையவர்களுக்கென இடம்பெறுவதில்லை என்ற அளவிற்கு நிலமை மாறியிருக்கிறது என்றால் மிகுதியை நீங்களே கணித்துக்கொள்ளுங்கள்!

### மூன்று வகையான மாணவர்கள்

நன்னூல் சூத்திரம் மாணவர்களை மூன்று வகையாகப் பார்க்கிறது. முதல்நிலை மாணவர்கள், அன்னப்பறவை அல்லது பசு போன்றவர்கள். அன்னப்பறவை போன்று தெளிந்து, தெரிவுசெய்து உண்பவர்கள் அல்லது பசுவைப் போன்று உண்டதை மீண்டும் இரைமீட்டி அசைபோட்டு உண்பவர்கள். விளைவாக, முதல்தரமான பயனைக் கொடுப்பவர்கள். இடைநிலை மாணவர்கள், கிளியைப் போன்றவர்கள். சொல்வதையே மீண்டும் கிளிப்பிள்ளைபோல மீட்டுபவர்கள். கடைநிலை மாணவர்கள், ஓட்டைப்பானை போன்றவர்கள். பானையாகிய தலைக்குள்ளும் ஒன்றும் இருக்காது, தலைக்குள் ஒன்றும் இல்லையென்று ஏதும் அறிவுறுத்தினாலும் உள்ளே சென்று ஒன்றும் தங்காது. நன்னூல் சூத்திரத்தின்படி இன்றைய சூழலில் எவ்வகை மாணவர்கள் அதிகம் என்பதை இன்றைய இளம் மாணவ தலைமுறையினர்தான் தீர்மானிக்க வேண்டும்!

### குருபக்தி

நாற்பத்தி நான்கு ஆண்டுகள் ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் மகாதேவன் தன் ஆசிரியப்பணி அனுபவங்களை ஈழநாடு பத்திரிகையில் எழுதியிருக்கிறார். அக்கட்டுரையில் இன்றைய காலத்தில் குருபக்தி எவ்வாறிருக்கிறது? என்பதுபற்றி மகாதேவன் ஆசிரியர் குறிப்பிட்டதை கலாநிதி சொஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் 1992 ஆவணித் திங்கள் 06இல் காரைக்கால் சிவன்கோயிலில் தன் சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறார். அதனை கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களின் வார்த்தைகளிலேயே தருகிறேன். “நான் ஒரு சந்தியில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது மிதிவண்டியில் வந்துகொண்டிருந்த ஒருவர், கடாரென்று தன் வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு ஓடிவந்து என் காலில் விழுந்து வணங்கினார்.




யாரென்று தெரியவில்லை. தூக்கி நிறுத்திவிட்டு ‘நீ யாரப்பா?’ என்று கேட்டேன். அதற்கு அவன், ‘சேர், நான் உங்களிடம் படித்தவன். அப்போது நான் மிகவும் குழப்படிகாரன். நீங்கள்தான் எனக்குப் புத்தி சொல்வீர்கள். நானோ கேட்பதில்லை. அதனால் என்னைத் துன்புறுத்தியாவது படிக்கவைத்தீர்கள். அதனால் தான் இன்று நல்ல நிலையில் இருக்கிறேன். யாழ்ப்பாண மருத்துவமனையில் வைத்தியராக இருக்கிறேன்’ என்றான். இது 1950 அளவில். பிறகு 1960 அளவில் அதே சந்தியில் என்னைக் கண்ட ஒருவர் மிதிவண்டியை விட்டுக்குதித்தார். தன்னை அறிமுகம் செய்தார். அவரும் எனது மாணவன்தான். ஆனால் காலில் விழவில்லை.

1970இல் இவ்வாறு நிகழ்ந்தது. ஒருவர் என்னை நோக்கி வந்தார். கையில் புகைத்த சிகரட்டை வீசிவிட்டு என்னிடம் வந்தவர் மிதிவண்டியில் இருந்தவாறே என்னுடன் பேசினார். அவரும் எனது மாணவனே. 1975இல் என்னிடம் நெருங்கிய மாணவன் புகைத்துவந்த சிகரட்டை முதுகிற்குப் பின்னால் மறைத்தவாறே என்னுடன் பேசினார். தலைக்கு மேலால் புகை போய்க்கொண்டிருந்தது. 1979இல் என்னைக் கண்ட எனது மாணவன் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான். பிறகு‘சேர் நீங்கள் சுருட்டுபற்றுகிறனீங்கள், உங்களிடம் நெருப்புப்பெட்டி இருக்கும். ஒருக்கால் தருவீங்களோ?’ என்றான். இவற்றையெல்லாம் குறிப்பிட்ட மகாதேவன் ஆசிரியர், ‘நான் 1989ஆம் ஆண்டைச் சந்திக்க விரும்பவில்லை’ என கடைசியாகக் குறிப்பிடுகிறார்.” எனக் குருபக்தி அதாவது ஆசிரியர் - மாணவர் உறவின் ‘பரிணாம வளர்ச்சி’யை செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் குறிப்பிடுகிறார்.

என்னசெய்வது? ஆசிரியரின் காலில் விழுந்து ஆசீர் வாங்குவதில் தொடங்கிய குருபக்தி ஆசிரியரின் கையில் ‘கப்பை’க் (Glass) கொடுத்து ‘சியஸ்’(Cheers) சொல்கின்ற அளவிற்கு ‘பரிணாம வளர்ச்சி’ கண்டிருக்கிறது என்றால் குருபக்தி இனி வளர்வதற்கு இடம் எங்கிருக்கிறது?

### மாணவர்கள் பற்றிய ‘மொடேன் அவுட்லுக்’(Modern Out-Look)

மேற்குறிப்பிட்ட நன்னூல் அணுகுமுறை ஒருவகையில் பழமை வாய்ந்த கண்ணோட்டம் என்பதால் புதிதாகச் சிந்திக்க வேண்டி இருக்கிறது. அவ்வாறாயின், இன்றைய சூழமைவில், மாணவர்களின் வளர்ச்சிப் படிநிலைகளை மேலும் மூன்று வகையாகப் பார்க்கலாம்போல் தோன்றுகிறது. இது கொஞ்சம் ‘மொடேன் அவுட்லுக்’தான் (Modern Out-Look)! இவ்‘மொடேன் அவுட்லுக்’கை வாசித்துவிட்டு ‘அறிவுகெட்டு’ மயங்கி விழுந்து விடாதீர்கள். எதற்கும் கீழ்வரும் பகுதியை வாசிக்கும்போது ஓர் ஆளை பக்கத்தில் வைத்திருப்பது நல்லதுபோல் படுகிறது. வாசித்துவிட்டு, “தலை சுற்றுகிறது!”, ”‘பிறசர்’(Pressure) கூடிற்றுது”, ”‘சுகர்’(Sugar) நல்லா குறஞ்சிற்றுது”, ”கிறுதி வருகிறது” என்று மட்டும், இக்கட்டுரையை எழுதியதற்காக கட்டுரை ஆசிரியரின்மீதோ, இக்கட்டுரையைப் பிரசுரித்ததற்காக பத்திரிகை ஆசிரியரின் மீதோ தயவுசெய்து பழிபோடாதீர்கள்! இதுதான் அந்த ‘மொடேன் அவுட்லுக்’! இதனை மூன்று வகையாகப் பார்க்கலாம். கொஞ்சக் காலத்திற்கு முன்னர், மாணவர்கள் தூரத்தில் நின்றுகொண்டு ஆசிரியருடன் கதைப்பார்கள் அல்லது ஆசிரியரைக் கொஞ்சம் தூரத்தில் கண்டுவிட்டால் வேறு வழியால் செல்வார்கள்! இது முதல்வகை ஆகும்.

இது சரியானதா, தவறானதா? என நோக்குவதற்கப்பால், இவையெல்லாம் மாணவர்கள் ஆசிரியரின்மேல் வைத்திருக்கும் மரியாதையிலும் பக்தியிலும்தான் என்பதை சற்றுப் புரிந்துகொள்ள வேண்டும். இப்போது, அந்த இடைவெளிகள் எல்லாம் குறைக்கப்பட்டு, மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையே நெருக்கம் ஏற்பட்டிருக்கிறது! எப்படி என்றால், அருகில் நின்று ஆசிரியரின் கையைப்பிடித்து - பகிடி அடித்துப் ‘பைம்பல் விட்டு’க் கதைக்கும் அளவிற்கு மாணவர்கள் வளர்ந்திருக்கிறார்கள். ஆசிரியர்களால் என்ன செய்யமுடியும்? பாவம் அவர்கள், சகித்துக்கொள்கிறார்கள். ‘மொடேன் அவுட்லுக்’கில் இது இரண்டாம் வகையாகும்!

மூன்றாவது வகையானது, மாணவர்களைக் கண்டதும் ஆசிரியர் வேறுவழியால் செல்வது - ‘தப்பினேன் பிழைத்தேன்’ என ஓடிச் செல்லுகின்ற நிலையாகும்! இல்லையென்றால், “சேர், பாட்டி(Party) ஒன்று போடுவோமா?” அல்லது, “சேர், வீட்டில ‘ஆன்ரி’(Anty) எப்படி சுகமாக இருக்கிறாங்களா?” அல்லது, “கொஞ்ச நாளா, ‘ரியூசனுக்கு’(Tution), மகளக் காணோமே சேர்!” எனக் கேட்டுவிடுவார்களோ என நினைத்து மாணவர்களுடைய கண்ணில் இருந்து மறையவேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது இன்றைய ஆசிரியர்களுக்கு! என்ன செய்வது,‘ தூண்டனைக் கண்டால் தூர விலகு’ என்கிறது ஆன்றோர் வாக்கு. இச்சூழ்நிலையில், வேறு தெரிவுகள் இல்லாத இடத்தில் தப்பியோடி இவர்களுடைய கண்ணிலிருந்து தலைமறைவாகுவதைவிட இவ்வாசிரியர்களால் என்னதான் செய்யமுடியும்?

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யூன் 8ஆம் திகதி தூய ஆவியானவரின் பெருவிழா

# தூய ஆவியால் ஊட்டம் பெறுவோம்

அருட்சகோதரர் செ. தொபியாஸ் CMSF, பிரான்சிஸ்கன் சகோதரர், மாத்தளை.

மூவொரு இறைவனின் மூன்றாம் ஆளாகிய தூய ஆவியின் வருகையின் பெருவிழா 'பெந்தக்கோஸ்தே' என்னும் அபிசேக விழா 50ஆம் நாள் என்றும் பொருள் கொண்டதாகும். இதுவே இயேசுவின் மறை உடலாம் திருச்சபையின் பிறந்த நாளுமாகும். இயேசுக்கிறிஸ்து தூய ஆவியால் அருட்பொழிவு (அபிஷேகம்) செய்யப்பட்டதுபோல் நாமும் அதே தூய ஆவியால் அருட்பொழிவு செய்யப்பட்டுள்ளோம் (லூக் 24:49). எனவே நாம் அனைவரும் விண்ணகத் தந்தையின் பிள்ளைகள். தூய ஆவியில் அனைவரும் இயேசுக்கிறிஸ்துவின் சகோதர சகோதரிகள். "கடவுள் தம் மகனின் ஆவியை எங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியதால் நாம் இறைவனை 'அப்பா, தந்தையே' எனக் கூப்பிடுகின்ற உரிமையைப் பெற்றுக்கொண்டோம். இனி நாம் அடிமைகள் அல்ல, உரிமைப்பேறு உடையவர்களாகவும் இருக்கின்றோம். இது கடவுளின் செயல்" (கலாத்தியர் 4: 6 -7).

கடவுளுடைய மகனின் மனித அவதாரப் பேருண்மையை நாம் அறியவேண்டுமாயின் நாம் தூய ஆவியாரின் வல்லமையை, ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். இந்தத் தூய ஆவியானவராலேயே (லூக் 1:35) இறைவன் மனுவுரு எடுத்தார் என்பதையும், இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்த ஆவினானவர் எம்மோடு உடன் இருப்பவராகவும் எம்முடைய சாவுக்குரிய உடலை உயிர்பெறச் செய்கிறார் என்பதையும் (உரோமர் 8:10-11) விவிலியம் எமக்கு எடுத்துரைக்கிறது. இதுவே விசுவாச உண்மையுமாகும். இத்தகைய செயல்கள் உலகில் நடைபெறுகின்றனவென்றால் அவை தூய ஆவியின் ஆற்றலினால், அவரது சக்தியினாலேயே நடைபெறுகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் கடவுளின் குரலுக்கு, அவரது அழைப்புக்கு ஏற்ப வாழ அழைக்கப்படுகின்றனர்.

இத்தகைய வாழ்வைத்தான் ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாழவேண்டும். தூய ஆவியார் தரும் உதவியை மூன்று வகையாகப் பிரிக்கலாம்; ஆவியின் கொடைகள், வரங்கள், கனிகள் என்பவையே அவை. ஆவியின் கொடைகள் ஞானம், புத்தி, விவேகம், அறிவு, திடன், பக்தி, தெய்வபயம் என்பன. அதேபோல் தூய ஆவியின் வரங்கள் ஞானம் நிறைந்த பேச்சு, விசுவாசம், நோய்களைக் குணமாக்கும் வரம், புதுமை செய்யும் ஆற்றல், இறைவாக்குரைக்கும் வரம், தேர்ந்துதெளியும் திறன், பரவசப் பேச்சு, அதை விளக்கும் திறன் போன்றவையாகும். இவ்வாறெல்லாம் பல வரங்களைத் தூய ஆவி வழங்குகின்றார் (1 கொரி 12:8-11). இதேபோன்று பொறுமை, பரிவு, விசுவாசம், சாந்தம், தன்னடக்கம் (கலாத் 5:22) போன்ற கனிகளை வழங்குகிறார். தனிப்பட்டவர் என்ற முறையில் பழக்கவழக்கங்கள், தகுதிகள், திறமைகள், தனிப்பண்புகள் ஆகியவற்றில் நாம் வேறுபட்டவர்களாக இருப்பினும் அனைவரும் மனித மாண்பு உடையவர்களாகவும், சமமானவர்களாகவும் இருக்கின்றோம்.



எமது ஆன்மீக வாழ்வு தூய ஆவிக்குள் வாழப்படுவதைப்போல எமது உலகியல் வாழ்வு பல வகையான கலாச்சார, பண்பாட்டுப் பின்னணியில் வாழப்படவேண்டி உள்ளது. இந்நிலையில் பல்வேறுபட்ட சவால்களை நாம் சந்திக்கவேண்டி உள்ளது.

கத்தோலிக்க கிறிஸ்தவ வாழ்வில் ஏற்படும் சோதனைகள், வேதனைகள், ஏமாற்றங்கள் இவற்றுக்கிடையில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தூய ஆவியில் வாழும்போதுதான் ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்து (தி.பா 34:8) வாழ்க்கையை இன்புறச்செய்ய முடியும். இவற்றை ஏற்று வாழ மறுக்கும்போது 'நான்', 'எனது' என்று பிரிந்து, நமக்குள் இருக்கும் பயம், பாதுகாப்பின்மை போன்றவை எமது சாட்சிய வாழ்வுக்கு சவால்களாக அமைகின்றன.

இன்றைய காலகட்டத்தில் தனித்தன்மைக்கும் பொதுமைக்கும் இடையே ஒரு சுமுகமற்ற தன்மை நிலவுகின்றது என்பது எதார்த்தமான உண்மை. இதை நாம் புரிந்துகொண்டவர்களாக எம் தாய்த் திருச்சபையில் தனி வரம், நோக்கம், அகக் காட்சி, திருத்தூதுப்பணி, திருத்தூதர்களில் காணப்பட்ட வாழ்க்கைமுறை (தி.பணி. 2:42-47) ஆகியவற்றைக் கொண்டு வாழ அழைக்கப்படுகின்றோம். இவற்றிற்கெல்லாம் அடிப்படையில் தூய ஆவியானவரின் இறையருள் என்னும் கொடையைப் பெற்றவர்களாக வாழ்வில் பதிலிறுப்பது அவசியமாகும். இதனால் எமது இல்லமும் உயிரூட்டம் பெறுகின்றது. உலகம் தரமுடியாத அமைதியைக் காணமுடியும் (யோவான் 14:23-27). ஏனெனில் தூய ஆவியானவரின் உடனிருப்பில் உண்மையான சுதந்திரமும் மகிழ்ச்சியும் உண்டாகும். இந்த நிலையில் நாம் ஆவியிலும் உண்மையிலும் இறைவனை வழிபடுபவர்களாக இவ்வுலகில் மனித மாண்பும் மகத்துவமும் கொண்டு வாழ்வோம். வளம் பெறுவோம்.

ஒளியாம் இறையே வாராய் எளியோர் நெஞ்சம் தனிலே.

# இயேசுவைத் தேடுவோம்

றாஜசேகர். செபமாலைத்தாசர் சபை. கண்டி.

வாழ்க்கை என்பதே தேடல். தேடல் இல்லாத வாழ்க்கை தென்றல் இல்லாத சோலை. தேடல் இல்லாத பயணம் திசைமாறிய பயணம். இந்த உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் ஏதொவொரு வகையில் ஏதோவொன்றைத் தேடிக்கொண்டே இருக்கிறான். தேடல் என்பது அவனது வாழ்வில் இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது.

இந்த உலகில் உதிக்கும் ஒவ்வொரு மனிதனும் கல்லறைக்குள் செல்லும்வரை எதிர்காலத்தைப் பற்றியே சிந்திக்கின்றான். எதிர்கால வாழ்வை வளப்படுத்த ஒவ்வொரு கணமும் தேடுகின்றான். பெற்றோர்கள் பிள்ளைகளைக் கரைசேர்க்க சொத்துக்களைத் தேடுகின்றனர். பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்ல வேலையைப் பெற்றுக்கொள்ளக் கல்வியைத் தேடுகின்றனர். இவ்வாறாக ஒவ்வொருவரும் ஏதோ ஒரு தேடலில் ஈடுபட்டுள்ளனர்.

நவீன உலகிலே 21ம் நூற்றாண்டிலே வாழுகின்ற நாம் இற்றைக்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதர்களைப்போல அல்லாமல் இன்று நாம் ஒவ்வொருவரும் இந்த உலகையே நமது கைகளில் வைத்துள்ளோம். உலகில் நடந்தேறும் சம்பவங்களை உடனுக்குடன் அறிகின்றோம்; தேடுகின்றோம். இவ்வாறாக மனிதனின் தேடல் நாளுக்கு நாள் விரிவடைந்து செல்கிறது.

இங்கே பெண்கள் சிலர் உயிர்த்த இயேசுவைத் தேடுகின்றனர். (லூக்: 24:5) "உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்?" இயேசு இவ்வுலகப் பகிரங்கப் பணியில், தம்முடைய பாடுகள், மரணம், உயிர்ப்பினைப்பற்றி தம் சீடர்களுக்கு முன்கூட்டியே எடுத்துரைத்தார். இந்த உலக வரலாற்றை நாம் பார்க்கின்றபோது எத்தனையோ தலைவர்கள் மதத்தலைவர்களும் சரி, அரச தலைவர்களும் சரி தோன்றியும் மறைந்தும் இருக்கின்றனர். ஆனால் நம் மீட்பர் இயேசுவைத்தவிர வேறு யாரும் தம்முடைய இறப்பைப்பற்றியோ அல்லது இறந்து மீண்டும் உயிருடன் வருவோம் என்பதைப் பற்றியோ முன்கூறவில்லை. "நான் மீண்டும் வந்து உங்களை என்னோடு அழைத்துச் செல்வேன்"(யோவான்:14:13) என இயேசு தாம் கூறியதுபோல மீண்டும் உயிருடன் வந்தார். தன்னுடைய சீடர்களைச் சந்தித்தார். "இக்கோவிலை இடித்துவிடுங்கள். நான் மூன்று நாளில் இதைக்கட்டி எழுப்புவேன்" (யோவான்: 2:19). உயிர்த்த கிறிஸ்துவில் நாம் எமது விசுவாசத்தை வைக்கவில்லையென்றால் எமது கிறிஸ்தவ வாழ்வு பொருளற்றதாகிவிடும் (1கொரி: 15:14). மீட்புப்பற்றி கடவுளால் வகுக்கப்பட்ட திட்டம் மாட்டுத்தொழுவிலே பாலனாகப் பிறந்த இயேவில் ஆரம்பிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுதலின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றது. தொடக்ககால வரலாற்றில் ஆதிப்பெற்றோர் கடவுளின் வார்த்தையைமீறிப் பாவத்திற்குள் நுழைந்தார்கள். ஆனால் கடவுள் நம்மீது கொண்ட அன்பின் நிமித்தம் புதிய ஆதாமாகிய இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பி நமது பாவத்திற்கு பலிக்கடாவாக அவரை ஒப்புவித்தார். ஒரேயோரு மனிதனின் கீழ்ப்படியாமையினால் பலர் பாவிகள் ஆனார்கள். ஆனால் புதிய ஆதாமாகிய இயேசுவின் செயலினால் பலர் கடவுளுக்கு ஏற்புடையவர்களானார்கள் (உரோ: 5:12).

உயிர்த்த இயேசு இன்றும் எம்மோடு, எம்மத்தியில் வாழ்கின்றார். எமது வாழ்வின் பலமும் நம்பிக்கையுமாக இருக்கின்றார். இயேசுவைக் கைதுசெய்து துன்புறுத்திக் கொன்றதும் அப்போஸ்தலர்களிடையே நம்பிக்கையும் அவர்களுடைய வேதசாட்சிய வாழ்வும் புதைக்கப்பட்டிருந்தது. இறந்த இயேசு உயிருடன் எழுந்து காட்சிதரும்வரையும் அவர்கள் பயத்திலும் அச்சத்திலும் வாழ்ந்தார்கள். இயேசுவின் சீடர்கள் இயேசுவோடு பயணிக்கும்போதெல்லாம் யேசு சொன்னவை அனைத்தையும் புரிந்துகொள்ளாதவர்களாக இருந்தனர். "இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்து கொள்ளவில்லை" (யோவான்: 20:9). ஆனால் உயிர்த்த இயேசுவின் காட்சிகளினூடாக அவர்கள் இறுதிவரை சாட்சிய வாழ்வு வாழ்ந்தார்கள்.

### வேதாகமத்தில் உயிர்த்த இயேசுவின் 12 காட்சிகள்:

1. சில பெண்களுக்கு (மத் 28: 9 – 10)
2. மகதலா மரியாவுக்கு (யோவான் 20 : 11- 18 )
3. பேதுருவுக்கு (1 கொரி : 15: 5)
4. எம்மாவு வழியில் சீடரைச் சந்தித்தல் (லூக் : 24: 13-31)
5. சீடர்களுக்கு தோன்றுதல் (லூக்கா 24:36)
6. இயேசு தோமாவுக்கு தோன்றுதல் (யோவான் : 20- 24)
7. இயேசு பதினொரு சீடர்களுக்கு தோன்றுதல் (மத்: 28 – 16)
8. இயேசுவின் விண்ணேற்றம் (அப்.பணி: 1: 6-9)
9. இயேசு தம் சீடர் எழுவருக்குத் தோன்றுதல் (யோ : 21:1)
10. ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்களுக்கு தோன்றுதல் (1கொரி:15: 6)
11. யாக்கோபுக்குத் தோன்றுதல் (1கொரி : 15: 7)
12. சின்னப்பருக்குத் தோன்றுதல் (1கொரி : 15: 8)

இவ்வாறாக இயேசு தம்மில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு காட்சிகொடுத்து அவர்களைத் திடத்திலும் தைரியத்திலும் திழைக்கச் செய்தார்.

இன்றும் உயிர்த்த இயேசு எம்மோடு வாழ்கின்றார். எமது வாழ்வில் உயிர்த்தெழுதல் தேவை. பாவ வாழ்வில் இருந்து நாம் உயிர்த்தெழ வேண்டும். அயலவனைக் குறைகூறுவதில் இருந்து நாம் உயிர்த்தெழ வேண்டும்.

நாம் இயேசுவின் அன்புப் பிள்ளைகள் என்றால் எமது வாழ்வில் அவருடைய அன்புச் செயல்கள் இடம்பெற வேண்டும். உலகின் நவீன போக்குகளில் நாம் சிக்குண்டு வாழாமல் ஆண்டவர்தாம் எமக்குத் தஞ்சம் என்று வாழவேண்டும். எமது மனமாற்றத்திற்காகவும் புதுவாழ்விற்காகவும் தினமும் மன்றாட வேண்டும். "கடவுளே எங்களை முன்னைய நன்னிலைக்கு கொணர்ந்தருளும், எம்மை மீட்குமாறு உமது திருமுக ஒளியைக் காட்டியருளும்." (திருப்பாடல் : 80 : 3).

## வவுனியாவில் உள்ள வரோட் அமையத்தின்

# வருடாந்த விளையாட்டு, கண்காட்சி, கலை இலக்கிய விழா

## மாற்றுத்திறனாளிகளின் ஆற்றல்களுக்கு களம்

மாற்றுத் திறனாளிகளுக்காக 'வரோட்' அமையத்தினால் வருடாந்தம் ஒழுங்கமைக்கப்படும் விளையாட்டு, கண்காட்சி, கலை இலக்கிய விழாவானது இம்முறை **"வாழ்வாங்கு வாழ எழுவோம் குழுவாய்"** என்னும் கருப்பொருளில் ஏப்ரல் மாதம் 25 – 27ஆம் திகதிகளில் வவுனியா பம்பைமடுவில் உள்ள வரோட் பிரதான அலுவலக மைதானத்தில் நடைபெற்றது. மாற்றுத்திறனாளிகளுக்கு சமவுரிமையையும், சமசந்தர்ப்பத்தினையும் வழங்கி அவர்களின் திறன்களை வெளிக்கொணர்வதன் ஊடாக அவர்களிடம் தன்னம்பிக்கையை உருவாக்கி சமூகத்தில் சமமதிப்பு பெற்றுக்கொள்ள வழிவகை செய்தலுக்கான ஒரு வடிவமே இவ்விழாவின் நோக்கமாகும்.

இவ்வகையில் தொடக்கநாள் நிகழ்வுகள் வரோட் அமையத்தின் நிறைவேற்று இயக்குனர் அருட்தந்தை அல்பேட் ஜோ அருள்ராஜா (CMF) அவர்களினால் மங்களகரமாக தொடக்கிவைக்கப்பட்டன. அன்றைய தினம் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்ட மாவட்ட மட்டத்திலான கலை இலக்கியப் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட நிகழ்வுகளுக்கான இறுதிச்சுற்றுப் போட்டிக்குரிய தினமாக அமைந்திருந்தது. அன்றைய தினம் மாலைநேர நிகழ்வாக **வாழ்வாங்கு வாழ எழுவோம் குழுவாய்** என்ற தலைப்பில் மூன்று மாவட்டங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட நாட்டுக்கூத்துக்கள் இறுதிச்சுற்றுப் போட்டிக்காக அரங்கேறியமை சிறப்பம்சமாகும்.

இரண்டாம் நாள் காலை நிகழ்வானது மைதான நிகழ்ச்சிகளுக்குரியதாக அமைந்திருந்தது. வவுனியா மாவட்ட அரச அதிபரும், மாவட்டச் செயலாளருமான திருவாளர் எம். பந்துல ஹரிச்சந்திர அவர்கள் முதன்மை விருந்தினராக வருகைதந்து இந்நிகழ்வுகளை சம்பிரதாயமுறையில் தொடக்கிவைத்து சிறப்பித்திருந்தார். மாற்றுவலுவுடைய ஆண், பெண் இரு பாலாருக்குமான மரதன், சைக்கிள் மற்றும் சக்கர நாற்காலி ஓட்டப்போட்டிகள் வவுனியா - மன்னார் பிரதான வீதி வழியே நடந்தமை சமூக விழிப்புணர்விற்கு வழிகோலி இந்நாளை மேலும் அர்த்தமுள்ளதாக்கியது.

அன்றைய தினம் மாலைநேர நிகழ்வானது "கலைமாலைப் பொழுது" என்ற தலைப்பில் நடந்தேறியது. இறுதிச் சுற்றுப்போட்டிகளில் முதலிடம்பெற்ற கலை இலக்கிய நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதுடன், வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். கலைமாலைப் பொழுதுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்ரர் சோசை அடிகளார் வருகைதந்து சிறப்பித்திருந்தார். அவர் தனதுரையில் வரோட்டின் ஐந்தாண்டுகால மாற்றுவலுக்கொண்டோருக்கான வலுவூட்டற் பணிகளைப் பாராட்டியதோடு, பாரம்பரிய கலை கலாச்சார மற்றும் பண்பாட்டு நிகழ்வுகள் அருகிக்கொண்டுவரும் இக்காலகட்டத்தில் இவ்வாறான முயற்சி இன்றியமையாததொன்று எனவும், இத்தகைய நிகழ்வுகளுக்கூடாக இக்கலைகள் எதிர்கால சந்ததியினருக்குக் கொண்டுசெல்லப்படுவதற்கான வாய்ப்பாக மாற்றுத்திறனாளிகள் ஆகிய உங்களது முயற்சி அமைவது மிகவும் பாராட்டப்படவேண்டியதொன்று எனவும் கூறினார்.

இறுதிநாள் நிகழ்வானது மைதான நிகழ்வுகளுக்குரிய நாளாகவும், வெற்றிபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான பரிசில்கள் வழங்கிப் பாராட்டப்படுவதற்கான நாளாகவும் அமைந்திருந்தது. அத்தோடு கைவினைப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் இந்நாளுக்கான மற்றொரு சிறப்பம்சமாக அமைந்திருந்தது.

இம்மூன்று நாள் நிகழ்வுகளிலும் பல்வேறு கலை இலக்கியப் போட்டிகளும் 78 மைதான போட்டிகளும் நடந்தேறின. இவை அனைத்திலும் சுமார் 716 வரையான பல்வேறு வகையான மாற்றுத்திறனாளிகள் மேற்படி மூன்று மாவட்டங்களிலிருந்தும் மூன்று நாட்களாகப் பங்குபற்றியிருந்தனர்.

அனைத்து நிகழ்வுகளும் அமையத்தின் நிறைவேற்று இயக்குனரின் வழிகாட்டல் மற்றும் நெறிப்படுத்தலின்கீழ் அமையத்தின் இலக்குக் குழுவினரோடு இணைந்து பணியாளர்களால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகள் ஆகியோரது நிதியனுசரணைகளும் பரிசுப்பொருள் அன்பளிப்புக்கள் என்பனவும் இங்கு நன்றியோடும் பாராட்டுதலோடும் நினைவுபடுத்தப்பட வேண்டியவை.

- வரப்புரைப் பிரிவு, வரோட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## பேதங்கள் மறந்தவரே

வாழ்க்கையெனும்
படகினிலே
வந்துசெல்லும்
சொந்தங்களே!
உங்கள் வாழ்க்கைதனை
ஒரு நிமிடம்
விளித்துப்பாருங்கள்
சாதியென்ற பேதம் எம்மை
சகதிக்குள் தள்ளியதை!

பாவிப்பெண் யேசுவின்
பாதம்தனை
பரிமள தைலத்தால்
பரிசுத்தமாக்கி,
பேதையவள்
தன்கூந்தலினால்
துடைத்தாள்.

இன்று தாழ்த்தப்பட்டோர்
எனப்படுவோர்
தவறிழைத்தால்
மன்னிப்பில்லை.
உயர்த்தப்பட்டோர்
எனப்படுவோர்
குற்றமிழைத்தால்
அதில் குறையில்லை.

இலாசரெனும் ஏழை
நண்பனுக்காய் கண்ணீர்
விட்டார் எம்பெருமான்.
அவன்மேல் கொண்ட
கனிவால் உயிரளித்தார்.

எம்மிடையே பலர் இறப்பார்.
இருப்பினும் கல்லறையில்
இரண்டிருக்கும்.
உயர்ந்தோருக்கொன்று
தாழ்ந்தோருக்கொன்று.

வரியினால் சுமைசுமத்தும்
சக்கேயுவை கருணையுடன்
மன்னித்தார் இயேசு.
அவனருகில் அமர்ந்து
பந்தியிலே விருந்துண்டார்.
இன்று பந்திகள் பலவுண்டு
கொண்டாட்டங்களில்.
உயர்ந்தோர் எனப்படுவோர்
முதல் பந்தியாம்.
மற்றெல்லாரும் பிந்தியாம்.
விசயம் என்னவென்றால்
யாரும் அறியாது
கைநனைத்தால் - அந்த
உயர்குலத்தோர்
குழம்பிடுவர்.

ஞாயிறு தினமென்றால்
மாட்டிறச்சிக் கடையினிலே
கூடுவர் உயர்குலத்தோர்.
ஆனால்
கொண்டாட்டப் பந்தியிலே
"ஜயோ நாங்க இது
சாப்பிடமாட்டோம்.
ஏனென்றால் நாங்க அந்த
அவங்க" என்பார்.

திருநாளாம் ஊர்வலமாம்
புனிதருக்கு அங்கே.
தேரிழுக்க தகுதிவேண்டும்
பக்தனுக்கு இங்கே.

பேதங்களை மறுத்தவரே
இயேசுவே!
இங்கு பிளவுபட்ட மனிதரைப்
பாருமையா!
உம்மைத் தரிசிக்கக்
கூடுகின்ற கோயிலே
பிளவுபட்டால்
வேறெங்கு போவோம்
ஒன்றிணைய?
பாடுகள் ஏற்றவரே
பரிசுத்தமாக்குமையா
இப்பாரினை உம்
இரத்தத்தால்!

*- வலி சுமந்த
வரிகளுடன் 'திந்ஷா'
மன்னார்.*

## மழையாக நீ வருவாயா

மனிதம் மண்ணில் புனிதம் அடைந்திட
மன்னித்தல் வாழ்வின் அவசியம் உணர்ந்திட
மாசுமறுக்கள் மனதினின்று களைந்திட
யேசுவே மழையாக நீ வருவாயா?

மனித மாண்பு குடும்பத்தில் மலர்ந்திட
மங்காப் புகழுடன் மக்களும் வாழ்ந்திட
மறுவாழ்வின் பேறதனை நாளும் நினைத்திட
யேசுவே மழையாக நீ வருவாயா?

மதுபோதை வாழ்வில் மறுபேதையாக
மானமிழந்து வாழும் மனிதா நீ மாற
மறுபடியும் தெய்வம் மரணிப்பதோ?

மாறுதே உலகம் நீ மட்டும் மாறாயோ?
மனக்கசப்பின் வேர்கள் அறுந்திட வேண்டாமோ?
மனப்புண்கள் ஆற்றிட மருந்தாகிட வேண்டாமோ?

மண்டையோடு எனப்படும் கொல்கொதா பலிக்களம் - இன்று
மண்டையோடு காணுதே மன்னார் மாதோட்டம்
மறக்கவா முடியும் நம் மனித இனம் சிதைந்ததை.

மண்ணான மனிதா நீ மண்ணாவது நிச்சயம்.
மண்ணாசை துறப்பது உன் வாழ்வின் அவசியம்.
மனதிலிருத்தி வாழவே வந்தது இத்தவக்காலம்.

***திருமதி. எ. ஆபிரகாம் சொய்சா,
வட்டாரம் - 7, வங்காலை.***



# சிறுகதை

ம. லடிஸ்லாஸ்,
இல. 279 வீரபுரம், நேரியகுளம்,
பெரிய நொச்சிக்குளம்.

## செபமாலை

அது வைகாசி மாதம். மாதாவின் வணக்க மாதம். மாலை சுமார் 4.30 மணியிருக்கும். நான் எனது நண்பர்களுடன் ஊரில் உள்ள பொது விளையாட்டு மைதானத்தில் கிரிக்கட் விளையாடிக் - கொண்டிருந்தேன்.

எனது அம்மா நான் விளையாடப்போகும் போதெல்லாம் "வீட்டில் மாலை 06 மணிக்கு குடும்ப செபமாலை சொல்ல வேண்டும். இந்த மாதமாவது விளையாட்டுக்குப் போகாமல் வீட்டில் நின்று அம்மா அப்பாவோடு சேர்ந்து செபமாலை சொல்லு தம்பி" என்று சொல்லிக்கொண்டே இருப்பார். நானோ அதைக் காதில் விழுத்துவதில்லை. நான் என்ர பாடு.

வழமைபோலவே மாலை 4:30 மணி என்றவுடன் கடமையுணர்வோடு வேலைக்குப் புறப்படுவோர் போல கையில் துடுப்பாட்ட மட்டையுடனும் ஜீன்ஸ் பையில் பந்துடனும் வெளிக்கிட்டுவிடுவேன்.

அம்மா எனக்குப் புத்திமதி சொல்லிச் சொல்லி முடியாத நிலை. ஞாயிறு காலைத் திருப்பலி முடிந்தவுடன் என்னைப்பற்றி எமது பங்குத்தந்தையிடம் சொல்லிக் கொடுத்துவிட்டார். "இவன் மாலையில் குடும்ப செபமாலையில் பங்கு கொள்வதில்லை. நானும் எத்தனையோ தடவை சொல்லிவிட்டேன். இது வைகாசி வணக்க மாதம். இந்தக் காலத்திலாவது குடும்ப செபமாலையில் பங்குகொள் என்று. ஆனல் இவன் கேட்பதேயில்லை. செவிடன் காதில் ஊதின சங்குபோல நீ சொல்லுறத சொல்லு நான் என்ர வேலையைப் பார்ப்பேன் என்று மாலையானதும் விளையாடப் போய்விடுவான். இவனைக் கண்டித்து புத்திமதி சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டார்.

எனது பங்குத்தந்தையும் என்னை அழைத்து "ஏனடா நீ குடும்ப செபமாலையில் பங்குகொள்ளாமல் விளையாடப் போய்விடுகிறாயாம். அம்மாவின் சொல்வழியெல்லாம் கேட்பதில்லையாம் என அம்மா எனக்குச் சொன்னா. இனி நீ இப்படியான சேட்டைகளையெல்லாம் கைவிட்டு செபமாலையில் பங்குகொள். அம்மா சொல்வதையெல்லாம் கேட்டு நட" என்று சொன்னார். நானும் கைகளை கட்டிக் கொண்டு 'ஓம் பாதர் ஓம் பாதர்' என்று எல்லாவற்றிற்கும் சரி என்று தலையை ஆட்டிவிட்டு வீடு திரும்பினேன்.

அன்று மாலையே பழைய குருடி கதவைத் திறடி என்று விளையாடப் போய்விட்டேன். நான் பொதுவாக வேகப்பந்துக்குத்தான் துடுப்பெடுத்தாடுவது வழக்கம். அதேபோல்தான் அன்றும் விளையாடினேன். பந்து அதிக வேகத்தில் வந்ததால் நேரடியாக என் கண்ணில் அடிபட்டு கண்திறக்க முடியாத நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டேன்.

தாங்கமுடியாத வலி வேதனை. கண்ணெல்லாம் சிவந்து கண்ணை முழுமையாகத் திறக்க மூன்று நான்கு நாட்களாகின.

நான் அந்த வைத்தியசாலையில் இருந்த நாட்கள் மறக்கமுடியாத நாட்களாயின. அங்கே என்னோடு சேர்ந்து பக்கத்துக் கட்டிலில் வயோதிப ஜயா ஒருவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் மாலை 5.00 மணியானதும் கையில் செபமாலையுடன் மிக மிகப் பக்தியுடன் செபமாலை சொல்ல ஆரம்பித்து விடுவார். நான் அவரிடம் கேட்டேன் "ஜயா! ஒவ்வொரு நாளும் உங்களை அவதானித்தேன். மாலையானதும் செபமாலை சொல்ல ஆரம்பித்து விடுகிறீர்கள் இதில் அவ்வளவு முக்கியம் என்ன இருக்கிறது?" அந்த முதியவர் சொன்னார். "இறைவனோடு உரையாடுவதற்கும், எமது தேவைகளையெல்லாம் அவரிடம் கேட்பதற்கும் இலகுவான ஒரே வழி செபம் ஒன்றுதான் ...." என்று பல விடையங்களைச் சொல்லி செபமாலையின் முக்கியத்துவத்தை எனக்கு தெளிவுபடுத்தினார். அப்போதுதான் எனது ஆறாவது அறிவு தெளிவு பெற்றது. செபத்தின் வல்லமையை உணர்ந்தேன். செபமாலையில் பங்கு கொள்ளாமையினால் எனக்கு ஏற்பட்ட விபரீதத்தை நினைத்தேன். அம்மா ஓயாமல் எனக்குச் சொன்ன அறிவுரைகளையும், அதை நான் செவிமடுக்காமல் நடந்துகொண்ட விதத்தையும், எனது பங்குக் குரு ஆலயத்தில் வைத்துக் கூறிய அறிவுரைகளை உதாசீனம் செய்ததையும் உணர்ந்தேன்.

அன்று தொடக்கம் மாலையானதும் குளித்துவிட்டு விளையாட மைதானம் போவதையெல்லாம் நிறுத்தி, துடுப்பாட்ட மட்டைக்குப் பதிலாகக் கையில் செபமாலையுடனும் வேதாகமத்துடனும் எனது பெற்றோருடன் சேர்ந்து தவறாது திருச் செபமாலையில் பங்குகொள்ள பயபக்தியுடன் அமர்ந்திடுவேன்.

# கொஞ்சம் சிரிங்க

**மகன் :** அப்பா நான் பரீட்சையில் எல்லாம் 100 புள்ளிகள் வாங்கி இருக்கிறேன்.
**அப்பா :** எனது மகன் இப்படி புள்ளிகள் எடுத்தால் சந்தோசத்தில் எனக்கு 'ஹாட் அற்றாக்' வந்துவிடும்!
**மகன் :** அப்பா, இப்படி உங்களுக்கு ஒரு ஆபத்து வரக்கூடாது என்றுதான் நான் எல்லாப் பாடத்திலும் பத்துப் பதினைந்து மாக்ஸ் வாங்கி இருக்கிறேன்.....!

*- அ. சுகன்யா, தேவன்பிட்டி, புதுக்காடு.*

**கஸ்டமர் :** உங்க ஹோட்டல்ல நல்ல வசதி இருக்கா?
**முதலாளி :** நிச்சயமா சார். உங்க வீட்டுமாதிரி நீங்க பீல் பண்ணலாம்!
**கஸ்டமர் :** அட கஷ்ட காலமே! இங்கேயும் அதே பிரச்சினையா? இதுக்கு நா வீட்டிலேயே தங்கிடுறது நல்லது.

*- பீ. மயூரி, முதலைக்குத்தி, உயிலங்குளம்.*

**முருகேசு :** எயா போட்டில கல்யாணமா? ஏன்?
**கணேஷ் :** அமெரிக்கா மாப்பிள்ளையாம். தாலி கட்டின உடனே பிளேன் ஏறனும் என்று சொன்னார் அதுதான் அந்த ஏற்பாடு.

........................................

**கமலா :** டாக்டர், கொஞ்ச நாளா என் கணவனுக்கு தூக்கத்தில கதைக்கிற வியாதியிருக்கு.
**டாக்டர் :** பகல்ல கதைக்கிறதுக்கு கொஞ்சம் டைம் கொடுத்தா சரியா போய்விடும்.

........................................

**மறையாசிரியர் :** திருப்பலியில் மிகவும் பிடித்த பகுதி என்ன?
**மாணவன் :** "சென்று வாருங்கள் திருப்பலி முடிந்தது" என்று பாதர் கூறும் கடைசி வார்த்தை.

*- ம. காமலின் சௌமியா குருஸ்,
முத்தரிப்புத்துறை.*

# மன்னா விளம்பரப் பலகை

உழைப்பின் சக்தியே உலகின் மிக உன்னதமானது.
அதை வெற்றிகொள்ளும் ஆற்றல் வேறெந்தச் சக்திக்கும் கிடையாது.
*- ம. வேஜின் பிரவினா, பாலைப்பெருமாள்கட்டு, வட்டக்கண்டல்.*

வாழ்க்கை என்பது :
ஒரு சந்தர்ப்பம் - நழுவவிடாதிருங்கள்.
ஒரு கடமை - நிறைவேற்றுங்கள்.
ஒரு இலட்சியம் - சாதியுங்கள்.
ஒரு சோகம் - தாங்கிக்கொள்ளுங்கள்.
ஒரு போராட்டம் - வென்று காட்டுங்கள்.
ஒரு பயணம் - நடத்தி முடியுங்கள்.
*- அப்துல் கலாம்*
*- ஜெயா பாலாஜி, முருங்கன்.*

நம்முடைய வலி மற்றவர்களுக்குச் சிரிப்பாக இருக்கலாம்.
ஆனால் நம்முடைய சிரிப்பு மற்றவர்களுக்கு
வலியாக இருக்கக்கூடாது.
*- ச. டெ. சிலோஜனா, புதுக்காடு, தேவன்பிட்டி.*

நான் தோற்றுப் போகலாம். அதன் பொருள்
வெற்றி சாத்தியமற்றது என்பதல்ல - சேகுவேரா

நீ விரும்பாததை யார் சொன்னாலும் செய்யாதே.
நீ விரும்புவதை உலகமே எதிர்த்தாலும் செய்துமுடி.
- லெனின்
*- ஜெயா பாலாஜி, முருங்கன்.*

நல்ல நூல்களைப் படிப்பது தலைசிறந்த மனிதருடன்
உரையாடுவதைப் போன்றது.
கோபம் அறிவாளியைக்கூட முட்டாளாக்கிவிடும்.
*- டெ. பியூஸ்லஸ்,
பாலைப்பெருமாள் கட்டு, வட்டக்கண்டல்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் – 09 மாணவர்களுக்கான வினா – விடைத் தொகுப்பு - 2014 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மன்/ அல் - அஸ்ஹர் ம.வி

01. திருவிளக்கின் பெருஞ்சுடரால் அழகுபெற்று ........... களிகூர்வதாக. (அன்னையாம் திருச்சபையும்)
02. ................ தூணின் வெளிச்சத்தால் பாவத்தின் இருளை அகற்றிய இரவும் இதுவே. (நெருப்புத்)
03. இறுதிவரையும் இயேசு அன்புசெலுத்தினார் என்பதே அவரது மரணத்திற்கு அதன் .................. பரிகாரம் எனும் தன்மைகளை வழங்குகின்றது. (மீட்பு)
04. இயேசு தன்னையே வழங்கிய சுயநலமற்ற தியாகச்செயலே .................. (திருவிருந்து)
05. கிறிஸ்துவின் .................. ஒற்றுமையின் அடையாளமாக இருக்கிறது. (மறையுடல்)
06. நசரேத்தூர் செபக்கூடத்தில் இயேசு .................. கைவிடப்பட்டவர்களுக்கும். (ஏழைகளுக்கும்)
07. நாம் வாழ்வுபெறவும் அதை .................. பெறவுமே இயேசு தமது இன்னுயிரைக் கொடுத்தார். (நிறைவாகப்)
08. ஆண்டவர் யேசு அன்பினால் என்னை ............... வந்தார். (மாற்றிடவே)
09. திருவிவிலியத்தை வாசித்து விளங்க .................. வழிகாட்டலைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். (தூய ஆவியின்)
10. பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் இறைகுரலுக்குச் செவிமடுக்க நாம் ................. இருக்க வேண்டும். (விழிப்பாக)
11. உண்மையின் .................. எம்மை நிறை உண்மையை நோக்கி வழிநடத்துவார். (ஆவியானவர்)
12. அன்பு அனைத்தையும்விட ................. உன்னதமானதுமாகும். (நித்தியமானது)
13. கிறிஸ்து தன்னைப் ................. அடையாளப்படுத்தினார். (பணியாளனாகவே)
14. கிறிஸ்து தன்னைத் ................. இறைவன் அவரை உயர்த்தினார். (தாழ்த்தியதால்)
15. பலி ஒப்புக்கொடுத்தல் வழியாக இஸ்ராயேல் மக்கள் இறைவனுக்கு தங்கள் அன்பையும் ................. தெரிவித்தனர். (நன்றியையும்)
16. .............. காலத்தில் ஆரோனும் அவனது புதல்வர்களும் காளைகளைப் பாவப்பரிகாரப் பலியாகவும் செம்மறிக் கிடாய்களை .................. எரிபலியாகவும் ஒப்புக்கொடுத்தனர். (மோசேயின், நறுமணம் வீசும்)
17....... எல்லாப் பலிகளிலும் உன்தமானது. (கிறிஸ்துவின் பலி)
18. கல்வாரியின் சிலுவைப்பலி ..................... நிறைவடைகின்றது. (திருப்பலியில்)
19. தன்மேல் பாவத்தை சுமந்துகொண்ட கடவுளின் ஆட்டுக்குட்டியாக கிறிஸ்துவை .................. அறிமுகம் செய்கின்றார். (யோவான்)
20. 4 - 6 நூற்றாண்டுகள் ................ ஆகும். (பொற்காலம்)
21. நற்கருணை நம்மை கிறிஸ்துவின் .................. இணைக்கிறது. (இதயத்தோடு)
22. ............ செலுத்துவது இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டு மரபுகளில் ஒன்றாகும். (தூபக்காணிக்கை)
23. ..................... கிறிஸ்து எமக்கு புதுவாழ்வைப் பெற்றுத் தந்தார். (சிலுவை மரத்தினால்)
24. கிறிஸ்து அருளும் .................. உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக. (அமைதி)
25. அன்பு அனைத்தையும் ................ கொள்ளும், அனைத்தையும் .................., எதிர்நோக்கியிருக்கும், மனஉறுதியாய் இருக்கும். (1கொரி.13:7) (பொறுத்துக், நம்பும்)
26. தம்முடைய பிரிவின் முறைவந்தபோது ................ கடவுளின் திருமுன் ................. பணி ஆற்றிவந்தார். (செக்கரியா, குருத்துவப்)
27. "இதோ கடவுளின் ......................! ஆட்டுக்குட்டியாம் இவரே .................. பாவத்தைப் போக்குபவர். (ஆட்டுக்குட்டி, உலகின்)
28. இவர்கள் முடிவில்லா .................. அடையவும் நேர்மையாளர் ............... பெறவும் செல்வார்கள். (மத்.25:46) (தண்டனை, நிலைவாழ்வு)
29. மறைநூல் அனைத்தும் ................. பெற்றுள்ளது. (கடவுளின் தூண்டுதல்)
30. இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பவன் ............. மீது தன் வீட்டைக்கட்டிய .................. ஒப்பானவன். (கற்பாறையின், அறிவாளிக்கு)
31. மகளே உன் ................ உன்னைக் குணமாக்கிற்று ............. போ. நீ நோய் நீங்கி நலமாயிரு. (விசுவாசம், அமைதியுடன்)
32. .................. உமக்கு நேரிடாது வாதை உம் ............... நெருங்காது. (தீங்கு, கூடாரத்தை)
33. உன் ................ அமைதி நிலவுவதாக. உன் மாளிகைகளில் நல்வாழ்வு இருப்பதாக. (கோட்டைக்குள்)
34. என் உள்ளத்தை ................ இரவு நேரத்தில் என்னைச் சந்தியும். (ஆய்ந்தறியும்)
35. "என் கண்முன் நில்லாதே ............... நீ எனக்குத் தடையாய் இருக்கிறாய். (சாத்தானே)
36. நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது ................ கேட்பதெல்லாம் பெற்றுக்கொள்வீர்கள். (நம்பிக்கையுடன்)
37. ............. நான்தான் அஞ்சாதீர்கள். (துணிவோடிருங்கள்)
38. ..................... என்னைக் கழுவியருளும் நான் தூய்மையாவேன், என்னைக் கழுவியருளும் ............. வெண்மையாவேன்." (ஈசோப்பினால், உறைபனியிலும்)
39. .............. கொல்ல இயலாமல், .................. மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். (ஆன்மாவைக் , உடலை)
40. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ................ அது நீடிய வாழ்வு தரும். (ஞானத்தின் ஆணிவேர்)

## புனிதர்களின் பாதையில் ......

09ஆம் பக்கத் தொடர்ச்சி

1726ல் திருத்தந்தை 13ம் பெனடிக்ட் இவருக்குப் புனிதர் பட்டம் அளித்தார். இரு திருத்தந்தையர்கள் இவரை இளைஞர்களின் பாதுகாவலர் என்று அழைக்கத் தயங்கவில்லை. புனிதராவதற்கு இந்த இளைஞர் தமது கோட்பாடாக, "நிகரில்லாத நித்திய சம்பாவனைக்குமுன் இந்த உலக மகிமை எம்மாத்திரம்!" என்று சொல்லிக்கொண்டே இருப்பாராம்.

இயேசு சபையில் புனிதராகவும், மறைவல்லுனராகவும் வாழ்ந்த புனித இராபர்ட் பெல்லார்மின்தான் இவருக்கு ஆன்ம குருவாய் இருந்தார். ஒருமுறை அலாய்சியுவிடம் இவர், "ஓர் ஆன்மா, உத்தரிக்கும் வேதனை அடையாமலேயே நேராக விண்ணகப் பேரின்பம் பெறமுடியும்" என்று கூறினார். இதைக் கேட்டதும் அலாய்சியு பரவசமடைந்தார். அந்த 8 நாட்களுக்குப் பின்னர் தாம் இறக்கப்போவதாக உணர்ந்தாராம். தூய ஆன்மாவை இறைவனிடம் கையளித்தார். அலாய்சியு தமது 23 ஆண்டுகால வாழ்வில் ஒருமுறைகூட சாவான பாவத்தில் விழுந்தவரல்வர் என்று அவரின் ஆன்மகுரு கூறுகின்றார்.

*சிந்தனைக்கு*

இன்றைய சமுதாயச் சூழ்நிலை அலாய்சியுவின் காலத்தைவிடப் மிக இழிவானது. கிரிக்கெட், தாழ்வான திரைப்படங்கள், குடிவெறி, கற்பழித்தல், கருவறுத்தல் முதலிய கொடுமைகளுக்கிடையே தம்மையே ஒறுத்துத் தியாக மனப்பான்மையுடன் இயேசுவுக்குத் தங்களையே அர்ப்பணிக்கும் இள உள்ளங்களை இன்று காண்போமா?

## புனித பூமிக்கான

01ஆம் பக்கத் தொடர்ச்சி

கடந்த 10.05.2014ம் திகதி முதல் 17.05.2014ம் திகதி வரையான இப்பயணத்தில் மன்னார் மறைமாவட்டத்திலிருந்து 09 பேர் யாத்திரிகர்களாக இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. மன்னார் மறைமாவட்ட குர்சில்லோ இயக்குனர் அருட்திரு. எஸ். கே. தேவராஜா அவர்களது வழிநடத்துதலில் இந்த ஆன்மீக வலுவூட்டல் பயணமானது முன்னெடுக்கப்பட்டது. தியான முன்னாயத்த ஒன்றுகூடலுடன் அமையப்பெற்ற இந்தப் புனித பயணமானது கிறீஸ்துவோடு ஒன்றுபட்டு பயணித்த உள்ளார்ந்த அனுபவத்தைத் தமக்கு பெற்றுக்கொடுத்ததாக இவர்கள் கூறுகின்றனர்.

இத்திருயாத்திரையில் பங்கெடுத்த மன்னார் மறைமாவட்ட விசுவாசிகள் விபரம் வருமாறு:

1. அருட்தந்தை எஸ். கே. தேவராஜா அடிகள்
2. திரு. தோமஸ் மரியதாஸ்
3. திரு. எஸ். கே. மரியநாயகம்
4. திருமதி. குயினி கிருபாகரன்
5. திரு. எஸ். எட்வேட்
6. திருமதி. வி. எட்வேட்
7. திருமதி. செ. ஜெயரட்ணம் அன்னமலர்
8. திரு. எ. அன்ரன்
9. திருமதி. ச. கொடுதோர் அன்னம்மா

இப்பயணமானது தடையின்றி நிறைவேற தமது செபங்களில் எம்மை நினைவுகூர்ந்த யாவர்க்கும் எம் நன்றிகள்.

**தகவல் : தலைவர், குர்சிலோ இயக்கம்.**

# உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 130

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் எரேமியாவின் புத்தகம் 23ம் அதிகாரத்திலிருந்து 32ம் அதிகாரம் வரையிலான பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

23ம் அதிகாரம் போலியான இறைவாக்கினரைக் குறித்தும் பொய்மைக்கு வழிநடத்தும் குருக்களைக் குறித்தும் பேசுகின்றது. போலியான தெய்வங்களை சிலைகளை வணங்குவதும் விபசாரத்தால் நிறைந்துள்ள சமுதாயப்போக்கை நினைத்தும் ஆண்டவர் அதிகமாகச் சினம்கொள்வதும் - அவற்றிற்கான தண்டனைகளை வழங்குவது குறித்தும்தான் எசாயாவின் புத்தகத்திலும் எரேமியாவின் புத்தகத்திலும் காண்கின்றோம்.

அதுபோன்ற ஒரு காலத்துக்குள்தான் நாம் தற்போது இழுத்துச் செல்லப்படுகின்றோமா? அதற்கு நம் நாகரிக யுகத்தின் நவீனசாதனங்கள் என எண்ணுகின்ற தொலைக்காட்சிப்பெட்டி வலைப்பின்னல் வசதிகள், சகல வசதிகளும் உள்ளடக்கப்பட்ட தொலைபேசிகள் காரணமாக அமைந்துவிடுகின்றனவா? என்ற வினாக்கள் நம்முன்னே பெரிதாக எழுந்து நிற்கின்றன.

இந்நாட்களிலே 20ம் நூற்றாண்டின் நிறைவுப் பகுதியிலும் 21ம் நூற்றாண்டின் உதயப் பகுதியிலும் நாம் அனுபவிக்கும் எத்தனையோ வகையான துன்பங்கள், அகதி வாழ்வு, சொத்துக்கள் சுகங்கள் பிடுங்கப்படுதல், காணாமல் ஆக்கப்படுதல் அதனால் மிஞ்சும் கண்ணீர்கள் - திணிக்கப்படும் வன்செயல்கள் - வன்முறைகள் - சித்திரவதைகள் இது போன்ற இன்னோரன்ன துன்பங்களுக்குக் காரணம் நாம் கொண்டிருக்கும் நவீன வாழ்க்கை சித்தாந்தங்களும் நடைமுறைகளுமா?

இவற்றை உறுதிபடத் தெரிந்துகொண்டால் மட்டும்தான் இதிலிருந்து விடுதலைக்கு உழைக்க முடியும்.

### இனி எமது வினாக்களுக்குள் வருவோம்.

01. "இதோ நாள்கள் வருகின்றன. அப்போது நான் தாவீதுக்கு ஒரு நீதியுள்ள தளிர் தோன்றச் செய்வேன். அவர் அரசராய் ஆட்சி செலுத்துவார். அவர் ஞானமுடன் செயல்படுவார் அவர் நாட்டில் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவார்." இங்கு குறிப்பிடப்படும் அவர் யார்?
02. கூடையிலிருந்த நல்ல அத்திப்பழங்களைப் போன்றவர்கள் யார்? எனக் கடவுளாகிய ஆண்டவர் கூறுகின்றார்.
03. எந்த நாட்டு எந்த மனிதனைக் கடவுள் தனது ஊழியன் எனக்குறிப்பிட்டு அவனை இஸ்ராயேல் மக்களுக்கு எதிராகக் கொண்டுவருவேன் எனக் கூறுகின்றார்.
04. ஆண்டவரின் இல்லத்தில்; நாடுகளுக்கு இறைவன் அளிக்கப்போகும் தண்டனைபற்றி; எரேமியா எடுத்துக் கூறியபோது; குருக்களும் இறைவாக்கினரும் மக்களும் அவரைப் பிடித்து 'நீ கண்டிப்பாய்ச் சாகவேண்டியவன்' எனக்கூறினர். இது எந்த மன்னன் காலத்தில் நிகழ்ந்தது.
05. என் மிகுந்த ஆற்றலோடும், ஓங்கிய புயத்தோடம் மண்ணுலகையும் அதில் வாழும் மனிதரையும் விலங்குகளையும் படைத்தது நானே. எனக்கு விருப்பமானவர்களிடம் அவற்றைக் கொடுப்பேன் எனக்கூறும் இறைவன் அதை யாரிடம் கொடுத்தார்?
06. எரேமியா இறைவாக்குரைத்த காலத்தில் தன்னையும் இறைவாக்குரைஞனாக அறிமுகம்செய்து எரேமியாவின் சாபத்தினால் இறந்தவர் யார்?
07. பபிலோனியாவில் அடிமைகளாக்கப்பட்ட யூதாவின் மக்களை எத்தனை ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் யூதாவுக்கு அழைத்து வருவேன் என்று படைகளின் ஆண்டவர் எரேமியாவின் வாயிலாகக் கூறுகிறார்?
08. எரேமியாவின் 30ம் அதிகாரம் இஸ்ராயேல் மக்களின் விடுதலை பற்றியும் அவர்கள் மீளக்கட்டியெழுப்பப்படுவது பற்றியும் கூறுவதோடு இறைவனுக்கும் யூதாவுக்கும் (மக்களினங்களுக்கும்) இடையிலான உடன்படிக்கை புதுப்பிக்கப்படுகிறது. அவ்வுடன்படிக்கை என்ன?
09. நீதியின் இருப்பிடமே தூய்மைமிகு மலையே! ஆண்டவர் உனக்கு ஆசீர் வழங்குவாராக! என்னும் வாழ்த்துரை யூதா நாட்டிலும் அதன் நகர்களிலும் மீண்டும் எதிரொலிக்கும். எப்போது?
10. ஆண்டவரே 'போற்றி, என் தலைவராகிய ஆண்டவரே! உம் மிகுந்த ஆற்றலாலும்: ஓங்கிய புயத்தாலும் விண்ணையும் மண்ணையும் படைத்தவர் நீரே. உமக்குக் கடினமானது எதுவும் இல்லை. ஆயிரமாயிரம் பேருக்கு நீர் அருளன்பு காட்டி வருகின்றீர். எனக் கூறும் எரேமியா ஆண்டவரிடம் கூறும் முறைப்பாடு என்ன?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 128 இற்கான கேள்விகளுக்கு 20 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. வே. லூட்ஸ் ஜெனிபர், விடத்தல்தீவு.
2. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
3. ம. தர்மிகா, இல - 109, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
4. ஜெ. றுமேஷினி, தி. கு. கன்னியர் விடுதிச்சாலை, மன்னார்.
5. செ. யூடித் வினுஷா, 3ம் வட்டாரம், கடற்கரைவீதி, பேசாலை.
6. ம. சுதர்சினி, உமநகரி, நானாட்டான்.
7. அ. அன்ரனி ஜெறோசன், பரிகாரிகண்டல், முருங்கன்.
8. அ. நிவேதிக்கா, புதுக்கமம், உயிலங்குளம்.
9. வி. வேஜின் டிலைக்சனா, 143 சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
10. ஜீ. ஜீவறொமா, பரிகாரிகண்டல், முருங்கன்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவை காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவு - படுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.143

## மத்தேயு 1 முதல் 14 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை யூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | 02 | ❖ |
| | | 03 | | 04 | | | | | |
| | | 05 | | 06 | 07 | | | | |
| | | | 08 | | | | | | |
| | | | | | | 09 | | | |
| | | 10 | | | 11 | | | 12 | 13 |
| | | | | 14 | | 15 | 16 | | |
| | | | 17 | | | | | | |
| | 18 | ❖ | | | | | | ❖ | |
| 19 | | | 20 | | | | | | 21 |

*உங்கள் விடைகளை, குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.*

*குறிப்பு : குறுக்கெழுத்துப்போட்டி விடைகளை அனுப்பும்போது மன்னாவில் உள்ள பெட்டியையோ அல்லது அதிலுள்ள இடைவெளிகளை நிரப்பியோ அனுப்பப்படும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதே போன்ற கட்டமைப்பை தயாரித்து விடைகளை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

### இடமிருந்து வலம்

1. "இவ்விடம் பாலைநிலம் ஆயிற்றே, .................... ஆகிவிட்டது.
4. நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் .......... செய்யமுடியாது.
7. இவர் மக்களினங்களுக்கு .................. அறிவிப்பார்.
8. '................ ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதுதான் முறை"
9. 'இதோ! நான் என் .................... உமக்குமுன் அனுப்புகிறேன்.
11. "எகிப்திலிருந்து என் மகனை அழைத்துவந்தேன்" என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் .................. நிறைவேறியது.
19. விண்மீன் தோன்றிய காலத்தைப்பற்றி விசாரித்து ................ செய்து கொண்டான்.

### வலமிருந்து இடம்

2. "மனம் ............ ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது.
3. கண் நலமாயிருந்தால் உங்கள் உடல் முழுவதும் .............. பெற்றிருக்கும்.
5. ஏனெனில் வேலையாள் தம் உணவுக்கு ............ உடையவரே.
8. .............. வாங்க விரும்புகிறவருக்கு முகம் கோணாதீர்கள்.
11. ............... கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம்.
14. 'தாவீதின்' ................, எங்களுக்கு இரங்கும்
17. "............ தான் உடலுக்கு விளக்கு.
21. பின்பு ............ உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்.

### மேலிருந்து கீழ்

1. அவர் கணவர் யோசேப்பு ..................
2. ............. விளக்குத் தண்டின்மீது வைப்பர்.
6. ............... மிகுந்த அமைதி உண்டாயிற்று.
8. இறந்தோரைப்பற்றி ................ வேண்டாம்.
11. உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் ............ இருக்கும்.
12. அவர் .................. இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையின்மேல் ஏறினார்.
14. ஆட்டைவிட ..................... எவ்வளவோ மேலானவர்.
15. உடனே அவரது ............... நீங்கியது.

### கீழிருந்து மேல்

8. அவரது விண்மீன் எழக் ...............
10. ................ உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை.
11. நீங்களே அவர்களுக்கு ............... கொடுங்கள்.
13. "மகளே, ........ உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன." என்றார்.
18. ............. மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர்.
19. ஏனெனில் குழந்தையின் .................... பறிக்கத் தேடியவர்கள். இறந்துபோனார்கள்." என்றார்.
20. ஏனெனில் நாளையக் கவலையைப் ....... நாளை வழிபிறக்கும்.
21. நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் ................ செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 141ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ச. அன்ரனிலா,
கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்.

**இரண்டாம் பரிசு:**
லோ. தர்சினி வாஸ்,
4ம் வட்டாரம், வங்காலை.

**மூன்றாம் பரிசு:**
செ. நிலா, 5ம் வட்டாரம்,
மண்டைதீவு, யாழ்ப்பாணம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 70 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 141ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப்பெறும் போட்டியாளர்கள்

1. ஜடா பற்றிக், மோர்சி பற்றிக், மெயின் வீதி, சின்னக்கடை, மன்னார்.
2. பி. கொன்சலஸ் குரூஸ், 6ம் வட்டாரம், வங்காலை.
3. அ. அமல்ராஜ், ஓலைத்தொடுவாய், பேசாலை.
4. நி. பிரியா, யோசப்வாஸ் வீதி குடியிருப்பு, செட்டிகுளம்.
5. யோ. ஆன் றுபினா, குஞ்சுக்குளம், மடுறோட்.
6. றொ. இவோன்ஷா, 4ம் வட்டாரம், பேசாலை.
7. கொ. ஜெயா பிறக்சி பீரிஸ், 6ம் வட்டாரம், வங்காலை.
8. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
9. கொ. டில்ஷானி குரூஸ், 6ம் வட்டாரம், வங்காலை.
10. வி. யூடித், ஆண்டான் செட்டிவெளி, அளவக்கை.
11. எம். மேரி ஜெசில்டா, இல-29B, 2ம்கு.தெ, பாசையூர், யாழ்ப்பாணம்.
12. யோ. டனியா, 4ம் வட்டாரம், மண்டைதீவு.
13. திருமதி. பிளன்டீனா, 34/9 க.மடவீதி, சின்னக்கடை, மன்னார்.
14. க. ஜெறாட், மத்தியூஸ், கள்ளிக்குளம், அடம்பன்.
15. திருமதி. இ. நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட். கு.யே.வீதி, பேசாலை.
16. தா. சங்கீதா, ஆத்திக்குளி, அளவக்கை.
17. அ. ஸ்டெலா மேரி, பழைய துட்டுவாகை, நேரியகுளம்.
18. கு. ஜான்சன், கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்.
19. திரு. சி. வின்சன் யோட்ஸ், சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
20. அ. அபிஷன், குஞ்சுக்குளம், மடுறோட்.
21. ர. மேரி கியூறியா, சவேரியார்புரம், சிலாவத்துறை.
22. ஜே. நிக்சன், வஞ்சியன்குளம், வங்காலை.
23. ஜெ. அமலநாயகி, பூலார்குடியிருப்பு, தலைமன்னார்.
24. எஸ். மேரி மெற்றில்டா குரூஸ், வெற்றிநாயகி கிராமம், பேசாலை.
25. கி. ஆன்ரியா, நெளுக்குளம், வவுனியா.
26. கே. றெபேக்கா ஏஞ்சலின், ஜீவபுரம், எமில்நகர், மன்னார்.
27. எஸ். கௌதம், குருமங்காடு, வவுனியா.
28. இசைக்கியேல் ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
29. எம். விவிலியா, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
30. கே. மேரி பிரபாளினி, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
31. ந. ஜனனி, 1ம் வட்டாரம், நாவற்காடு, முள்ளியவளை, முல்லைத்தீவு.
32. இ. ஸ்ரீபனா, களிமோட்டை, முருங்கன்.
33. ஆர். ரெறன்ஸ், எமில்நகர், மன்னார்.
34. வி. தனுசியா, பி.க.ம, இல- 250, தலைமன்னார் வீதி, சாவற்காடு.
35. என். ஜஸ்மின், பாடசாலை வீதி, முதலியார்குளம், செட்டிகுளம்.
36. செ. த. பெனில்டஸ் தற்குரூஸ், பருத்திப்பண்ணை, தலைமன்னார்.
37. செ. நிறோஜினி, வஞ்சியன்குளம், வங்காலை.
38. மு. லோகறூபி, இல - 250, சாவற்காடு, மன்னார்.
39. என். சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
40. ச. மேரி அஞ்சலா, கள்ளப்பாடு தெற்கு, முல்லைத்தீவு.
41. வி. எழில், அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை, மன்னார்.
42. மேரி பிலோமினா றோச், கிறிஸ்தோபர், 18.கோ.வீ.ஓ, யாழ்ப்பாணம்.
43. கனேஸ் தர்மிக்கா, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
44. வி. மேரி எனஸ்ரீனா, அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை.
45. ர. சுபதர்சிக்கா, நெடுங்கண்டல், அடம்பன்.
46. ப. சவன்னா, வஞ்சியன்குளம், கோவில் வீதி, வங்காலை.
47. ந. நவநீதன், பாடசாலை வீதி, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
48. த. ஜெனிக்கா டலிமா, தலைமன்னார் மேற்கு.
49. திருமதி. ரி.எஸ். லீலாவதி, இல.76/100, சாந்திபுரம், மன்னார்.
50. செ. றொமில்டா, வஞ்சியன்குளம், வங்காலை.

## இல.141இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ[01] | ண் | ட | வ | ர் | பு | ர | ம[02] | ழி | வ[03] |
| யி | க[04] | ட | ல் | த | ப் | கு | க் | சா[05] | வீ[06] |
| ர | தி | ம் | ❋ | தூ[07] | ரு | மி[08] | க | சே | மோ[09] |
| ம் | ர | கா | ரி | ப[10] | நெ[11] | ன் | ள் | கா[12] | தெ[13] |
| க | வ | ர | ஞா[14] | ன | ம் | ன | க | ல | ய் |
| க் | ன் | பி[15] | ன் | பு | ன | ல் | ர் | டி | வ |
| ர | மா | ஆ[16] | னீ | ர் | ஏ | க | க | க | ங் |
| இ[18] | தே[19] | பொ[20] | ன் | மு | டி | ள் | ட | ள் | க |
| ம[21] | ர | ம் | ற | ற் | தீ[22] | ழ் | பா[23] | ❋ | ள் |
| ந[24] | ன் | மை | து | மு[25] | க | ங் | க | ள் | கொ[26] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.142ற்கான முடிவுகளை 2014ம் ஆண்டு யூலை மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## யோசப்வாஸ் அடிகளார் ......

08ஆம் பக்கத் தொடர்ச்சி

நமது நாட்டின் திருத்தூதரான அடிகளாரின் வாழ்வு படிப்படியாக முடிவடைந்தது. அருட்தந்தை யாக்கோமே கொன்சால்வேஸ் சில நல்ல ஆசீர்வாதங்களைக் கூறுமாறு அருளாளரிடம் கேட்டார். அவர் சிங்களமொழியில் இவ்வாறு மொழிந்தார். "ஒருவர் தமது வாழ்நாளில் செய்யாமல் தவிர்த்துக்கொண்டதை இறக்கும் தறுவாயில் செய்யமுடியாது." அதன்பின் மெழுகுவர்த்தி கொழுத்திவைக்கும்படி கேட்டார். தொடர்ந்து விசுவாசம், நம்பிக்கை, அன்பு பற்றி அறிக்கையிட்டார். ஒரு சிலுவையைத் தனது கையில் இறுகப்பிடித்தவராக சில நிமிடங்கள் மௌனமாக செபித்தார். நடுச்சாமவேளை எதுவித துன்பங்களுக்குமான அடையாளம் இல்லாமல் தனது ஆவியைத் தந்தையாகிய இறைவனுக்குக் கையளித்தார்.

### அம்பிட்டியா

கண்டி தேசிய குருமடத்திற்கு அருகாமையில் ஒரு சிறிய குன்றில் அருளாளருக்குத் திருத்தலமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அவரது புனித பண்டங்கள் ஆசீர்வதிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

### முடிவுரை

நாம் எல்லோரும் வாஞ்சையோடும் நம்பிக்கையோடும் விடாமுயற்சியோடும் செபிக்கக் கடமைப்பட்டவர்களாக உள்ளோம். எமது மூதாதயரின் விசுவாசத்தைத் தூண்டியெழுப்பிக் கட்டிக்காத்த அருளாளர் யோசப்வாஸ் அடிகளார் புனிதர் என்ற நிலைக்கு உயர்த்தப்படுவதன் மூலம் உலகத்திருச்சபையின் விசுவாசமும் கட்டிக்காக்கப்பட்டு, உலகத் திருச்சபை முழுவதும் மூவொரு இறைவனில் விசுவாசம்கொள்ள அருளாளரின் பரிந்துரை நிறைவாக வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

*அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரே, உமக்கு நாம் நன்றி கூறுகின்றோம். உமது அழகான இளமைக் குருத்துவ வாழ்வை தொலைந்துபோன கத்தோலிக்கர்களான எமது மூதாதையரைத் தேடிவந்து அர்ப்பணித்ததற்காக எப்போதும் நன்றியுடையவர்களாக இருப்போம். உமது கரங்களின் வழியாக இறைவன் எமது நாட்டை ஆசிர்வதித்துள்ளார். (முற்றும்)*

## உலகக் கிறிஸ்தவ தமிழ் மாநாடு .....

16ஆம் பக்கத் தொடர்ச்சி

இம்மாநாட்டில் கலந்துகொள்ள விரும்புகின்றவர்கள் யூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் htt://www.wctc.lk என்ற இணையத்தளத்தினூடாகப் பதிவுசெய்யலாம். இம்மாநாட்டில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்க விரும்புகின்றவர்கள் யூன் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் wctcsrilanka@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவேண்டும். தங்குமிட வசதிகள் தேவைப்படுவோர் 0777959905 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்புகொள்ளலாம்.

இம்மாநாட்டின் நோக்கம், ஆய்வுக்கட்டுரைத் தலைப்புக்கள் போன்ற விரிவான விளக்கங்களை அறிந்துகொள்ள விரும்புவோர் இது தொடர்பான துண்டுப்பிரசுரத்தை மன்னார் கலையருவியில் பெற்றுக்கொள்ளலாம்.

## மன்னார் சிறிய குருமட வெள்ளிவிழா

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த யூபிலி விழாவை முன்னிட்டு ஓகஸ்ட் மாதம் 30ஆம் 31ஆம் திகதிகளில் 'அழைத்தல் கண்காட்சி' ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பங்குகளினதும், துறவற சபைகளினதும் ஒத்துழைப்போடு இக்கண்காட்சி நடத்தப்படும். யூபிலி விழாவை முன்னிட்டு சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்படும். இதற்கான பூர்வாங்க ஆயத்தங்கள் இடம்பெற்றுவருகின்றன.

மன்னார் மறைமாவட்டம் 1981ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு எட்டு ஆண்டுகளின் பின்னர் இச்சிறிய குருமடம் அருட்பணியாளர் ஏ. சேவியர் குரூஸ் அடிகளாரை அதிபராகக்கொண்டு மன்னார் வைத்தியசாலை வீதிக்கு அருகாமையில் உள்ள – தற்போது அன்பிய ஆணைக்குழு இயங்கும் - கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சேவியர் குரூஸ் அடிகளாரைத் தொடர்ந்து அருட்பணியாளர்கள் ஏ. இராயப்பு, எஸ். கே. தேவராஜா, பி. யேசுராஜா ஆகியோர் அதிபர்களாகப் பணியாற்றியுள்ளனர். 2007ஆம் ஆண்டுதொடக்கம் இன்றுவரை அருட்பணியாளர் சேவியர் குரூஸ் அடிகளார் மீண்டும் அதிபராகப் பொறுப்பேற்று இன்றுவரை பணியாற்றிவருகின்றார்.

மன்னார் மறைமாவட்டத்திற்கு குருக்களை உருவாக்கித்தரும் ஆரம்ப உருவாக்கற் தளமாக விளங்கும் இக்குருமடத்தில் பயிற்சியைப் பெற்ற பல குருக்கள் இன்று மறைமாவட்டத்தில் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றனர். இறைவன் அருளும் அழைத்தல்களுக்கு நன்றிசொல்லும் சந்தர்ப்பமாக இந்த யூபிலி விழா அமைகின்றது என இவிழா தொடர்பாக மன்னாவுக்கு கருத்துத்தெரிவித்த சேவியர் குரூஸ் அடிகளார் தெரிவித்தார்.

## அதிர்வுகள் ..........

10ஆம் பக்கத் தொடர்ச்சி

### 'இதுகள்' எவ்வாறு உருப்படும்!

ஓர் ஆசிரியர் தன் வகுப்பு மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்: "பிள்ளைகளே! உங்களோடு ஒரு முக்கியமான அனுபவத்தை நான் பகிர்ந்துகொள்ள வேண்டும். அது என்னவென்றால், இதே பாடசாலையில படிச்சி, இதே பாடசாலையில பரீட்சை எழுதி, இப்ப, இதே பாடசாலையில ஆசிரியராகப் பணியாற்றுகிறேன் என்றால் பாத்துக் கொள்ளுங்களேன்!" என்றாராம் பெருமையோடு. அவர் கூறிமுடிந்ததும் மாணவன் ஒருவன், "சேர், இந்தப் பாடசாலையில படிச்சா வேற இடத்தில வேல தரமாட்டாங்க என்று, எங்கட அப்பாட்ட அப்பவே திரும்பத் திரும்ப சொன்னன் சேர், கேட்டாரா அவரு! இப்ப, உங்க நிலமதான் எனக்கும்!" என்றானாம் மிக உறுதியாக! ஓர் ஆசிரியர் கொஞ்ச மாதங்களுக்கு முன் தற்கொலை செய்ய முயற்சித்ததாக ஏதோ ஒரு பத்திரிகையில் படித்த ஞாபகம் இருக்கிறது! அதற்கான காரணம் இப்போதுதான் புரிகிறது!

(அதிர்வுகள் தொ......ட...ரு....ம் கருத்துக்களுக்கு :anpuomi@yahoo.com)

ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்
காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம் -
பதிப்பாசிரியர்

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 06 1952



உதிர்வு 19 06 2013

### திரு. பறுனாந்து டோமினிக் (ராசக்கோன்)

(கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்)

*"இறைவா என்னைக் காத்தருளும். உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்"*

எம் அன்புத் தந்தையே!
ஆண்டொன்று ஆனபோதும் எம் துயரம் ஆறவில்லை.
உங்கள் முகத்தினை இனி எப்போ காண்போமப்பா?
உங்கள் முகம் தேடி ஏங்கித் தவிக்கின்றோம்.
அல்லும் பகலும் பாராமல் உழைத்து
எம்மைப் பண்பாய் வளர்த்த கருணை உள்ளம் கொண்டவரே,
காலம் சதிசெய்து உம்மைக் கவர்ந்து சென்றதே.
நினைத்தாலே நெஞ்சம் வெடிக்குதப்பா!
உம் நினைவுகளை எண்ணி எண்ணி
பிள்ளைகள் நாம் வேதனையில் தவிக்கின்றோம்.
உடலால் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உள்ளத்தாலும், உணர்வாலும் என்றும் எம்முள் வாழ்கின்றீர்.
உம் ஆன்ம சாந்திக்காக இறைவனிடம் இரஞ்சுகின்றோம்.

***உம் பிரிவால் துயருறும் :***
***மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.***

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 02 1962



உதிர்வு 07 06 2013

### திரு. அருளப்பு ஆபிரகாம் (றெஜி)

(பற்றிமா நகர், ஓமந்தை, வவுனியா)

ஆண்டொன்று ஆனதுவே அப்பா!
உங்கள் பிரிவை நம்பவே முடியவில்லை!

இல்லறமும் நல்லறமாய் வாழ்ந்தீர்
அன்பினிலே ஒளிவிளக்காய்த் திகழ்ந்தீர்
அன்பும் அரவணைப்பும் எமக்குத் தந்தீர்
எம்மைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்?
உங்கள் நினைவாய் வாழுகின்றோம்
ஒருநாள் உங்களைச் சந்திப்போம்.

உம் ஆன்ம சாந்திக்காய்
அனுதினமும் செபிக்கின்றோம்.

***உம் பிரிவால் துயருறும் :***
***மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார் உறவினர்கள்.***

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 01 1930



உதிர்வு 13 06 2011

### திரு. பேதுரு வேதநாயகம்

(சூரியகட்டைக்காடு, நானாட்டான்)

ஆண்டுகள் மூன்று உருண்டோடினும் - எம்
இதயக் குமுறல்கள் இன்னும் ஓயவில்லை.
காலத்தின் கொடுமையா இது
இல்லைக் கடவுளின் விதியா இது?
அப்பா உம் முகத்தைத் தேடுகின்றோம்
அனுதினமும் உம்மை நாடுகின்றோம்.
எப்போது நாம் உம்மைக் காண்பது?
ஏங்கியே நிற்கின்றோம் உம் நினைவாய்.
உங்கள் ஆன்மா இறைவனின் கைகளில்
மகிழ்ந்திருக்க இறைவனை இரஞ்சுகின்றோம்.

***உங்கள் நினைவில் :***
***மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்,***

# திருநிலைப்படுத்தப்படவுள்ள
# புதிய குருக்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

### அருட்பணி. மரியதாசன் டிலோசன் றஜீவ்

அமலமரித் தியாகிகள் சபையின் யாழ் மாகாணத்தைச் சேர்ந்த இவர் யாழ்ப்பாணம் சுண்டிக்குழிப் பங்கு, சுண்டிக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. டேவிற் மரியதாசன், பற்றிமா றஞ்சினி தம்பதிகளின் புதல்வனாக 09.11.1982இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை றோ.க. ஆண்கள் ஆரம்பப் பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.

அருட்தந்தை எட்வின் வசந்தராசா (அமதி) அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், கொழும்புத்துறை புனித வளனார் அமதிகள் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்பக் குருத்துவ உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து யாழ்ப்பாணம் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

09.12.2013 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் வங்காலை, தலைமன்னார் ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை ஆற்றினார்.

இவர் தனது முதல் திருப்பலியை 29.06.2014 அன்று காலை 6.00 மணிக்கு யாழ் சுண்டிக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### அருட்பணி. தேவசகாயம் யேசுபாலன்

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த இவர், பூநகரி, இரணைதீவு கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் முழங்காவில் பங்கு, இரணைமாதா நகர் செபமாலை மாதா ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. அமிர்தநாதன் தேவசகாயம், செபமாலை மரிய விமலா தம்பதிகளின் புதல்வனாக 31.12.1981இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை இரணைதீவு றோ.க.த.க. பாடசாலையிலும், உயர் கல்வியை முழங்காவில் மகா வித்தியாலயத்திலும் நிறைவுசெய்தார்.

அருட்பணி. ஆர். எக்ஸ். ஜேம்ஸ் மற்றும் அருட்பணி. அற்புதராஜ் (அமதி) ஆகியோரினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித வளனார் அமதிகள் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்பக் குருத்துவ உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து யாழ்ப்பாணம் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

09.12.2013 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயம் மற்றும் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம் ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை நிறைவுசெய்தார்.

இவர் தனது முதல் திருப்பலியை 30.06.2014 அன்று காலை 9.00 மணிக்கு இரணைமாதா நகர் செபமாலை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### அருட்பணி. அன்ரனி மைக் டொனால்ட்

யாழ்ப்பாண மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர், யாழ்ப்பாணம் குருநகர் புனித இயாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. தோமஸ் அன்ரனி, கிறிசாந்து பதல்டா தம்பதிகளின் புதல்வனாக 28.12.1984 இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/ புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணி. ஆர். எம். ஜி. நேசநாயகம் அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், புனித மடுத்தினார் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்பக் குருத்துவ உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் யாழ். புனித சவேரியார் உயர் குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து உரோமையில் உள்ள மரியா மாற்றர் எக்ளேசியா (Rome Maria Mater Ecclesiae) கல்லூரியில் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

14.11.2013 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர், பருத்தித்துறைப் பங்கில் தனது திருத்தொண்டர் பணியை நிறைவுசெய்தார்.

இவர் தனது முதல் திருப்பலியை 28.06.2014 அன்று காலை 9.30 மணிக்கு குருநகர் புனித இயாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### முதல் தமிழ் கர்தினால் ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

யூன் 5ஆம் திகதி வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் கர்தினால்குழுத் தலைவரின் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் இறுதியில் திருத்தந்தை பிரான்சிஸ் இறுதிச் செபத்தைச் செபித்தார்.

பின்னர் கர்தினாலின் உடல் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டு புதுச்சேரி கடலூர் மறைமாவட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவருடைய இறப்புக்கு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா இரங்கல் தெரிவித்துள்ளார்.

இவருடைய இறப்போடு மொத்தக் கர்தினால்களின் எண்ணிக்கை 214ஆகக் குறைவடைகின்றது. திருத்தந்தையைத் தேர்வுசெய்யும் கர்தினால்களின் தொகை 118ஆக உள்ளது.

### மாவட்டமட்ட பொது அறிவு .....

2ஆம் பக்கத் தொடர்ச்சி

போட்டியில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் போட்டியில் அதிகூடிய புள்ளி (108) பெற்றுள்ள மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவன் செல்வன். ப. பெற்சன் மத்தியூ என்பவருக்கு பணப்பரிசிலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. S. அருந்தவராஜன் சில்வா அவர்களின் முயற்சியில் வினாக்கள் தயார்செய்யப்பட்டன. இப்போட்டிக்கான நிதியுதவியினை நானாட்டான் பிரதேச மட்ட கிராம அபிவிருத்தி அமைப்புக்களும் வேல்ட் விஷன், சேவா லங்கா மற்றும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் ஆகியனவும் வழங்கியிருந்தன.

மாவட்ட செயலகம் உட்பட்ட அனைத்துப் பிரதேச செயலகங்களின் பதவிநிலை அலுவலர்களுடன் நானாட்டான் பிரதேசச் செயலக அலுவலர்களின் பூரண ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இப்போட்டியின் ஒருங்கிணைப்பாளரும் நிர்வாக அலுவலருமான திரு. எஸ். சூசைநாயகம் றெவல் நன்றியுரையினை வழங்கினார்.

**தகவல் : திரு. எஸ். சூசைநாயகம் றெவல்,**
**நிர்வாக அலுவலகர்.**

### மன்னார் மறைமாவட்டத்தில் ...

3ஆம் பக்கத் தொடர்ச்சி

இவர்கள் மன்னார் மறைமாவட்டத்தின் இவ்வாண்டுக்கான மேய்ப்புப்பணிக் கருப்பொருளாகிய 'மனித மாண்பும் குடும்ப வாழ்வும்' என்ற கருத்தை மையப்படுத்தி பல்வேறு இடங்களில் வழிபாடுகளை, தியானங்களை நடாத்தினர்.

கற்கிடந்தகுளம், இசைமாலைத்தாழ்வு, செட்டியார் மகன் கட்டையடம்பன், மடுறோட் கட்டையடம்பன், முத்தரிப்புத்துறை, கயாக்குழி (முள்ளிக்குளம்), கீளியன்குடியிருப்பு, பேசாலை, தோட்டவெளி தியான இல்லம், பள்ளிமுனை, ஆயர் இல்லம் (குருக்களுக்கான தியானம்), மன்னார் பேராலயம், செட்டிகுளம், முருங்கன் டொண் பொஸ்கோ மாணவர் இல்லம், பண்டிவிரிச்சான் ஆகிய இடங்களில் இக்குழுவினர் வழிபாடுகளை, தியானங்களை நடத்தியுள்ளனர்.

### தேசிய பொதுநிலையினர் ஞாயிறு .....

7ஆம் பக்கத் தொடர்ச்சி

அண்மைக் காலமாக பாப்பரசர் பிரான்சிஸ் ஏழை எளியவரைக் கசக்கிப்பிழியும் பொருளாதார முறைகளுக்கெதிராக நீதியின் குரலாய் ஒலித்துக்கொண்டிருக்கின்றார். ஒருவனுக்கு அதிகாரம் வருவது உலகச் செல்வங்களால் அல்ல, மாறாக பணிவிடையுடன்கூடிய தாழ்ச்சியாலே என அவர் உலகிற்கு என்பித்து வருகின்றார். அத்துடன் ஒவ்வொருவரும் இயல்பாகவே தம்மைத் தாழ்த்தி அடிமைநிலை பூண்டு மற்றவரின் கால்களைக் கழுவுவதற்கு முன்வந்து இயேசுவின் மனநிலையைக் கைக்கொள்ளவும் பணிக்கின்றார். இன்று பொதுநிலையினர் சந்திக்கும் சவால்கள் உள்ளார்ந்த, வெளியார்ந்த ரீதியாக உள்ளன. எனவே நாம் உலகத்தை வெற்றிகொண்ட இயேசுவோடு இணைந்து, துணிவுடன் எமது தேசத்தில், சமுதாயத்தில் உள்ள தீமைகளை வெல்ல முன்வருவோம். அத்துடன் எம்மிலே உள்ள பாவத்தின் காரணிகளையும் மாயக் கவர்ச்சிகளையும் தோற்கடித்து பரிசுத்த பாப்பரசரைப்போல தன்னலமற்ற சேவையின் மூலம் பிளவுபட்ட எமது நாட்டில் ஒப்புரவின் கருவிகளாவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

## இணைபிரியா இல்லற வாழ்வில் 25வது ஆண்டு நிறைவு விழா



21.06.1989 - 21.06.2014

### திரு. திருமதி. ப. தேவராசா, பற்றிமா (சுமதி)

(புனித இயாகப்பர் கோவிலடி, முருங்கன்.)

வாழ்க வளமுடன் என்று
மன அக்களிப்புடன் வாழ்த்துகின்றோம்
அன்புப் பிள்ளைகள் நாம்.

ஆண்டவரின் ஆசிபெற்று இருவரும்
இனிமையுடன் இன்புற்று வாழ வேண்டுகிறோம்
அன்னை மரியிடம்.

அன்பிய இல்லத்தில் தேவ சுமதியாக
உருவெடுத்த எம் பெற்றோருக்கு
அண்ணல் பாதம் பணிந்து முத்தாய் ஈர்ந்த
முத்துக்கள் மூவராய் முத்தமிழ் வாழ்த்துக்கள்
கூறி ஆசித்து நிற்கின்றோம் பண்புடனும்
பணிவுடனும் பிள்ளைகள் நாம்.

பிள்ளைகள் : றஜீவன், தீபன், டிலோஷன்.

## இணைபிரியா இல்லற வாழ்வில் 50வது ஆண்டு நிறைவு விழா



13.06.1964 - 13.06.2014

### திரு. திருமதி. பாக்கியம் பச்சேக், கிறிஸ்பி பறுனாந்து

(8ம் வட்டாரம், பேசாலை.)

என் பார்வையில் நீ விலையுயர்ந்தவன். மதிப்பு மிக்கவன். நான் உன்மேல் அன்புகூர்கின்றேன். (எசாயா.43:4)

மகிழ்வுறு மக்கள் சுற்றம் சேரும்
இகபர இன்பம் வந்து கூடும்
சுடர்மிகு வண்ணம் ஐபத்தகவையை
இடர்பல வென்று வாழ்ந்தவர் நீரே!

பாக்கிய மாவது பாங்கிசையாகி
பண்புறு மக்கள் நால்வரையீன்றீர்
பால்முகம் கொண்டதும் பேரர்கள் சூழ
மாபரன் யேசுவின் அன்பினைச் சூடுவீர்!

அன்புடன் வாழ்த்துவோர் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## மடு யூலைத் திருவிழா




மடுத்திருப்பதியின் யூலைத் திருவிழாவுக்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன. யூன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் யூலைத் திருவிழா ஆரம்பித்துவைக்கப்படும். யூலை 1ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு நற்கருணை ஆராதனையும், 2ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.

இவ்விழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மடுப்பரிபாலகர் அருட்பணியாளர். எஸ். எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தலைமையில் மன்னார் மறைமாவட்டக் குருக்களின் ஒத்துழைப்போடு இடம்பெற்று வருகின்றன.

## மன்னார் மறைமாவட்டத்திற்கான இணையத் தளம்!

### புதிய மெருகுடன் மீளுருவாக்கம்

மன்னார் மறைமாவட்டத்திற்கான இணையத்தளம் மீளுருவாக்கம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. mannardiocese.net என்ற பெயருடன் விளங்கும் இவ்விணையத்தளத்தினுள் மன்னார் மறைமாவட்டம் தொடர்பான பல அரிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

மன்னார் மறைமாவட்டத்தின் முக்கிய செய்திகள், நிகழ்வுகள், மறைமாவட்டத்தின் நிர்வாகக் கட்டமைப்பு, மன்னார் ஆயர், மறைமாவட்ட வரலாறு, மன்னார் வேதசாட்சிகள் வரலாறு, மடுத்திருப்பதியின் வரலாறு, இறையடி சேர்ந்த மன்னார் குருக்கள் பற்றிய தகவல்கள், மன்னார் மறைமாவட்டக் குருக்கள், மறைமாவட்டத்தில் பணியாற்றும் துறவறசபைக் குருக்கள், மறைமாவட்டத்தில் உள்ள கன்னியர் இல்லங்கள், அருட்சகோதரர்கள் பற்றிய விபரங்கள், மறைமாவட்ட ஆணைக்குழுக்கள், நிறுவனங்கள் பற்றிய தகவல்கள், மறை மாவட்டப் பத்திரிகையான 'மன்னா' பத்திரிகையின் ஒவ்வொரு மாத முன்பக்கச் செய்திகள் என பல விபரங்களை உள்ளடக்கியதாக இந்த இணையத்தளம் மீளுருவாக்கப்பட்டுள்ளது.

மன்னார் மறைமாவட்டச் சமூகத்தொடர்பு அருட்பணி மையமாகிய கலையருவியினால் இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிறிஸ்தவ தமிழ் மாநாடு – 2014

உலகக் கிறிஸ்தவத் தமிழ் மாநாடு – 2014 இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதிவரை கண்டியில் நடைபெறவுள்ளது. உலகக் கிறிஸ்தவ தமிழ்ப் பேரவையினால் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்படுகின்றது. உலகின் பல்வேறு நாடுகளில் இதுவரை நடைபெற்றுவந்துள்ள இம்மாநாடு முதன்முறையாக இம்முறை இலங்கையில் இடம்பெறுகிறது. இது எட்டாவது மாநாடு என்பது குறிப்பிடத்தக்கது.

கண்டியில் உள்ள பொல்கொல்ல என்னும் இடத்தில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தில் இடம்பெறும் இந்நான்கு நாள் மாநாட்டின் கருப்பொருள் "திருச்சபையும் சமூகப்பணியும்" என்பதாகும். இம்மாநாட்டில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வளவாளர்கள், அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் கலந்துகொள்கின்றனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## நீங்காத நினைவுகள்

### 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 02 07 1946 — உதிர்வு 20 05 2014



#### திரு. எலியாஸ் செபமாலை பிகிறாடோ (சம்மாட்டி)

(பள்ளிமுனை, மன்னார்.)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடத்தில் நம்பிக்கைகொள்பவன் இறப்பினும் வாழ்வான். (யோவான் 11:35)


மண்ணுலகக் கூடாரத்தைவிட்டு
விண்ணுலகில் நிலையான வீட்டை அடைந்திட்ட அப்பாவே!
உங்கள் அன்புமுகம் எம்மைவிட்டு மறையாது.
உங்கள் பாசம் எம்மைவிட்டு விலகாது.
தந்தையாய், நண்பனாய், நல்வழிகாட்டியாய்
பண்போடு எம்மை வளர்த்தீர்கள் அப்பா!

மறவோம் நாம் ஒருபோதும் உம் பாசப்பிணைப்பை.
வாழ்ந்திடுவோம் என்றும் நீர் காட்டிய நல்வழிதனில்.
இறைவனில் நீவீர் அமைதியாய் துயில்கொள்ள
இறைஞ்சுகின்றோம் இறைவனை.

,thpd; gphpthy; JaUWk; :
md;G kidtp> ghrk; epiw gps;isfs;> kUkfd;> kUkf;fs;>

### விண்ணுலக வாழ்வில் 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 17 06 1939 — உதிர்வு 02 05 2014



#### திரு. பெஞ்சமின் அமிர்தநாதன் (விமலதாஸ்)

"ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர்"

எங்கள் அப்பாவின் மரணச்செய்தி கேட்டு நேரிலும், சகல தொடர்புகள் மூலமும் எமது துன்பத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

உங்கள் ஆன்மா இறைவனிடத்தில்
அமைதியடைய தினமும் வேண்டி நிற்கும் :
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மன்னார்.

### 04ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 08 1995 — உதிர்வு 11 06 2010



#### நீ. கனிலன்

(சிறுக்கண்டல், முருங்கன்.)

"நேர்மையுள்ளோர் உம் திருமுன் வாழ்வார்" (தி.பா. 141:13)

மன்னா பத்திரிகை விநியோகித்த கனிலன்
மன்னா பத்திரிகையில் உனக்கு
நான்காவது வருட நினைவஞ்சலியா!!!
நினைவு நாளன்றே ஊரில் ஆலயத் திருவிழா!!!
"பேப்பர் பெடியன் வாறான்" என்று
பகிடிக்கதை கூறிக்கொண்டு
ஒவ்வொரு வீட்டுப் படலையையும்
தட்டும் புறா வடிவமான சமாதானத் தூதுவனே!
போகும் பயணம் எங்கே என்று
God Bless You, Good bye
சொல்லிப் போனவன் நீ ஒருவன்தானே!!!

உம் பிரிவால் துயருறும் :-
அம்மா, அப்பா, அண்ணன், உறவினர்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org